
சிவசங்கரி
தோழிகள்

# கோழைகள்

சிவசங்கரி

கங்கை புத்தக நிலையம்

13, தீனதயாளு தெரு

தி. நகர், சென்னை-17.

முதற்பதிப்பு : அக்டோபர் 1982
இரண்டாம் பதிப்பு : (கங்கை) 1991
உரிமை பதிவு பெற்றது.

விலை : ரூ. MAXIMUM RETAIL PRICE INCLUSIVE OF ALL TAXES 25/-

அச்சிட்டோர் : குருகுலம் பிரிண்டர்ஸ், வேதாரண்யம்.

### முதற்பதிப்பு
## பதிப்புரை

சிவசங்கரியின் நூல்களைப்பற்றி 'சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டிய நிலையில்' வாசகர்கள் இல்லை. சிவசங்கரி நாவல் என்றாலே போதும்.

இன்றைய இந்து சமூகம் மாறி, பண்பட்டு சமூகத்தின் பெயரால் இடைக்காலத்தில் படிந்திருந்த கறைகளைக் களைந்து, புத்தொளி பெற்று, பழமையின் மேன்மையையும், புதுமையின் நல்ல அம்சங்களையும் உட்கொண்டு சிறந்திருக்கிறது.

ஆனால்...

ஐம்பது வருடங்களுக்கு முன்...

எத்தனையோ அம்புலுக்கள் பாரதத்தில் பாவாடை கட்டத் தெரியாத பருவத்திலேயே தாலியைக் கட்டிக் கொண்டு, அரும்பெடுத்து மலரும் முன் அடிமரம் பட்டு, கைமை ஏற்று அமங்கலத்தின் அடையாளமாகப் பெருமூச்செறிந்தபடி வாழ்ந்தார்களா?—இல்லை உயிர் மூச்சைப் பிடித்துக் கொண்டு ஓடாக உழைத்தார்கள்!

அம்புலு தம்பியை வளர்த்தாள், மகனை! தாயினும் மேலாக மதித்தான் அம்பி. ஆனால் என்ன இருந்தாலும் அவன் குடும்பம்—பிள்ளைகள் வேறு தானே! முதிய வயதில் அவள் குணத்தின் இனிப்பு உடலில் ஏறி, கண்ணும் கெட்ட பிறகு அம்புலு அம்பிக்குப் பாரமானாள். இனி அவளுக்கு **விமோசனம்?**

Weaker-Sex என்று பெண்களைச் சொல்வார்கள். பலமற்றவர்கள் (அ-பலா, அபலைகள்) என்று.

ஆனால் சில குடும்பங்களில் ஆண்தான் அபலன்; கோழை.

மனைவிக்குப் பயந்து, மகள்களுக்குப் பயந்து, மனச் சாட்சிக்குப் பயப்பட முடியாமல் சேஷன் வாழும் வாழ்க்கை! 'இனி யொரு பிறவி வேண்டேன்' என்று கண்ணீர் வடித்துக் கசிந்துருகலாம்.

புத்தகத்தின் தலைப்பை ஏற்கும் 'கோழைக'ளும் தலைமை ஏற்கும் 'விமோசன'மும் சிந்திக்கவைக்கும் சொற்சித்திரங்கள்

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்

# விமோசனம்

## 1928

"அம்புலூ...ஊ..."

திண்ணையில் நின்று சித்தி குரல் கொடுத்தது காதில் விழாத அளவுக்கு அம்புலுவின் கவனம் பாண்டியில் இருந்தது.

ஏரோப்ளேன் பாண்டி,

பழம் எடுக்கும் தருவாய்,

சில்லியை எறிந்து, 'சரியா? சரியா' என்றுகேட்டபடி கண்களை மூடிக் கொண்டு, கட்டக் கோடுகளில் கால் படாமல் குதித்து, கடந்து, திரும்பிப் பார்க்காமல் பக்குவமாய் சில்லியை ஒரு கட்டத்தில் விழும்படி தூக்கிப்போட்டு விட்டால், அந்தக் கட்டம் அவளுடைய சொத்தாகிவிடும்.

அப்புறம் லல்லியையும், ஜகதாவையும், 'ஏய்—தாண்டிப்போங்க...என் பழத்துலே கால் பட்டுதுன்னு

ஆட்டம் போயிடும்—ஆமா—சொல்லிட்டேன்' என்று உட்கார்ந்தபடி விரட்டலாம்.

"அம்புலூ......ஊ......"

சில்லியை எறிந்து விட்டு, தலையை அண்ணாந்திய படி அம்புலு 'சரியா, சரியா?' என்று கேட்க ஆரம்பிக்க, பொறுக்க முடியாமல் சித்தி இறங்கி வந்து பாண்டி கட்டத்தின் மேலேயே நின்று அவள் தோளைப் பற்றி "என்ன......ஒன்னை நாழியா கத்தறேனே, காதில விழலே?" என்று அதட்டினாள்.

தலையைக் குனியாமலேயே அம்புலு பேசினாள்— "தள்ளிக்கோ சித்தி—நா பழம் எடுக்கப் போறேன்— ஒரு நிமிஷத்துலே முடிச்சுடுவேன்"—

"பழமும் ஆச்சு, காயும் ஆச்சு, உள்ள வாடி. உங்கப்பா உன்னை கூப்பிடறார். உனக்கு கல்யாணமாகப் போறதுடீ...தேதி குறிச்சுட்டா..."

சித்தி சொன்ன சேதியைக் கேட்டு சின்னதாக அம்புலு கண்களை விரித்தாள்.

கல்யாணமா?

எனக்கா?

போன மாசம் அம்மணிக்கு நடந்த மாதிரியே நாலு நாள் கல்யாணமா?

ஹை—

புது பாவாடை—

புதுசு புதுசாய் நகை......

கேட்ட போதெல்லாம் வகை வகையாய் பட்சணங்கள்...



அப்புறம்—சாரட் வண்டியில் ஊர்கோலம் கூட்டி விடுவார்களே!

அம்புலு சந்தோஷத்தோடு சிநேகிதிகளைப் பார்த்தாள்.

"நா வரலை...நீங்க வேணா விளையாடுங்கோ"— பேசியவள் சித்தியின் கையைப் பற்றிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தாள்.

சிகப்பு சிமிண்ட் பூசி வழவழவென்று பக்கத்துக்கு ஒன்றாக திண்ணையுடன் கூடிய வாசக் கட்டைத் தாண்டினால் நடை. அதை ஒட்டி திறந்த முற்றம். நாலு பக்கமும் தாழ்வாரங்கள். உயரமும் பருமனுமாய் நிற்கும் தூண்கள். அந்தப் பக்கம் ரூன் அறை. அதில் நெல் பத்தாயம், அலமாரி. உயரமான ஒரு கட்டில் இத்தனையும் இருக்கும். தாழ்வாரத்திலிருந்து சமயல் கட்டுக்கு ஒரு கதவு; புழக்கடைக்கு ஒரு கதவு

சிறுத்து ஒடுங்கி இல்லாமல் பரந்து விரிந்திருந்த தாழ்வாரத்தின் ஒரு பகுதியில் உத்திரக்கட்டையிலிருந்து தொங்கிய ஊஞ்சலில் அப்பா உட்கார்ந்திருந்தார். பக்கத்தில் ஊர் ஜோஸியரான ஸ்ரௌதிகள். எதிரில் சித்தப்பா, மாமா. தூணில் சாய்ந்து நின்று கொண்டு அத்தை, சித்தி, அம்மா......

"அப்ப, நாளை எட்டாம் நாளை விட்டா வேறே முகூர்த்தம் இல்லேன்னு சொல்றேளா?"—

"இவ நட்சத்திரத்துக்கு தோது படறதா இல்லை வைத்தியநாதா—அப்புறம் மார்கழி பொறந்துடறது..... வேணு தை மாசத்துலே பார்க்கலாம்..."

அத்தை அவசரமாக குறுக்கிட்டாள்.

"தை மாசத்துக்கு தள்ளி போடாதேண்ணு... வர்ற முகூர்த்தத்துலேயே முடிச்சுடலாம். இன்னும் எட்டு நாள் இருக்கே! அதுக்குள்ள வேண காரியம் ஆகாதா?"—

அப்புவின் தகப்பனுர் வைத்தியநாதனின் தமக்கை ஞானம், ஒரு வருஷம் முன்னுல் புருஷனை இழந்து, வேறு போக்கிடம் இல்லாமல் தன் ஒற்றைப்பிள்ளையுடன் வேறு போக்கிடம் சரணடைந்தவள். அவள் பிள்ளை அன்னுவை இப்போது பதினெட்டு வயசு, எட்டாவது கோபுவுக்கு இப்போது பதினெட்டு வயசு, எட்டாவது வரைக்கும் படித்து விட்டு மாமாவுக்கு உபகாரமாய் நிலம் நீர்களைப் பார்த்துக் கொள்கிறன். வைத்தியநாதனின் மூத்தப் பெண் அப்பு என்கிற அலமேலுவுக்கும், இந்த கோபுவுக்கும், இவனுக்கு இவள் என்று எப்போதோ பெரியவர்கள் உறவு விட்டு போகாமல் இருக்க முடிச்சு போட்டு விட்டார்கள். அப்புவுக்கு எட்டு வயசுதானே ஆகிறது. இன்னும் இரண்டு வருஷம் போகட்டும் ஜாம் ஜாம்னு கல்யாணத்தை நடத்தி விடலாம் என்று சம்பந்தப்பட்டவர்கள் முடிவு எடுத்திருந்ததில் நாலு நாட்களாய் ஒரு சின்ன மாற்றம்.

அடுத்த தெரு சுந்தரேசய்யர் மாமாவும், சாவித்திரி மாமியும் காசிக்குப் போக தீர்மானம் செய்துவிட்டார்கள். வண்டி கட்டிக் கொண்டு தஞ்சாவூர் போய் அங்கிருந்து ரயில் ஏறி, பட்டணத்துக்குச் சென்று, அப்புறம் காசியை நோக்கி பயணத்தைத் தொடரவேண்டும். சமாசாரத்தை கேள்விப்பட்டதிலிருந்து ஞானத்துக்கு திடுமென்று தானும் காசிக்குப்போய், கங்கையில் குளித்து தன்னை மோட்சத்துக்குத் தயார் பண்ணிக் கொள்ளவேண்டும் என்ற ஆவல் வந்துவிட்டது.

நாலு நாட்கள் முன் அண்ணு எதிரில் வந்து நின்று "போன ஜென்மத்துல யாருக்கு என்ன பாவம் பண்ணி னேனோ, இப்ப இப்படி நிக்கறேன் —காசிக்குப் போற தெக்காம் வேலை நடக்கற சமாசாரம் இல்லே... அதிருஷ்ட வசமா மாமாவும் மாமியும் கிளம்பிருக்கா. நல்ல துணை—இப்ப இவாளை விட்டா, அப்புறம் தோதா வேறே யார் கிடைப்பாளு தெரியலே, காசிக்குப்



போகனுங்கறது நெஞ்சுக்குள்ள ஆசை ஏகமா முட்டறது கோபுவைப் பாத்துக்க நீ இருக்கேன்னுறும் அவன் எனக்கு ஒத்தைப் பிள்ளை... அவன் கல்யாணத்தை நடத்தி கண் குளிரப் பாத்துட்டு காசிக்குப் புறப்பட்டா தேவலையோனு தோணறது. காசிக்குப் போயிட்டு நா எப்ப திரும்புவேன்னு சொல்லி முடியாது. அதனால அவனுக்கும், அப்புவுக்கும் பேசி வைச்சிருக்கிற கல்யாணத்தை நடத்திட்டா, என் கடமை முடிஞ்சுது. இனி அவன் பாடு, உன் பாடுனு நா நடையைக் கிளம்பிடுவேன்" என்று மெதுவாக பேசின பேச்சுக்களில் நியாயம் தெரிய, இரண்டு நாட்கள் யோசனை பண்ணிட்டு இப்போது ஜோஸியரை வைத்தியநாதன் வரவழைத்திருக்கிறர்.

"அப்ப, இன்னிக்கு எட்டாம் நாள், குழந்தைகள் கல்யாணத்தை நடத்திடலாம்னே சொல்றியா ஞானம்—"

"கண்டிப்பா; ஒரேயடியா செய்திடலாம். என்ன மன்னி, நா சொல்றது சரிதானே?"—

கதவருகில் நின்றிருந்த காமு சன்ன குரலில் பேசினுள்.

"உங்களனுவும், நீங்களும் பார்த்து முடிவெடுத்தா நா வேண்டாம்னு சொல்லப் போறேன்?"—

"அப்புறம் என்ன வைத்தியநாதா? நா பத்திரிகை எழுதிடறேன். நாளைக்கு நாள் நன்னு இருக்கு. பந்தக்கால் முகூர்த்தத்தை வைச்சிக்கலாம். பெண்டுகள் ஒண்ணு கலந்து சமையல்கட்டுவேலை. இதர வேலைகளை திட்டம் போட்டுக்கட்டும். பந்தக்காரன் மேளக்காரனுக்கு சொல்லி அனுப்பி, வெளியூர் சொந்தக்காரர்களுக்கு ஆள் விட்டு அனுப்பினு . ஆச்சு காரியம். திங்கள் கிழமை அன்னிக்கு நேரம் குறிச்சு தரேன்; நீ வண்டி கட்டிண்டு கும்பகோணத்துக்குப் போய் திருமாங்கல்யம் செய்ய குடுத்துடு. புடவை

பாத்திரங்களையும் அள்ளிக்கே வாங்கிண்டு வந்திட லாம் என்ன?"

ஊருக்குப் பெரியவரான ஸ்ரௌதிகள் செய்ய வேண்டிய காரியங்களை அடுக்க, மளமளவென்று அந்த நிமிஷத்திலிருந்தே வீடு கல்யாண களை கட்டத் துவங்கியது.

பந்தக்கால் நட்டார்கள், பெண்மணிகள் சேர்ந்து மஞ்சள இடித்து, குங்குமம் தயாரித்தார்கள். நவ்வாலு பேர்களாக பிரிந்து சீர் முறுக்கு, அதிரஸம், லாடு செய்து கூம்பு கூம்பாய் பருப்புத் தேங்காய்களைப் பிடித்தார்கள். அப்பளாம் இட்டு, பொடி வகையறுக்கள் செய்து, ஊறுகாய்களை தயாரித்தார்கள். என்னமோ தங்கள் வீட்டில்தான் கல்யாணம் என்பது போல வாசலுக்கு வாசல் பெரிசு பெரிசாய் கோலங்களைப் போட்டு, ஒவ்வொரு காரியத்திலும் பங்கெடுத்து குதாகலித்தார்கள்.

தெருவை அடைத்த பந்தல். உயர உயரமாய் குலையுடன் வாழைகள், தோரணங்கள். தஞ்சாவூரிலிருந்தும், கும்பகோணத்திலிருந்தும் வண்டி வண்டியாய் வந்து இறங்கின, பழம் புஷ்பம் இதர சாமான்கள்.

நாலுநாள் கல்யாணம்.

நித்தமும் ஊஞ்சல், நலங்கு, வேடிக்கைகள் சாப்பாடு என்று ஊர் திமிலோகப்பட்டது.

நாலாம் நாள் மாங்கல்யதாரணம் நடக்க ராத்திரி சாரட் வண்டியில் பெண்ணையும், பிள்ளையையும் உட்காரவைத்து ஊர் சுற்றி ஊர்வலம் விட்டார்கள்—

அம்புலுக்கு எல்லாமே புது அனுபவங்கள். வேளா வேளைக்கு புதுப் புடவை, நகைகள், சிணுங்காமல் இருக்கையில் அதிரஸமோ, வாழைப்பழமோ...



ஹோம குண்டத்தின் எதிரில் உட்கார்ந்து கண்கள் சிவந்து எரியத் துவங்கியதில் சாரட் வண்டியில் இரவு நேரத்தில் ஊர்வலம் போன போது அலுப்பு தாளாமல் ஒரு தெரு தாண்டி இரண்டாவதில் வண்டி திரும்பியதும், முன்னால் சென்ற நாதஸ்வர சப்தத்தையும் மீறிக் கொண்டு கணவன் மேல் சாய்ந்தபடியே அவள் தூங்கிப் போனாள்.

## 1929

''கிலாபரண்டி, கீபரண்டி, மாபரண்டி, என்ன மூச்சு?"

''முறுக்கு மூச்சு''

''முறுக்கு மூச்சு பிடிச்சவளே, ஆணி மாம்பழம் தின்னவளே, கை மடக்கு...''

''மாட்டேன்...''

''மாட்டேன்னு வல்லேன்னு தாருதாரா வாழைக்கா தாளம் போடும் கோபுரம், சீதாதேவி பூமா தேவி கை மடக்கு...''

உள்ளங் கைகளை தரையில் பிரித்து அமுக்கியபடி உட்கார்ந்திருந்திருந்த வாண்டு ஒன்றை 'கை மடக்கு' என்று சொல்லி அம்புலு புறங்கையில் தட்டவும், லவக்கென்று அந்த கையை எடுத்து பின்னால் மறைத்துக்கொண்டது.

முற்றத்தின் நடுவில், இளம் வெயிலில் நாலைந்து குழந்தைகளாக அமர்ந்து விளையாடுவதை ஊஞ்சலில் இருந்தபடியே வேடிக்கைப் பார்த்த வைத்தியநாதனுக்கு சிரிப்பு வந்தது.

வலப்பக்கம் அமர்ந்திருக்கும் கோமுவும், அம்புலுவும் குழந்தைகளாக பாவாடை சட்டையுடன் அமர்ந்து

விளையாடிக் கொண்டிருந்தாலும், வயசு பத்து, ஒன்பது முறையே ஆனாலும் கல்யாணப் பெண்கள், அவர்களுக்குப் பக்கத்தில் இருக்கும் ஏழு வயசு விசாலி, லக்ஷ்மி, எதிர் வீட்டு குழந்தைகள். உழக்கு மாதிரி ஊருக்கு சப்பாணி உப்புக்கு மாங்கொட்டை என்று கூடவே உட்கார்ந்திருக்கும் இரண்டு வயசு காமு, அம்புலுவின் ஒரே தங்கை. கிட்டத்தட்ட ஏழு வயசு வித்தியாசம் இரண்டு பேருக்கும் நடுவில்.

சமையல் கட்டிலிருந்து வெளியே வந்து தூணில் சாய்ந்து பெண்களின் விளையாட்டை பார்க்க முற்பட்ட தாமுவின் கண்கள் ஒரு நிமிஷம் பெண்ணின் கழுத்தில் நிலைத்தன.

''ஏண்டி, அம்புலு... தாலிச் சங்கிலிய எங்கடீ காணோம்?

விளையாட்டிலிருந்து கவனத்தை நகர்த்தாமலேயே ஒருகையைத் தூக்கி அம்புலு அலமாரியை நோக்கிக் காட்டினாள்.

வழக்கம் போல பூஜை அலமாரிக்கு பக்கத்து ஆணியில் நீளமாய் தாலிச்சரடு தொங்கிக் கொண்டிருந்தது.

சுரு சுருவென்று கோபம் மூள, கணவன் பக்கம் தாமு திரும்பினாள்.

"இவ இப்படி அழிச்சாட்டியம் பண்ணுனா என்ன செய்யறது சொல்லுங்—கோன்னு? தாலிச்சங்கிலிய கழட்டாதடீ கழுத்தோட இருக்கட்டும்னு தலையா அடிச்சிண்டாலும் காதுலியே வாங்க மாட்டேங்கறாளே ஆச்சு, திரும்பிப் பார்த்தா தாலி கட்டி ஒரு வருஷம் ஆகப்போறது, இன்னமும் இந்த பழக்கம் வரலேனு எப்படி? ஒம்பது கெஜ புடவையைத் தூக்கிக் கட்டிக்க தெரியாது, சரி, கொஞ்சம் பெரியவளாகட்டும்: போனுப்



போறதுனு விட்டுக் கொடுத்தா, ரொம்பத் தான் துள்ளறான்னு... நீங்க கொஞ்சம் கண்டிச்சா தேவலே... நாளைக்கு உங்க தங்கை வந்தாள்னு பொண்ணை வளர்க்கத் தெரியலேனு என்னைத் தானே பரிஹாஸம் பண்ணுவாள்?'' —

விசிறியைக் கீழே வைத்த வைத்தியநாதன் ''அம்புலு'' என்று பெண்ணை அழைத்தார்.

''என்னப்பா?"—

''இங்க வாடிம்மா..."

''பாதி விளையாடிண்டு இருக்கேம்பா."

''பதில் சொல்லாம கூப்பிட்டதும், எழுந்து வாடி'' அம்மா அதட்ட, அம்புலு எழுந்து வந்தாள்.

"என்னப்பா?''—

''அது என்னம்மா வேலே?'' ஒற்றை விரலே ஆணி பக்கம் நீட்டி அவர் கேட்க அம்புலு தலையைக் குனிந்து கொண்டாள்.

"உடனெத்த கோமு கழுத்தை விட்டு கழட்டாம தாலிச்சரடை போட்டுண்டு இருக்கறப்போ, உனக்கு மட்டும் என்னுச்சும்மா?ம்?''—

"என் சங்கிலி ரொம்ப கனமா இருக்குப்பா...படுத்துக்கறப்பவும், விளையாடறப்பவும் கழுத்தை பிடிச்சு அமுக்கறது. அதான் தங்கச் சங்கிலிய கழட்டி மாட்டிட்டு மஞ்ச சரட்டோட இருக்கேன். அத்தை ஊருக்குப் போனப்போ, என்ன ஆனாலும் மஞ்ச சரட்டை மட்டும் கழட்டாதேனு சொன்ன பேச்சை நா மீறலேப்பா...''

ஞானம் தான் அணிந்திருந்த சரட்டை மருமகளுக்குத் தூக்கிப் போட்டிருப்பதால், இதற்கு கனம் அதிகம் தான். கிட்டத்தட்ட பன்னிரண்டு பவுன் ஆயிற்றே!

''கனமா இருந்தா என்னடீ? அதான் அழகு, கோமு போட்டுக்கலேயா? ஆனாலும் உனக்கு ரொம்பத்தான் சொகுசு.''

அம்மா சிடுசிடுக்க அம்புலு அவள் பக்கம் திரும்பினாள்.

"இல்லேம்மா, என் சங்கிலி ரொம்ப கனம். கோமு கூட அன்னிக்கு சொன்னா 'ஆமாண்டி உன்னுது கனக்கறதுனு—இல்லே கோமு?''—

ஸ்னேகிதியை தனக்கு சிபாரிசு செய்ய அழைக்கவும் "அவளுக்கு எப்படி தெரியும்? கழட்டி அவ கைலே கொடுத்து பாக்கச் சொன்னியா?'' என்று தாமு கேட்க, எங்களை என்ன வென்று நினைத்தாய் என்ற பார்வை ஒன்றை அம்புலு பார்த்தாள்.

"கைலே கொடுக்கலேம்மா—என்னதை அவ போட்டுண்டு பாத்தா, அவளுதை நா போட்டுண்டு பாத்தேன். அப்பத்தான் புரிஞ்சுது."

"எ...என்னது! உன் தாலியை அவளும், அவளுதை நீயும் மாத்திப் போட்டுண்டேளா?''—

''ஆமாம்மா.''

''சிவ சிவா—என்ன அக்கிரமடீ இது! வெளிலே போய், சொல்லாதீங்கோ கேட்கறவா கேலி பண்ணப் போரா... வாடி இங்க... இன்னொரு தரம் இந்த சங்கிலிய உன் கழுத்தை விட்டு கழட்டு சொல்றேன்... அப்புறம் நா பொல்லாதவளா ஆயிடுவேன்—ஆமா—''

கோபம் மாறாமல் ஆணியில் இருந்த சங்கிலியை பெண் கழுத்தில் மாட்டின தாமு, கோமு பக்கம் திரும்பி ''இந்தாடி, உனக்கும் சொல்றேன், கேட்டுக்கோ தத்துப்பித்துனு தாலிச் சரட்டை கழட்டறதை, மாத்திக் கறதையெல்லாம் இன்னொரு தரம் பண்ணாதே—அம்புலுவை விட நீ பெரியவ, விஷயம் புரிஞ்சவ அவளுக்கு புத்திசொல்லறதை விட்டுட்டு நீயும் இப்படி தாறு மாறா நடந்துண்டா எப்படி? திரும்ப இப்படி அசட்டுக் காரியம் பண்ணைக்கா உங்கப்பா அம்மா



கிட்ட சொல்லி சூடு போடச் சொல்லிடுவேன்—புரியறதா? ஓடு...'' என்று மிரட்ட, 'சரி மாமீ... நா வரேன்' என்று ஒரே ஓட்டமாக அவளும் மற்ற பெண்களும் வாசலைப் பார்க்க ஓடினர்.

இரண்டடி வைத்த பெண்ணின் கையைப் பற்றி தாமு நிறுத்தினாள்.

'நீ எங்க கிளம்பறே? போயி கை காலை அலம்பிண்டு சமயல்கட்டுக்கு வா. தேங்காய் துருவி வைச்சிருக்கேன், சட்னி அரைச்சுண்டு வா...கோபு வர்ற நேரமாச்சு. நா இட்லி வார்க்கறேன். ஏதுடா தாலி கட்டினவன் வந்துடுவானே, அவன் சாப்பிட இலை போடுவோம். அம்மாக்கு கூட மாட ஒத்தாசை பண்ணுவோம்னு இல்லாம என்னடீ சதா விளையாட்டு? இனிமே இப்படி சோழி ஏழாங்கல் அது, இதுனு உட்காரு சொல்றேன்.''—

அம்மாவுக்கு நிஜமாகவே கோபம் என்பதை புரிந்து கொண்டு வாயைத் திறக்காமல் அம்புலு புழக்கடைக்கு சென்றாள்.

அவள் தலை மறைந்ததும் வைத்தியநாதன் மெதுவாக சிரித்தார்.

"அவ குழந்தை தானேடீ... ஆனாலும் நீ ஓட ஓட வெரட்டினா எப்படி? ஒம்பது வயசுக்கு அதுக்கு என்ன புரியும்? ம்?''—

"குழந்தை குழந்தைனு சொல்லிண்டே இருந்தா எப்பத்தான் பதவிசு வரும்! பொம்மனாட்டி குழந்தைக்கு அடக்கமும், காரியமும் உடம்போட பிறந்து வளர வாண்டாமா? நாளைக்கு இவ பெரியவளாகி தனிக் குடுத்-தனம் போட்டா, நெர்விசா அத்தனையும் செய்யத் தெரிய வாண்டாமா? நமக்கு இவ உசத்தியா இருக்கலாம், அதுக்காக மாமியார் ஆத்துலேயும் இப்படியே கால் மேல கால் போட்டுண்டு இருக்க முடியுமான்னா?''—

"மாமியார் அவளம்னு இவளுக்கு தனியா எதுக்கு? நம்மாத்தோடதானே இருக்கப் போறு! நானும் காசிலேந்து திரும்பி தனிக்குடித்தனம்ங்கற பேச்சை எடுத்தாக்கூட வாண்டாம்னு நா தடுத்துடறதா தான் இருக்கேன். அண்ணியமா, அசலா? எதுக்கு பிரிஞ்சு இரண்டு குடித்தனமா வாழணும்! ஆயுசுக்கும் ஒண்ணு நம்ம கூடவே இருந்துட்டா போச்சு!"—

வைத்தியநாதன் ஆசைப்பட்ட அந்த கணத்தில் அஸ்வினி தேவதைகள் கிட்டத்தில் நின்று 'அப்படியே ஆகட்டும்'—என்று ஆசிர்வதித்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் அத்தனை சுருக்கில், திடுதிப்பென்று கோபுவை காலன் வாரிக் கொண்டு போவானேன்; இனி ஆயுசு பர்யந்தம் அம்புலுவின் வாழ்க்கை பிறந்த வீட்டில்தான் என்று ஆவானேன்?

## 1930

அன்றைக்கு, நல்ல உச்சி வெயில் நேரத்தில் கோபுவை இரண்டு நண்பர்களும், குடியானவர்களுமாக தூக்கி வந்து தாழ்வாரத்தில் கிடத்தின போது வழக்கம் போல கொல்லைக் கட்டில், ஜிலுஜிலுத்த வேப்ப மரத்து காற்றை அனுபவித்தபடி நாலைந்து பெண்களுடன் அம்புலு ஏழாங்கல் ஆடிக் கொண்டிருந்தாள்.

சாப்பாடு ஆகி, அவரவர் வீட்டில் பெண்டுகள் படுத்துவிட, குட்டிகள் ஒரு வீட்டில் கூடி ஏழாங்கல்லோ, ஒத்தையா, இரட்டையா, பம்பையா, பரட்டையோ, பல்லாங்குழியோ ஆடும் தினுசில் அன்றும் இவர்கள் வீட்டில் குழுமி, மும்முரமாய் ஏழாங்கல்லில் லயித்திருந்தார்கள்.



கோமு ஆட்டத்தை முடிக்கும் தருவாயில் இருக்க, உற்சாகத்தோடு குரல் எடுத்து பாடியபடி கற்களை வீசி, அள்ளிக் கொண்டிருந்தாள்.

"காய் பொறுக்கி வீட்டிலே,
கல்லுங்காய் காய்த்தது,
மா பொறுக்கி வீட்டிலே
மாதுளங்காய் காய்த்தது,
தூ பொறுக்கி வீட்டிலே,
தூ துவிளங்காய் காய்த்தது,
பந்தலிலே பாகற்காய்,
தொங்குதடி லோலக்கா..."
கடைசிக்கல்லை அள்ளி ஒரு பழம் பெற்ற பின் திரும்ப
'அல்லல்ல, அரசல்லலா,
பாலாறு, படிக்கட்டு,
பழம் பழுக்க,

பலாச்சுளை—' என்று முதல் பாட்டுக்குத் தாவின நிமிஷத்தில் வாசப்பக்கத்தில் 'ஹோ' என்ற அழுகை கேட்டது.

"ஈஸ்வரா—தலைல கல்லை போட்டுட்டியே நா என்னப் பண்ணுவேண்டா..."

அப்பாவின் குரல் ஓங்கி பிரதானமாய்க் கேட்க, அம்புலு சட்டென்று எழுந்து உள்ளே ஓடினாள்.

முன் தாழ்வாரத்திலும், முற்றத்திலும் கூட்டம்.

என்னாயிற்று!

அப்பா ஏன் அழுகிறார்?

கூட்டத்தில் புகுந்து பார்க்கையில் தரையில் கோபு கிடப்பது தெரிந்தது.

"யாராவது ஓடிப்போய் வைத்தியரைக் கூட்டிண்டு வாங்களேன். ஸ்ரௌதிகளை வரச்சொல்லி மந்திரிக்கச் சொல்லுங்களேன்... ஈஸ்வரா, நா என்னப் பண்ணுவேன்?"

வைத்தியநாதன் கத்த, "இரண்டு பேருக்கும் ஆள் போயாச்சு மாமா, கோபுவை இங்க நாங்க தூக்கிண்டு வந்தப்பவே அங்கவும் ஆள் அனுப்பிச்சுட்டோம்.......', என்றான் கோபுவின் தமையன் சங்கரன்.

என்னாயிற்றாம்?

வயக்காட்டு வேலைகளை கவனித்த பிறகு, சாப்பிட நாழியாக, சங்கரன், கிட்டுவோடு கோபு ஆத்தங் கரைக்குப் போயிருக்கிறான்.

முங்கி குளித்து எழுந்து துண்டைப் பிழிந்து உடம்பைத் துடைத்து, வேட்டியை உதறி காய வைத்துக்கொண்டு கிளம்பிய போது கம்மென்று தாழம்பூ வாசனை எழுந்ததாம்.

வரிசையாய் நின்ற தாழம்புதர்களில் பார்வையை படற விட்டதும், மஞ்சளாய் பூத்திருந்த பூவொன்று பளிச்சென்று தெரிந்ததாம்.

"தாழம்பூன்னா அம்புலுக்கு ரொம்ப பிடிக்கும்டா" என்றதோடு நிற்காமல் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு கோபு கிளம்ப, வேணும்டா—உச்சி வேளை—பூச்சி பொட்டு இருக்கும்டா' என்று சங்கரன் தடுக்கவே செய்தானாம்.

கோபு காதில் வாங்கவில்லை.

இப்படி நுழைந்து, அப்படி வளைந்து, அடிப் புதரில் கால் ஊன்றி, எட்டி, மேல் புதரை பிடித்து இழுக்க...

அம்மாடி...

என்னவென்று சொல்வது!



வெயிலுக்கு இதமாக அடிப் புதரில் படுத்து தாழம்பூ வாசனையில் கிறங்கி உறங்கிக்கொண்டிருந்த நாகமொன்றின் தூக்கம் கலைக்கப்பட, அந்தக் கோபத்தில் விறுவிறுவென்று நெளிந்து, தலையைத் தூக்கி, மடித்து கட்டப்பட்ட வேட்டியால் பாதுகாப்பின்றி இருந்த கால்களில் ஒரே போடாய் போட...

அவ்வளவுதான்—

அவ்வளவேதான்...

பாம்பை விரட்டி பிரமை பிடித்து நின்ற நண்பனை தாங்கிப்பிடித்து கடிவாய்க்குக் கீழ் துண்டை இறுக கட்டி, ஆளுக்கு ஒரு பக்கமாய் தாங்கிப்பிடித்து, வீட்டுக்குத் தூக்கி வருவதற்குள், அந்த பதினைந்து நிமிஷங்களுக்குள், கால் நீலம் பாரித்துவிட்டது, கைகள் சில்லிட்டு விட்டன. பற்கள் கெட்டித்துப்போய், உதட்டோரத்தில் நுரை.

வைத்தியர் ஓட்டமாய் ஓடிவந்தார். கூடவே ஸ்ரௌதிகளும், அவர் கை வைத்தியம் பண்ண, இவர் குளித்துவிட்டு ஈரத்துடன் உட்கார்ந்து மந்திரம் ஜெபிக்க......

என்ன பண்ணி என்ன?

அத்தனை பேர்களும் பார்த்துக்கொண்டே இருக்கையில், அந்த வைத்தியத்துக்கும், மந்திரத்துக்கும் கட்டுப்படமாட்டேன் என்று சண்டி பண்ணிக்கொண்டே விஷம் வெடுவெடுவென்று கோபுவின் உடலில் பரவினதில், உடம்பு அடுத்த கால்மணியில் சுத்தமாய் நீலமாக, கண்கள் செருகிக்கொண்டன. லேசாக வலிப்பு நிறைய நுரை—

பொக்கென்று பிராணன் போய்விட்டது.

ஐயோ—என்ற கத்தல்—

அழுகை—

சற்று முன்வரை கோபுவாக இருந்து இப்போது பிணமாகி விட்டவனை தெற்கு வடக்காக முற்றத்தில் கிடத்தி கால், கை விரல்களை கட்டிப்போட்டார்கள்.

வாசலில் ஒரு வரட்டியில் தணலை இட்டு கணகணக்கச் செய்துவைத்தார்கள்.

“மோசம் போயிட்டியேடி—துக்கிரிப் பொண்ணே...” என்று அழுகையினூடே புலம்பிக்கொண்டே, அம்புலுவின் தலைமுடியை பிரித்துவிட்டு, வாசலுக்கு அழைத்துசென்று தெருவை பார்க்க ஒரு நமஸ்காரத்தைச் செய்யச் சொல்லி, பிணத்திடம் கூட்டிவந்து ‘அடிச்சிண்டு அழுடி...உன் ஆத்திரம்தீர அடிச்சுண்டு அழுதுத்தொலை’ என்று பெரியவர்கள் சொல்ல, நடந்துவிட்ட சம்பவத்தின் கனம் புரியாமல் அம்புலு திருதிருவென்று விழித்தாள்.

கல்யாணத்துக்கு ஒன்றுபட்டமாதிரி இதற்கும் நிமிஷத்தில் தெருவே ஒன்றுபட்டு கூடியது.

காசிக்கு தந்தி அடித்தார்கள், தெரிந்தவர்களுக்கு ஆள்விட்டு சொல்லி அனுப்பினார்கள்.

பெத்தவள் வந்து சேருவது நடக்கிற காரியம் இல்லை என்று தெளிவாக, இருட்டுவதற்குள் பிணத்தை எடுக்க தீர்மானித்து, அம்புலுவிடம் கைப்புல் வாங்கி கொள்ளி வைக்க ஏற்பாடு பண்ணினார்கள்.

பிணம் நகர்ந்ததும், திரும்ப அவளை தெருவில் நமஸ்காரம் பண்ணச்செய்து, வீட்டுக்குள் அழைத்துப் போய், குளிக்கவைத்து மூலையோடு மூலையாய் உட்கார்த்தி வைத்தார்கள்.

பத்து நாளும் யார் யாரோ வந்தார்கள், அம்புலுவை கட்டிக்கொண்டு அடிப்பாவிப் பொண்ணே உன் தலைவிதி இப்படியா ஆகணும் என்று கதறி அழுதார்கள்.



பத்தாம் நாள் அன்று பத்துக்கொட்டி, மார் அடித்து அழுது, அவளையும் அழைத்துக்கொண்டு குளத்தங் கரைக்குப் போனார்கள்.

குளத்தில் குளித்தபின், மாமனுக்காக ஒரு புடவையும் புகுந்த வீட்டுக்காக ஒரு புடவையும், கழுத்தில் மாலையாகப் போடப்பட, ஈரம் சொட்டச் சொட்ட விதவைப் பெண்கள் அவள் கையைப் பிடித்து தெருவில் நடத்தி வீட்டுக்கு இட்டு வந்தார்கள்.

அன்று இரவு ஊர் உறங்கினபிறகு தூங்கிக்கொண்டிருந்தவளை எழுப்பி உட்காரவைத்து ஒவ்வொருவராக அவளை அணைத்து ஏகமாய் புலம்பி தீர்த்தார்கள். அப்புறமாய், தலை நிறைய வைத்திருந்த பூவை எடுத்து, பொட்டை அழித்தார்கள். தாலியைக்கழட்டி ஒரு கிண்ணத்தில் பால் ஊற்றி அதில் போடச்சொன்ன நிமிஷத்தில் ‘அடிப்பாவி... ஆணிலே கழட்டி மாட்டாதேனு முட்டிண்டேனேடி...இப்ப, ஒரேயடியா கழட்டிட்டியே’ என்று உரக்க அழுத தாமு மயக்கம் போட்டு விழுந்தாள்.

அந்த வருஷமும், தொடர்ந்து வந்த சில வருஷங்களும் அம்புலுவைப் பொறுத்தவரை ரொம்ப சிரமம் தந்த ஆண்டுகள்.

தன் நிலை என்ன, தான் இனி என்ன செய்யலாம், கூடாது என்பதின் முழு அர்த்தங்களும் புரிந்து, நிதானப்பட்டு அமைதியடைவதற்குள் வந்த அந்த நாலைந்து வருஷங்களில் அம்புலு உணர்ந்த வேதனைகள், ஏமாற்றங்கள், தவிப்புகள், ஆத்திரங்கள் வார்த்தையில் சொல்லி மாளாதவைதான்.

# 1936

தூரத்தில் எங்கோ ஒரு சேவல் கொக்கரிக்க, அம்புலு விழித்துக்கொண்டாள்.

மணி என்ன?

எழுந்திருக்க போதாகி விட்டதா?

கொல்லைக் கட்டிலிருந்து மாடு 'ம்மா' என்று குரல் கொடுத்தது.

விடிகாலை நாலு ஆகிவிட்டது. அந்த வாயில்லா ஜீவனுக்கு எப்படித்தான் புரியுமோ?

எழுந்திருந்து தலைக்கு வைத்திருந்த மணையை ஓரமாய் சாற்றி, பாயை சுருட்டி வைத்தாள்.

கலைந்திருந்த புடவையை சீர்பண்ணி, முட்டாக்கை இழுத்துவிட்டபடி கதவை ஓசை படாமல் திறந்து கொண்டு புறக்கடை படிகளில் இறங்கினாள்.

கிணற்றில் சகடையை உருட்டி குடத்தில் இழுத்து முகத்தை அலம்பி வாயைக் கொப்பளித்தவள், வாளியில் நீரை விட்டு எடுத்துக் கொண்டு பின் பக்கப் புதர்களை பார்க்க நடந்தாள்.

சாம்பல் பூத்த வானத்தில் கீறாய் நிலாவும் அந்த ஒற்றை நட்சத்திரமும் பளபளவென்று கண்ணில் பட்டன.

நட்சத்திரம் நட்சத்திரமாக வெளேரென்று பூத்திருந்த நித்திய மல்லிகையின் வாசமும், பாரிஜாத பூக்களின் மணமும் ஒன்றாய் கலந்து நாசியை நிறைத்தன.



தெருவில் சளக் சளக்கென்று யார் வீட்டிலோ சாணம் தெளிப்பதும், ட்ருவ் ஹை...ட்ருவ் என்று கோனார் விரட்ட கழுத்து மணி சங், சங் என்று அசைய மாடுகள் செல்வதும் தெளிவாகக் கேட்டன.

படபடவென்று இறக்கையை அடித்துக் கொண்டு ஒரு காகம் பறந்து வந்து கிணற்றின் விளிம்பில் உட்கார்ந்தது. ம்மா என்று மாடு கூப்பிட கன்று ம்மே...என்று பதில் கொடுத்தது.

கை, கால்களை அலம்பிக் கொண்டபின் குவளையுடன் அம்புலு மாட்டிடம் சென்று கன்றுக்குட்டியை அவிழ்த்து விட்டாள்.

பின்னங்கால் பிடறியில் இடிக்கத் துள்ளி அம்மாவின் மடியை அது முட்டியது.

இரண்டு நிமிஷங்களில் அதை இழுத்து கம்பத்தில் கட்டிவிட்டு, குவளையில் இருந்த நீரால் மடியைசுத்தமாக அலம்பிவிட்டு, குந்தி, முழங்கால்களால் பாத்திரத்தை பிடித்துக் கொண்டு, வேகமாக பாலைக் கறந்தாள்.

அடி மடி பாலை கன்று குட்டிக்கு விட்டபின் சொம்புடன் உள்ளேவந்து சமையல்கட்டில் பால் பாத்திரத்தை வைத்தாள். கொடியில் கிடந்த பழைய புடவையை உருவி சுற்றிக் கொண்டு இடுப்பில் இருந்ததை அவிழ்த்தாள்.

கிணத்தடிக்குச் சென்று, மளமளவென்று நீரை இழுத்து ஹரே ராம ஹரே ராம, ராம ராமஹரே, ஹரே ஹரே கிருஷ்ண, ஹரேகிருஷ்ண கிருஷ்ணகிருஷ்ண ஹரே ஹரே என்று முணுமுணுத்தபடி தலையில் விட்டுக் கொண்டாள். கையோடு கொணர்ந்திருந்த விழுப்புப் புடவையை நனைத்து, கசக்கி அலசி பிழிந்து ஒரு பக்கமாக வைத்து விட்டு இரண்டடி தள்ளி சென்று தரையிலிருந்து நல்ல மணலாக எடுத்து உடம்பில் அழுத்த பூசி தேய்த்தாள். திரும்ப சில குடங்கள்

ஜலத்தை இழுத்து உடம்பில், தலையில் கொட்டிக் கொண்டு, ஈரப்புடவையுடன் சமயல் கட்டுக்குள் நுழைந்துக் கொடியில் மடித்துப்போட்டிருந்த புடவையை எடுத்து உடம்பில் சுற்றி ஈரத்தை விழ்த்துவிட்டு, உடுத்துக் கொண்டாள்.

பக்கப் பதிய கொசுவம் வைத்துக்கச்சை போட்டு, திருத்தமாய்மேல் உடப்பு, தலை தெரியாமல் முட்டாக்கைச் சுற்றி, மடியை இழுத்து செருகினவள் ஈரப்புடவையை எடுத்துப் போய் அலசி பிழிந்து, கிணற்றடியில் தோய்த்து வைத்திருந்த புடவையோடு சேர்த்து கொணர்ந்து கழியின் உதவியுடன் மேல் கொடியில் உதறி உலர்த்தினாள்.

பேழையிலிருந்து விபூதி எடுத்து நெற்றியில் ஒற்றைக் கீராய் பூசிக் கொண்டு அடுப்பிடம் வந்தாள்.

முதல்நாள் மெழுகி, கோலம் போடப்பட்டிருந்த அடுப்பில் இரண்டு பெரிய விறகு கட்டைகள், கொஞ்சம் சீராத்தூள் வைத்து, வரட்டியை பிய்த்து அதில் கொஞ்சமாய் சிம்னி எண்ணெய் விட்டு மேலாக வைத்து, பற்ற வைக்க, காய்ந்த சீராத்தூள் கப்பென்று புகையாமல் பிடித்துக் கொண்டது. அடிக்கட்டைகளை தூக்கி தீ நன்கு பரவினதும் தழைத்து, வாணலில் திட்டமாய் தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்தாள்.

வறுத்து, டப்பாவில் கொட்டி மூடி வைத்திருந்த காப்பி கொட்டையில் ஒரு டபரா நிறைய அள்ளி, அம்மியில் வைத்து மாவாக பொடி செய்து எடுத்து வந்தாள்.

காபி வடிகட்ட என்று தனியாய் வைத்திருக்கும் ல்லாத் துணியை அகன்றவாய் பாத்திரத்தில் விரித்து அதில் காப்பித்தூளை கொட்டி, கொதி வந்ததும் நீரை ஊற்றி, முடிச்சு போல வாயை இறுக்கி தூக்கிப் பிடித்து காஷனை வடிகட்டினாள்.



சொம்பில் இருந்த பாலை வேறு பாத்திரத்தில் ஊற்றி அடுப்பில் வைத்து காய்ச்சும் போது அறை வாசலில் நிழல் தட்டியது.

அம்மா.

"காபி போட்டுட்டியா?"

"ம்"—

"மாடு பாலை ஒழுங்கா கறந்துதா?"—

"ம்"—

"நா பல் தேச்சுட்டு வரேன்—காபி கலந்துடு..."

"ம்"—

தாமு மெதுவாக புறக்கடைக்குச் சென்றாள். கிணத்தடி பாசி வழுக்கி விடாமல் ஜாக்கிரதையாக காலை ஊன்றி தண்ணீர் இழுத்தாள்.

அவளுக்கு இது நிறைமாசம். எந்த நிமிஷம் வேணுமானாலும் பிரசவம் ஆகலாம்.

முதல் பிள்ளைக்குப் படுத்துகிற மாதிரி ஏழாவதுக்கு ஆனாலும் அதிகமாய்தான் படுத்துகிறது. உடம்பில் நீர் வைத்துக் கொண்டு, உட்கார முடிவதில்லை, எழுந்திருக்க முடிவதில்லை. பலஹீனம் வேறு. அம்புலு இருக்கிறாளோ, இவளும் இவள் குடும்பமும் நாறிப் போகாமல் இருக்கின்றனவா! அதுவும் இரண்டு வருஷத்தில் சவலையாய் பெண் ஒன்று பிறந்து தவறிப் போய், தொடர்ந்து ஆறு மாசத்துக்கெல்லாம் குறையாய் ஒன்று போனதிலிருந்து அரை உடம்பாக ஆள் தேய்ந்தது போதாது என்று உடனே இன்னொன்று உண்டாகி இப்போது நிறைமாசம். உடம்பு எங்கேயிருந்து தேறும்

முக்கிக் கொண்டும், முனகிக் கொண்டும் தாமு உள்ளே வந்து ஒரு பக்கமாக உட்கார்ந்தாள்.

சூடாக காபி கலந்து அம்மாவின் முன் வைத்தாள் அம்புலு.

"நீ சாப்பிட்டியா?"—

"இன்னும் இல்லே?"—

"உனக்கும் கலந்துக்கோ, அப்பா எழுந்து சாந்தி பண்ணட்டும், அப்புறமா அவருக்கு கலக்கலாம்."

அம்புலு பதில் சொல்லாமல் அடுப்படியில் உட்கார்ந்து பாலை லோட்டாவில் எடுத்தாள்.

"என்ன சமைக்கப் போறே?"

நீ சொல்லு என்பது போல அம்புலு அம்மாவை ஏறிட்டாள்.

"வத்தக் குழம்பு இட்டு, கீரை மசிச்சிடேன். தோட்டத்துலே கீரை இருக்கோன்னோ?"—

"இருக்கு"

"நன்னா விடிஞ்சப்புறம் பறிச்சுண்டு வா. நா நறுக்கித் தரேன்... ஹூம்... என்னமோ இன்னிக்கு ரொம்பத்தான் ஆளை போட்டு அமுக்கறது. சாயங்காலத்துக்குள்ள பிரசவம் ஆயிடுமோ என்னவோ...."

தாமு காபியை குடித்ததும் அம்புலு எழுந்து டம்ளரை கிணத்தடிக்குச் சென்று கழுவி எடுத்து வந்தாள்.

திணறி வழிந்து கொண்டு அவஸ்தைப்படும் அம்மாவைப் பார்க்க பரிதாபமாக இருக்க "நீ வேணா படுத்துக்கயேன். கீரை நறுக்கி சமைக்கறது பெரிய வேலையா? நா பாத்துகிறேன்" என்று சொல்ல, அவள் எழுந்து போனாள்.



பத்து நிமிஷங்களில் வைத்தியநாதனும், பின்னாலேயே தங்கைகள் காமுவும், சாரதாவும் ஒருவர் பின் ஒருவராக எழுந்து, பல் தேய்த்து காபிக்கு வந்தனர்.

காபி கடை ஆனதும் கொடி அடுப்பில் ஒரு பக்கம் உலை வைத்து இன்னொன்றில் சின்ன கோதாவரி வெங்கல குண்டானில் ரஸத்துக்கு பருப்பு போட்டாள்.

கீரையை பறித்து வந்து, பொடியாக நறுக்கி, மண் இல்லாமல் நாலு தரம் அலசி, அலம்பி வடிதட்டில் வைத்தாள்.

சாதம் கொதி வந்ததும், அடுப்பை தணித்து விட்டு கஞ்சியை வடித்து வடிதட்டுமேல் நாலு தணல் துண்டங்களை வைத்து வெங்கல பானையை ஒரு பக்கமாய் நகர்த்தினாள்.

வத்தல் குழம்பு பருப்புரஸம், கீரை தயாராகி முடிந்த கையோடு தங்கைகள் 'பின்னி விடறியாக்கா?' என்று வந்து விட ரேழிக்கு வந்தாள்.

ஒன்பது வயசு காமு முதலில் உக்கார, எண்ணெய் தடவி படியவாறி பின்னி நுனியில் நார் வைத்து இறுக முடிந்தாள். அடுத்து சின்னவள் சாரதா. வயசு நாலு. மொட்டை அடித்த தலையில் அத்தனை மயிர் இல்லை என்பதால் உச்சியில் ஒரு பின்னலை பின்னி இரண்டாக வளைத்துக் கட்டினாள்.

சரியாய் பத்து வயசில் கணவனை இழந்த அம்புலுவுக்கு பன்னிரண்டு, பதிமூன்று வயசு பூர்த்தியான பிறகும் கூட தனக்கு கல்யாணமானதற்கோ, பிற்பாடு புருஷனை இழந்ததற்கோ அர்த்தம் முழுமையாகப் புரியவில்லைதான்.

அதுவும் துவக்கத்தில் ஒரு மாசம் வரை பெரியவர்கள் பேச்சை மதித்து எங்கும் போகாமல், உட்காரச் சொன்ன இடத்தில் உட்கார்ந்து, சாப்பிடச் சொன்னபோது

சாப்பிட்டவள் அதற்குப்பிறகு கேள்விகள் கேட்க ஆரம்பித்தாள்.

"வெளியிலே போனா என்ன?"

"கோமுவோட விளையாடினா என்ன?"—

"ஆத்தங்கரைக்கு குளிக்கப் போனா என்ன?"—

"சங்கரன், கிட்டுவோட பேசினா என்ன?"—

எதையும் விளக்கிச் சொல்லாமல் கூடாது, நீ தாலி அறுத்தவ—இனிமே வெளி உலகத்தோட தொடர்பே உனக்குக் கூடாது, —என்று அப்பா, அம்மா மற்ற பெரியவர்கள் அதட்டி உட்கார வைத்ததை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்று ஆரம்பத்தில் ரொம்ப சண்டை போட்ட மனசு, நாளாக ஆக கொஞ்சம் கொஞ்சமாய் நிலைமை புரிந்து தானே அடங்கியது.

பதினாலு வயசில் பெரியவளாகி, நடக்க வேண்டிய மற்றதெல்லாம் சம்பிரதாயப்படி நடந்து முடிந்ததும் ஒஹோ—இனி என் நிலை ஆயுசுக்கும் இதுதான், என் தலைவிதி இதுதான்—என்று பல விவரங்கள் ஆணி அடித்த தினுசில் உள்ளத்தில் பதியத் தொடங்கின.

நிலைமை புரிய புரிய, மனசு பதப்பட்டுப் போகப் போக, பேசுவதை குறைத்துக்கொண்டாள், வெளியில் வாசலில் வருவதை தவிர்க்க ஆரம்பித்தாள். தன் விருப்பு வெறுப்புகளை வாய்விட்டு வெளிப்படுத்தாமல் அடக்கிக் கொள்ளக்கூட பழகிக் கொண்டாள்.

போனவருஷத்தில் ஒருநாள்—அம்மாவுக்கு பக்கத்தில் வழக்கமாய் படுத்துக் கொள்பவள் இரவில் யாரோ காலை இடறுவது போலத் தோன்ற திடுக்கிட்டு கண் விழித்தாள்.

அப்பா—

குனிந்து அம்மாவைத் தேடி அவள் தோளை காட்டு உலுக்கும் அப்பா—



ச்சூ—என்னன்னா இது—என்று கிசுகிசுப்பாக முனகிக் கொண்டே எழுந்து அவர் பின்னால் சென்று முன்னறையில் நுழைந்த அம்மா—

உள்ளேயிருந்து வந்த வளையல் ஒலி, முணுமுணுப்புகள்-இன்னும்......

பத்து நிமிஷங்களில் அம்மா திரும்ப பக்கத்தில் வந்து படுத்து விட்டாலும், சொச்ச இரவு பூராவும் தூங்க முடியாமல் அம்புலு உருண்டு, பிரண்டு படுத்தது நிஜம்.

மனசுக்குள் என்னமோ தவிப்பு—ஆத்திரம்—இயலாமை.

ஒன்றும் புரியாமல் போனபோது அழுகை மட்டும் கொப்பளித்துக் கொண்டு வர, புடவைத் தலைப்பால் வாயை பொத்திக் கொண்டு சப்தமில்லாமல் அழுது தீர்த்தாள்.

அதன் பிறகுதான், அம்மா என்று நினைத்துக்கொண்டு அப்பா தன் காலை திரும்ப இடறலாம் என்ற எண்ணம் தோன்றிய பிறகுதான், இந்த மன உளைச்சலை நம்மால் தாங்க இயலாது என்று புரிந்து கொண்டு அம்மாவோடு படுக்காமல், சமையல் கட்டிலேயே தனியாக அம்புலு படுக்க ஆரம்பித்தாள்.

"சமையல் ஆயிடுத்தா, சாப்பிட உட்காரலாமா? எனக்கு கும்பகோணம் வரைக்கும் போயிட்டு வரணும் ஜோலி இருக்கு"—

அப்பா குரல் கொடுக்க சாரதாவுக்கு பின்னி முடித்த அம்புலு எழுந்தாள்.

கை அலம்பிக் கொண்டு அப்பா, தங்கைகளுக்கு இலை போட்டாள்.

அவர்கள் சாப்பிட்டுப் போனதும், ராத்திரி பலகாரத்துக்காக நொய்யைக் களைந்து, உப்புமாவுக்கு எந்திரத்தில் உடைத்து வைத்தாள்.

குளித்துவிட்டு வந்த அம்மாவுக்கு சாதம் போட்டு, தானும் சாப்பிட்டு சமையல் கட்டை ஒழித்தாள்.

மதியம் மூன்று மணி சுமாருக்கு, பிற்பகல் காபி ஆன பிறகு, தாமு எதிர்பார்த்தது போலவே அவளுக்கு பனிக் குடம் உடைந்து பிரசவ வலிகண்டது.

## 1937

அம்புலுவுக்கு வேலை நெட்டி முறித்தது.

சாதாரண அன்றாட காரியங்களோடு, பிள்ளை பெத்தவளை கவனிக்கும் காரியம், அப்புறம் குட்டி பூண்டுக்கு சிகப்பாய் இருந்து கொண்டு, கை கால்களை ஆட்டி, கண்களை மலர்த்தி ங்கா ங்கா என்று வாய் கொள்ளாமல் சிரிக்கும் அந்த அம்பிப் பயலுக்காக செய்யும் காரியம்...

அம்மாடி! அம்பிப் பயல்தான் எத்தனை அழகு!

அந்த சிகப்பும், தலை கொள்ளா கூடை மயிரும் கருப்புக் கண்களும் சிரிப்பும்...ஏ—அம்மா! அவனை பார்ப்பதும், தூக்குவதும், கொஞ்சுவதும் எத்தனை பரவசம் தரும் சமாசாரம்!

தங்கைகள் பிறந்தபோது அம்புலுவும் சின்னப் பெண்ணாக இருந்ததாலோ, இல்லை இந்த முறை தம்பி பிரசவத்தில் ஈடுபட்ட மாதிரி அத்தனை முனையவில்லை என்பதாலோ என்னமோ முன் இரு குட்டிகளிடமும் தோன்றாத பாசமும், அன்பும் இந்தப் பயலிடம் மீறிக் கொண்டு முளைத்திருப்பது உண்மைதான்.

தவிர, முன்பு சித்தி அத்தை என்று பெரியவர்கள் வீட்டோடு இருந்தார்கள். அதனால் உள் காரியத்தோடு,



பிள்ளைதாச்சி வேலைகளையும் அவர்களே கவனித்து விட்டார்கள். வேளைக்குத் தின்றுவிட்டு பாண்டி ஏழாங்கல் என்று தோழிகளோடு விளையாடுவதில் அம்புலுவின் பொழுது கழிந்து விட்டது.

இப்போது அப்படி இல்லியே—சித்தப்பா திருச்சியில் ஏதோ வேலை ஏற்றுக்கொண்டு விட அவரும் சித்தியும் அங்கேயே தனிக் குடுத்தனம் போட்டு விட்டார்கள்.

காசியிலிருந்து திரும்பிய அத்தை பிள்ளையை அகாலமாக பறி கொடுத்த துக்கத்தில் ஆடிப் போனவள் எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு இரண்டு வருஷம் போல வாழ்ந்துவிட்டு, ஒரு நாளில் மாரைப் பிடித்துக் கொண்டு நினைத்த நினைப்பில்லாமல் அவளும் உயிரை விட்ட பின் வீட்டில் அப்பாவும், அம்மாவும்தான் பெரியவர்கள்!

விவரம் புரிந்து பொறுப்பை அம்புலு ஏற்றுக் கொண்ட பிறகு முழுசாய் குழந்தை பிறந்து, நன்றாக இருப்பது இதுதான் முதல் தடவை என்பதால் அத்தனை வேலையும் குருவி தலை பனங்காயாக அம்புலு மேல் தான் விழுந்தது.

பிள்ளை பெத்த மூன்றாம் நாள் எதிர்வீட்டு பாட்டி சொல்லிக் கொடுத்த தினுசில் அம்மாவுக்கு பத்தியம் போட்டாள், வேளா வேளைக்கு அறை வாசலில் நின்று வெத்தலை போட்டுண்டியா?; தண்ணி குடிக்காதே—' என்று பெரிய மனுஷி மாதிரி சொன்னாள்; ஒன்று விட்டு ஒரு நாள் அம்மாவுக்கு கொதிக்க கொதிக்க வெந்நீர் விட்டு, எண்ணை தேய்த்துக் குளிப்பாட்டினாள். பதினோராம் நாள் தெருவை அழைத்து புண்ணியா வாசகம் செய்தபோது மங்கு மங்கென்று அத்தனை பேருக்கும் வடை பாயசத்துடன் சமைத்துப் போட்டாள். இருபத்திரெண்டாம் நாளிலிருந்து குழந்தையை குளிப்பாட்டிவிட என வந்த மாமி நின்றுவிட, அம்மாவே முழங்கால்களில் குழந்தையைக் கிடத்திக் கொண்டு

குளிப்பாட்டின போது இதமாய் வெந்நீர் விளாவி சொம்பால் விட்டு, குழந்தையை கையில் வாங்கி துவட்டி, தூபம் காட்டினாள். நாற்பதாம் நாள் தீட்டு கழிந்து, கிணற்று ஜலத்தில் குழந்தைக்கு சொறி சிரங்கு வாராமல் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் பிடி அரிசியை தலைக்காக வாரி இறைத்துவிட்டு சமையல் கட்டில் வந்து தாமு, புளி, உப்பு பானைகளைத் தொட்டு 'சட்டி தொட்ட' பிறகும்கூட, கூடுமானவரையில் அம்மாவை ஒரு வேலையும் செய்ய விடாமல் உட்கார வைத்து விட்டு அத்தனை காரியங்களையும் அம்புலு தானே இழுத்துப்போட்டுக் கொண்டு செய்தாள்.

இப்படிப் பார்த்துப் பார்த்துச் செய்தவளிடம் தம்பி பயல் அட்டையாய் ஒட்டிக் கொண்டதில்தான் அதிசயம் என்ன, இல்லை, பெற்ற தாய் பிள்ளைபால் வைத்த பாசத்தை அவளிடம் வைத்துவிட்டு சதா சர்வ காலமும் 'அம்பி' யே தன் உலகம் என்று அம்புலு வாழ முற்பட்டதில்தான் ஆச்சர்யம் என்ன?

மற்றும் ஒன்றும் இல்லை. தொட்டிலில் கிடத்தி குல தெய்வம் முருகனின் பெயராக கார்த்திகேயன் என்று நாமகரணம் செய்யப்பட்டிருந்தாலும் எல்லாருக்கும் அவன் செல்லமாக அம்பி ஆனான்.

இந்த அம்பி பிறந்த நாலாம் மாசம் தான் காமு பெரியவளானாள். அப்போது அம்புலுவுக்கு சரியாய் பதினெட்டு ரொம்பி பத்தொன்பது பிறந்துவிட்டது.

ஒருநாள், மதியம், வெயில் தருவாய். காபி பாத்திரங்களை கிணத்தடியில் போட்டு தேய்த்துக்கொண்டிருந்த போது காமு அரக்க, பரக்க வந்து நின்றாள்.

எதிர்வீட்டில் சோழி ஆடிக் கொண்டிருந்தவளுக்கு என்ன ஆயிற்று. இந்த ஓட்டம் ஓடிவர?

"அக்கா"—



தலை நிமிர்த்திய அம்புலு தங்கையின் கண்ணோரங்களில் நீர் பளபளத்ததைப் பார்த்து திடுக்கிட்டாள்.

"என்னடி"—

"வந்துக்கா...வந்து..."

முகத்தில் கொஞ்சம் வெட்கம், நிறைய பயம்.

"என்ன காமு மென்று முழுங்கறே?"—

"வந்துக்கா... நா...வந்து அம்மா எங்கக்கா?'—

"உள்ளே இருக்கா - என்ன விஷயம்?"—

கோர்வையாகப் பேசத் தெரியாமல் முழித்துவிட்டு காமு விஷயத்தைச் சொல்ல பத்து கையை அவசரமாய் அலம்பிக் கொண்டு அம்புலு உள்ளே ஓடினாள்.

"அம்மா...?"

"என்ன அம்புலு?"—

"சித்த இங்க வாயேன்"—

குழந்தைக்கு பால் குடுத்துண்டு இருக்கேன். நீதான் இப்படி வாயேன்"—

அறைக்குள் அப்பாவும் இருக்கவே, அவருக்கு எதிரில் விவரத்தைச் சொல்ல அம்புலு வெட்கப் பட்டாள்.

ஒரு நிமிஷம் கழித்து தாமு வெளியே வந்ததும் சின்ன குரலில் அவள் பேச 'என்னடீது அம்மாவும் பொண்ணும் குசுகுசுக்கறேள்?' என்று வைத்தியநாதன் கேட்க, முகம் மலர "ஒண்ணுமில்லேன்ன. கல்யாண சமாசாரம்தான்; காமு பெரியவளாயிட்டா" என்று சந்தோஷத்தோடு கூறினவள் "எங்க அவ?" என்று கேட்டுக் கொண்டே கொல்லைப் புறத்துக்குப் போனாள்.

திடுமென்று அம்புலுவுக்கு தான் பெரியவளான நாள் ஞாபகத்துக்கு வந்தது.

இப்படித்தான்—அன்றும் ஒரு பிற்பகல் நேரம்தான்.

உள் அறையில் படுத்து தூங்கி எழுந்தவளுக்கு என்னமோ சங்கடம். கொல்லைப் புறத்துக்குப் போன போது காரணம் புரிந்தது.

ஆட்டுக் கல்லில் இட்டிலிக்கு அரைத்துக் கொண்டிருந்த அம்மாவை கூப்பிட்டு இப்போது காமு சொன்ன மாதிரியே கொஞ்சம் வெட்கம், நிறைய பயம் என்ற உணர்ச்சி கலவையோடு பேசியதும்—

அம்மா தட்டென்று மார்பில் அறைந்து கொண்டு 'அடிப்பாவி-பாவிப் பொண்ணே'— என்று கத்தினாள். அப்படியே குந்தி தலையில் அடித்துக்கொண்டு ஹோ என்று அழுதாள்.

"இப்ப இது வரலேனு இங்க யாருடீ குறை பட்டுண்டா? இத்தனை சுருக்க வரணுமா? அய்யோ நா— என்னடிம்மா பண்ணுவேன்? வயத்துலே நெருப்பை கட்டிண்டு இனிமே இவளை காபந்து பண்ணனுமே ......ஈஸ்வரா.........நா என்ன பண்ணுவேன்?"—

அன்று பூராவும் தாமுவின் அழுகை ஓயவேயில்லை: கூடவே அத்தையின் ஒப்பாரி வேறு.

தெரு பெண்டுகள் துக்கம் விசாரிக்கிற மாதிரி வந்து எட்டிப் பார்த்து விட்டுப்போனார்கள்.

ரேழி மூலையில் உட்கார வைக்கப்பட்ட போதுகூட, இத்தனை பேர்களுடைய அழுகையும், வேதனையும் எதற்காக என்பது அம்புலுவுக்குப் புரியவில்லை.



நாலாம் நாள் கிணத்தடியில் மனை போட்டு உட்கார வைத்து நாவிதரை கிட்டத்தில் வரச் சொன்னதும்தான் நிலவரம் தம்மென்று நெஞ்சில் அறைந்தது.

ஆள் வாட்ட சாட்டமாக, கண்ணுக்கு சிகப்பாய் அழகாய் இருக்கிறாளாம். நாளைக்கு ஏதாவது தப்புத் தண்டா நடக்க இந்த அழகே காரணமாகலாம்; இது ஆசாரமான விடாம். தாத்தா நித்திய அக்னி ஹோமம் பண்ணியவராம். சாஸ்திரத்தில் நம்பிக்கை உள்ளவராம். அவர் உயிரோடு இருந்தால் இப்படித்தான் நடக்க வேண்டும் என்று விரும்பி இருப்பாராம். இவளுக்கு அடுத்து இன்னும் இரண்டு பெண்கள் இருக்கிறார்களாம், இவள் அடக்க ஒடுக்கமாய் இருந்தால்தான் நாளைக்கு அவர்களுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் ஆகுமாம்—

என்னன்னவோ காரணங்கள் சொன்னார்கள். அப்பா-வும், அம்மாவும், அத்தையும் வாய் திறக்கா விட்டாலும் ஊர்ப் பெரியவர்கள், தயாதிக்காரர்கள் ஒன்றாய் நின்று கொண்டு என்னன்னவோ சொல்லி, ஒரு வழியாய் ஆகவேண்டியதை நடத்தி முடித்து விட்டார்கள்.

அன்று உடம்பில் ஏறியது தான் இந்த ஒன்பது கெஜநார் மடி—

ருத்திராட்சம், விபூதி, நார் மடி,மொட்டைத் தலை என்று சன்னியாசினி ரூபம் தரித்த போது அவளுக்கு வயசு பதினாலுதான் நம்புங்கள், பதினாலே பதினாலுதான்.

அன்று அடித்துக்கொண்டு அழுத அம்மாவா இன்று கல்யாணம் வந்திருக்கு என்று ஓடுகிறாள்?

சட்டென்று அம்புலு தன்னை உலுக்கிக்கொண்டாள்.

கூடாது. இப்படி ஆத்தாமைப்பட்டு இன்னொரு தரம் தப்பித் தவறிகூட நினைக்கக்கூடாது. காமு என் தங்கை. அவள் நன்றாக இருக்க வேண்டும். எனக்கும் சேர்த்துவைத்து அமோகமாக வாழவேண்டும்-வாழ்வாள்.

மனப்பூர்வமாக பிரார்த்தித்துக் தன்னை கணத்தில் சுதாரித்துக் கொண்டவள், ஆகவேண்டிய காரியங்களை கவனிக்க, அம்மாவுக்கு ஒத்தாசை பண்ண, உள் கட்டைப்பார்க்க விரைந்தாள்.

## 1940

தாமு காலமான வருஷம் காமுவுக்கு கல்யாணம் நடந்தது.

நினைத்தநினைப்பில்லாமல் அவள் தவறியதில் அத்தனை பேருக்கும் செமை அதிர்ச்சி.

அம்பி பிறக்கும் முன்பிருந்தே க்ஷணமடைந்து போகத்துவங்கியிருந்த உடம்பு, அந்த பிரசவத்துக்குப் பிறகு கட்டோடு தேருமல் நாளுக்கு நாள் பலஹீனப் பட்டு வந்தது என்னமோ நிஜம்தான் என்ருலும், இப்படி மொளுக்கென்று உயிரை விட்டு விடுவாள் என்று யாரும் நினைக்கவில்லைதான்.

மாசா மாசா தீட்டு வந்த பிறகு உடனே உதிரப் போக்கு நிற்காது, தொட்டுத் தொட்டு பத்துநாள் பன்னிரண்டு நாள் என்று இழுத்தடிக்கும். கடைசி ஆறு மாசத்தில் இந்த அவஸ்தை ஜாஸ்தியாக, சரி வயசாகிறது, தூரம் நிற்கத்தான் இந்தப்பாடு படுத்துகிறது என்று நினைத்து கை வைத்தியமாக எதை எதையோ பார்த்தார்களே ஒழிய தஞ்சாவூருக்கோ, திருச்சிக்கோ அழைத்துச் சென்று பெரிய படிப்பு படித்த வைத்தியரிடம் காட்டவேண்டும் என்று ஏனே, வைத்தியநாதனுக்குக்கூட புத்தியில் உரைக்கவில்லை.



ஒரு நாள்—இரவு, பத்து பதினொன்று இருக்கும்.

அய்யோ, அம்மாடி என்று வயிற்றை பிடித்துக் கொண்டு தாமு ஏகமாய் துடிக்க ஆரம்பித்தாள். கால் மணி போவதற்குள் ரத்தமான ரத்தம். மேலே பார்த்து, கீழே பார்த்து, தெரிந்த வரை வைத்தியம் பார்த்து, விடிந்ததும் வண்டி கட்டிக் கொண்டு தஞ்சாவூருக்குப் போய்ச் சேருவதற்குள் உபரியாய் ரத்தம் வெளியேறி விட, நாடி விழுந்து விட்டது.

கர்ப்பப் பையில் கட்டியாம், அறிகுறி கண்ட உடனேயே வந்திருந்தால் சிகிச்சை செய்திருப்பது சாத்தியமாம். இப்போது நிலைமை கட்டுக் கடங்காமல் போய் விட்டதாம் டாக்டர்கள் சொன்னர்கள்.

மறுநாள் பொழுது விடியும் போது தாமுவின் உசிர் பிரிந்தது.

வீட்டுக்கு வண்டியில் எடுத்து வந்து, அன்றே மேற் கொண்டு ஆகிற காரியங்களைச் செய்து முடித்து, இருபது வயசில் அந்த வீட்டின் பாரத்தை ஏற்கும் சுமைதாங்கியாக அம்புலு மாறின போது, அந்த பொறுப்புகளை அவள் முகம் சுளிக்காமல் ஏற்றுக் கொண்டாள்.

தாமு காலமான ஆறும் மாசம் இழவு நடந்த வீட்டில் சுப காரியம் ஒன்றை நடத்துவது குடும்பத்துக்கு நல்லது என்று ஊர்ப் பெரியவர்கள் ஏக மனதாகச் சொல்ல, அதற்கு தகுந்த மாதிரி தூத்துக்குடியிலிருந்து அந்த சம்பந்தம் வர, ஒரு தினுசில் காமுவின் கல்யாணம் குதிர்ந்தது.

தூத்துக்குடிக்கா? அத்தனை தூரத்துக்கா பெண்ணை அனுப்புவது என்று வைத்தியநாதன் முதலில் மலைத்-தாலும் 'அவனவன் வடக்கே பொண்ணை கொடுக்கக் கூட தயங்காத இந்த காலத்துலே, நீ தூத்துக்குடிக்குப்

பொண்ணை அனுப்ப ஆயிரம் யோசனை பண்ணறயே! நல்ல பையன். நல்ல குடும்பம். துறைமுக ஆபீஸ்லே வெள்ளைக்காரன் கீழே உத்தியோகம், நல்ல வருவாய். நாளைக்கு பொண் கண் கலங்காம சந்தோஷமா இருப்பா. இதையெல்லாம் நினைச்சுப் பாக்கறதை விட்டுட்டு, அனாவசிய, வேண்டாத யோசனை எதுக்கு? என்று உறவுக்காரர்கள் அடித்து பேசிய பின் வைத்தியநாதன் அம்புலுவைத் தேடிக் கொண்டு வந்தார்.

"நீ என்னம்மா சொல்றே?"—

இப்போதெல்லாம் இருபது வயசு சின்னப் பெண் தானே என்று அம்புலுவை யாரும், முக்கியமாய் வைத்தியநாதன் நினைப்பதே இல்லை. வாயைத் திறக்காமல், அடக்கத்துடன் அத்தனை காரியங்களையும் கவனித்து, திறம்பட குடும்ப பொறுப்பை அவள் சில வருஷங்களாகவே ஏற்று நடத்துவதைக் கண்டிருந்தாலும், தாமு போன பிறகு அந்த குறை கீழ் கடை குழந்தைகளுக்கு கடுகத்தனை கூட தெரியாதபடிக்கு குடும்பத்தை நடத்துவதும், நிலம் சம்பந்தமாக குடியானவனிடம் பின் கட்டில் நின்றபடியே பேசி, ஆக வேண்டியதை கவனிப்பதையும் அம்புலு செய்ய தலைபட்ட பிறகு, அவளைக் கேட்டே எதுவும் செய்வதை அவர் ஒரு வழக்கமாக்கிக் கொண்டார்.

அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த அம்புலு தலை நிமிர்ந்தாள்.

"நல்ல சம்பந்தம்னு அத்தனை பேரும் ஒட்டு மொத்தமாக சொல்ரு. மாப்பிள்ளை கண்ணுக்கு லட்சணமா இருக்கார். பெத்தவாளும் இங்க வந்தப்போ பதவிசா நடந்துண்டா. சித்தப்பா, மத்தவா சொல்ற தினுசிலே தூத்துக்குடி ஒண்ணும் அப்படி தூரப்பட்ட தேசம்னு எனக்குத் தோணலை. அப்புறம் உங்க இஷ்டம்ப்பா..."



மகள் பச்சைக்கொடி காட்ட, மேற்கொண்டு எதைப் பற்றியும் குழம்பிப் போகாமல் வைத்தியநாதன் காரியத்தில் இறங்கினர்.

வெள்ளியிலான குத்துவிளக்கு, தட்டு, சந்தன பேலா, குங்குமச் சிமிழோடு வெத்தலை, பழம், பாக்கு, கல்கண்டு வகையருக்களையும் எடுத்துக்கொண்டு இரண்டு பெரியவர்களுடன் ஒரு நல்ல நாளில் தூத்துக்குடிக்குப்போய் கல்யாணத்தை நிச்சியம் பண்ணிவிட்டு வந்தார்.

முகூர்த்தநாளை குறித்துவந்து, தன் சக்திக்கேற்ப சீர்செனத்திகள், மற்ற ஏற்பாடுகளைச் செய்தார்.

அம்மா இல்லை என்ற குறை தெரியாதபடி பின் கட்டோடு இருந்தபடியே அத்தனை வேலைகளையும் அம்புலு கச்சிதமாய் செய்தபோது ஊர் முழுவதும் மூக்கில் விரலை வைத்தது.

அவளுக்கு நடந்ததைப் போலவே காமுவுக்கும் நாலு நாள் கல்யாணம்.

விருந்து, ஊர்வலம் என்று எல்லாம் அதேமாதிரி அமர்க்களப்பட்டன.

காமு பெரியவளான பெண் என்பதாலும், இங்கேயே சாந்தி முகூர்த்தத்தை நடத்திவிடலாம் என்று பிள்ளையைப் பெத்தவர்கள் அபிப்பிராயப்பட்டதாலும், நாலாம் நாள் இரவு வைத்தியநாதனின் வீட்டிலேயே அதற்கும் ஏற்பாடு பண்ணப்பட்டது.

ஸாடின் மெத்தைகள்.

ஆளுக்கு இரண்டு தலைகாணிகள்.

மாலையிலிருந்தே சித்தியும், எதிர்வீட்டு மாமியும் முன் அறையை ஜோடிக்கத் துவங்கினர்கள்.

சரம் சரமாய் மல்லிகையைத் தொங்கவிட்டு, கட்டில் மேலே படுக்கையை விரித்து, அதன்மேல் கூடைப் புஷ்பங்களைத் தூவினர்கள்.

கட்டாய் மட்டிப்பால் வத்திகளை ஏற்றிவைத்து, ஒரு பக்கமாய் பட்சணங்கள், பழங்கள், சுண்ட காய்ச்சின குங்குமப்பூ பால் என்று அத்தனையும் வைத்தார்கள்.

'விளக்கெண்ணெ புட்டி எங்கேடீ?' என்று அம்புலுவைக் கேட்டு வாங்கி அதையும், உடுத்திக் கொள்ள ஒரு மாற்றுப் புடவையையும் அறையில் வைத்து, ஒன்பது மணி அளவில் சொல்லவேண்டிய மந்திரங்களை சாஸ்திரிகள் சொல்ல, சுமங்கலிப் பெண்டுகள் அலங்காரம் பண்ணிய பெண்ணை அறைக்குள் கொண்டுவிட்டு, கதவைச் சார்த்தி, அங்கேயே அரைமணிபோல உட்கார்ந்து என்னென்னமோ கேலி பண்ணி பாடல்களைப் பாடினர்கள்.

எதையும் காண, கேட்க மனசுக்கு வலு இல்லை என்பதை உணர்ந்து கிணத்தடியில் சென்று அம்புலு உட்கார்ந்து கொண்டாள்.

உள்ளே போனதும் காமு என்ன செய்வாள்?

மாப்பிள்ளை என்ன பண்ணுவார்?

பேசுவாரா?

என்ன பேசுவார்?

தொடுவாரா?

ஒரு ஆண் பிள்ளையின் ஸ்பரிசம் எப்படி இருக்கும்? கிளுகிளுப்பாய் இருக்குமா?

உடம்பும், மனசும் நெகிழ்ந்து போகுமா?

கிளுகிளுப்பு என்ருல் என்ன?



உருகுவது என்ருல் என்ன?

தொட்டுத் தடவி, அணைத்து...

அப்புறம்?

அப்புறம்?

முதல் முறையாக உடம்பின் அவஸ்தை தாங்க மாட்டாமல் போக, பச்சை ஜலத்தை விட்டு குளித்து விட்டு ஈரப் புடவை, ஜப மாலையுடன் துளசி மேடையில் உட்கார்ந்து ராம நாமத்தை ஜபிக்க துவங்கிய போது அவளையும் மீறிக் கொண்டு சூடான கண்ணீர் கன்னத்தில் கோடு போட்டது.

## 1952

அம்புலு கொல்லைக் கட்டில் குனிந்து உட்கார்ந்து கவனத்துடன் உளுந்தை உருட்டிக் கொண்டிருந்தாள்.

காலையில் எழுந்த கையோடு உளுந்தை ஊற வைத்திருந்ததில் சமையல் ஆனபிறகு, அதை நன்ருக களைந்து கறுப்புத் தோலை நீக்கி, சுத்தமாய் உலர்த்த முடிந்தது.

அப்பாவுக்கு சாப்பாடு போட்டுவிட்டு காய்ந்துவிட்ட உளுந்தை இப்போது உருட்ட உட்கார்ந்திருக்கிருள்.

பத்தினிப் பயிறு, கல், தூசி தும்பு இல்லாமல் சுத்தப்படுத்தி சாப்பிடுவதற்குள் எந்திரத்தில் போட்டு மாவாக திரித்து வைத்து விட்டால், நாளைக்கு மாவை இடித்து அப்பளத்தை இட்டுவிட தோதாக இருக்கும்.

என்ன, சின்ன படிக்கு ஒரு படி உளுந்து—இதை திரித்து பிசைந்து அப்பளமாக இடுவது ஒண்டி ஆளுக்குப் பெரிய காரியமா? ம்ஹூம் இல்லை.

பெருங்காயம், உப்பை நீரில் ஊற வைத்து, பிரண்டையை நசுக்கி சாறு எடுத்து, மாவில் கலந்து, சீரகத்தைத் தேய்த்துப் போட்டு பிசைந்து, அம்மியில் விளக்கெண்ணை தடவி தம் தம்மென்று புரட்டி, புரட்டி காலையிலேயே இடித்து வைத்துக் கொண்டு விட்டால், இன்று மாதிரி சமையல் ஆனதும் உட்கார்ந்து சாயங்-காலத்துக்குள் தங்கமாய் இட்டு விடலாமே!

மனசுக்குள் கணக்குப் போட்டுக் கொண்டு விறு விறு வென்று அம்புலு காரியங்களைச் செய்வது இன்று, நேற்று வழக்கமல்ல.

கண் பார்த்தால், கை செய்யும் ரகம் அவள்.

மாவு இடிப்பதும், பிசைவதும், இடுவதும் இரண்டாம் பேருக்குத் தெரியாது; ஆனால் கட்டுகட்டாய் அப்பளம் தயாராகிவிடும். வீட்டு உபயோகத்துக்கு உளுந்து, அரிசி அப்பளங்களைத் தானே தயாரிப்பதோடு, கல்யாணமாகி விட்ட தங்கைகள் இரண்டுபேரும் பிறந்தகத்துக்கு சீராட வந்து திரும்பும் போது, தப்பாமல் தான் இட்ட வடகம், அப்பளங்களை, பட்சணங்களோடு தாராளமாய் கொடுத்து அனுப்புவாள்.

எந்திரத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு கை கையாய் உளுந்தை மேல் துவாரத்தில் இட்டு சுற்றின அம்புலுவுக்கு, அம்மாவுக்கு அடுத்த வாரம் திவசம் என்பது நினைவுக்கு வந்தது.

சாஸ்திரிகளிடம் சொல்லி விட்டாரா என்று அப்பாவிடம் கேட்க வேண்டும்.

அம்மா போய் இது எத்தனாவது திவசம்?—

காமுவுக்கு கல்யாணமான வருஷம் அம்மா காலமானாள் ம்ம்... அது நாற்பதாம் வருஷமா? ஆமாமாம்...



யுத்தம் மும்முரமாய் நடந்த சமயம் ஆயிற்றே அது அப்படியென்றால் இது எத்தனாவது திவசம்? பன்னிரண்டா? அடேயம்மா' திரும்பி பார்ப்பதற்குள் நாள்தான் எத்தனை வேகமாக ஓடுகிறது!

இந்த பன்னிரண்டு வருஷங்களில் குடும்பத்தில் என்னென்ன மாற்றங்கள்!

காமு, சாரதா இருவரையும் நல்ல இடத்தில் கொடுத்-தாகிவிட்டது. அவளுக்கு மூன்று குழந்தைகள், இவளுக்கு இரண்டு வயசில் ஒரு பெண்.

அம்மா சாகும்போது அம்பி நாலு வயசு குழந்தை!

இப்போது என்னைவிட நாலு விரகடை உயரமாய் அவன் வளர்ந்து விட்டான்!

பதினாறு வயசுக்கு அவனுக்குத்தான் என்ன வளர்த்தி? என்ன புத்தி?

தம்பியை நினைக்கையில் உள்ளுக்குள் பூப்பூவாய் பாசம் பூக்க, அம்பியை வரச் சொல்லி கடிதாசு போட்டேளாப்பா — என்று அப்பாவை மறக்காமல் கேட்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் கிராமத்தில் ஐந்தாவது வரைக்கும்தான் படிக்கமுடியும். மேற்கொண்டு படிக்கவேண்டுமானால் வண்டி கட்டிக்கொண்டு தஞ்சாவூருக்குப் போய் வர-வேண்டும். ஒரு வருஷம்போல அன்றாடம் காலையிலும், மாலையிலும் லோல் பட்டு படித்த பிறகு அவன் படும் கஷ்டம் சகியாமல் அவனை எங்க கிட்ட விட்டுடேண்ணா; நா பாத்துக்க மாட்டேனா. என்று சித்தப்பா சொல்ல அம்புலுவின் சம்மதத்துடன் அம்பியை திருச்சிக்கு வைத்தியநாதன் அனுப்பி வைத்தார்.

தம்பியைப் பிரிந்து இருப்பதில் அவ்வளவாக அம்புலுவுக்கு இஷ்டம் இல்லைதான்— ஆனாலும், ஆண்

பின்னை—நாளைக்கு நல்ல படிப்பு இல்லாவிட்டால் எப்படி? என்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு சரி என்று சொல்லிவிட்டாள்.

அம்பியாலும் அக்காளைப் பார்க்காமல் இருக்க முடியாது. அக்கா, அக்கா என்று அவள் தலைப்பைப் பிடித்துக் கொண்டு சுற்றாமல் இருக்க முடியாது. திருச்சிக்குப்போன பிறகும் மாசம் ஒரு தடவையாவது கிராமத்துக்கு ஓடி வந்து விடுகிறான்.

சின்னபடி உளுந்தையும் திரித்து பாத்திரத்தில் வாரி வைத்த பின் அம்புலு எழுந்தாள்.

கொல்லையிலிருந்து வாழை இலை ஒன்றை நறுக்கிக் கொண்டு வருகையில் அப்பா சொம்புடன் பின்பக்கம் போகவருவதைப் பார்த்து நின்றாள்.

"அப்பா—வயிறு சரியில்லையா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா."

"கார்த்தாலேந்து நாலஞ்சுதரம் கொல்லைப் பக்கம் போயிட்டு வந்திட்டேள் போல இருக்கே!"

"வெளியிலே போகலேம்மா... ஒண்ணுக்குதான் அடிக்கடி வர்றது. போயிட்டு காலலம்பிண்டு வரேன். அதென்னமோ தெரியலை, கொஞ்ச நாளாவே நினைச்சு நினைச்சு ஒண்ணுக்கு வர்றது குளிர்காலம்கூட இல்லே..."

"தீர்த்தம் நிறைய குடிக்கறேள். அதான் வர்றது."

"இருக்கும், இருக்கும்."

சொம்புடன் வைத்தியநாதன் பின்னால் செல்ல, சமையல்கட்டில் இலையுடன் சாப்பிட உட்கார்ந்த அம்புலுவுக்கு அப்பாவுக்கு இது வியாதியாக இருக்கும் என்ற சந்தேகம் கடுகத்தனை கூட எழாதது நிஜம்.



டயாபடீஸ்—என்ற பேரெல்லாம் நகரங்களோடு நின்ற காலம் அது.

கிராமத்தில் சர்க்கரை வியாதியைக் கண்டார்களா, இல்லை அதற்கான சிகிச்சையைத்தான் உணர்ந்திருந்தார்களா?

ம்ஹூம்—ஒன்றும் இல்லை.

அடிக்கடி தாகமெடுப்பதும், நினைத்து நினைத்து சிறுநீர் கழிப்பதும், வெல வெலவென்று உடம்பு பலஹீனப்பட்டு வருவதையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்தி பார்க்கக் கூட அந்தநாளைய மக்களுக்கு தோன்றாதபடி வைத்தியநாதனும், அம்புலுவும் வயசாகிறதால் உடம்புக்குத் தள்ளாமை வருகிறது என்று விஷயத்தை அத்தோடு விட்டு விட்டார்கள்.

அடுத்த வாரம் அம்மாவின் திவசத்துக்காக வந்த அம்பி, இரண்டாம்நாள் திரும்பிப் போய்விட்டு, பத்து நாட்களில் பள்ளி விடுமுறை என்று மீண்டும் ஊருக்கு வந்தான்.

லீவு நாட்களில் தம்பியின் உடம்பைத் தேற்று-கிறேன் பேர்வழி என்று உட்காரவைத்து வேளா வேளைக்கு தினுசு தினுசாய் அம்புலு சமைத்துப் போட்டாள்.

பருப்புருண்டை குழம்பு பண்ணினாள். அடையும் எரித்த கறியும் செய்தாள். உப்பு, வெல்லபிடி கொழுக்கட்டைகள், சேவை, புட்டு என்று நாளுக்கு ஒன்றாக வக்கணையாய் செய்தாள்.

புதன், சனி எண்ணெய் தேய்த்து குளிக்க வைத்தாள்.

இதனூடே துவரை நிலத்தில் விளைந்துவர, ஒ மூட்டை பயிரையும் கையோடு சீர் பண்ணுவதைய செய்ய அவள் தவறவில்லை.

முற்றத்தில் துவரையை கொட்டி, செம்மண் [illegible] விட்டு பிசைந்து, கலந்து குவித்து, நடுவில் ஒரு மூங்கில் குச்சியை நட்டு, மூலை கட்டினாள்.

இரண்டு நாட்களில் துவரை முளைத்துவிட, இறுகி விட்ட பயிர் குவியலை, செருகியிருந்த குச்சியை அசைத்து கலைத்தாள். எந்திரத்தில் ஒவ்வொரு நாளும் இரண்டு படிகளாக உடைத்து, உரலில் இட்டு குத்தி, புடைத்து நல்ல பருப்பை தனியாக சாக்கில் மூட்டை கட்டி வருஷாந்திரத்துக்கு என பத்திரப்படுத்தினாள்.

உடைக்கும்போது விழுந்த குருணையை அடைக்கு, பருப்பு உசிலிக்கு என தனியாக கொழித்து எடுத்து விட்டு பொட்டை மாட்டுக்காக கொல்லையில் சாக்கில் போட்டு அடிக்கினாள்.

இந்த வேலைகளிலெல்லாம் அம்பியும் கூடமாட அக்காவுக்கு உதவவே செய்தான்.

எந்திரத்தைச் சுற்றினான். உடைத்த துவரை தோல் பிரிய மர உலக்கையால் குத்தினான். சாக்கில் போட்டு கட்டினான். தூக்கி வைத்தான்.

"உனக்கு என்னடா தலை எழுத்து, போடா அந்தண்டை என்று அம்புலு அதட்டினால், சிரித்தான்.

'உனக்கு மட்டும் தலை எழுத்தாக்கா? ஒரு நாள் விடாம இந்தாத்துக்காக லோல் படறியே? கொஞ்சம் தான் நானும் பண்ணறேனே" —என்றான்.

அவன் இருந்து விட்டால் கிணற்றிலிருந்து தண்ணீர் இழுப்பது அவன்தான், பெரிய தவலை குண்டான்களில் உள்ளே நீர் பிடித்து வைப்பதும் அவன் தான்.

குளித்துவிட்டு சுத்த பத்தமாய் ஆவக்காய் ஊறு காய்க்கு மாங்காய் நறுக்கித் தருவது அவன் தான்.



இன்னும்... இன்னும்...

பெண்களாக இருந்தும் தங்கைகள் காட்டாத அனுசரணையை இவன் காட்ட, அந்த அன்பை தனியாக இருக்கும் போது நினைத்து அம்புலு மாய்ந்து போவாள்.

'கடவுளே எனக்கு ஒரு குறையும் இல்லே. என் தம்பியை ஆயுஸோட நல்லபடியா வை' என்று இரண்டு வேளையும் விளக்கேற்றி வைத்து விட்டு நமஸ்கரிப்பாள்.

யாராவது அவளிடம், என்னமோடிம்மா உன் தலைல பிரும்மா இப்படி எழுதிட்டானே! என்று அங்கலாய்த்தால் எனக்கு என்ன குறை மாமி—என் தம்பி ஒருத்தன் போதுமே. அத்தனை பேரையும் ஈடு செய்ய? என்று நிஜமான சந்தோஷத்தோடு கூறுவாள்.

மொத்தத்தில் 'தாமு பெத்தாளே ஒழிய, அம்புலு தான் வாஸ்தவத்துலே அம்பிக்கு தாயார். என்று ஒட்டு மொததமாக அவர்களை அறிந்தவர்கள் சொல்லும் அளவுக்கு அவர்களுக்கு நடுவில் ஒரு அலாதி பிணைப்பு இருக்கவே செய்தது.

## 1956

"நன்னா இருந்தானே! என்ன ஆச்சுடா, அம்பி? போற வயசாடா அவனுக்கு? இரண்டு மாசம் முன்னால கூட நன்னா இருந்தானே?"

"என்ன பண்ணறது மாமா! நாங்க கொடுத்து வைச்சது அவ்வளவுதான். நன்னா தான் இருந்தார். திடும்னு என்னமோ கேடு வந்து புகுந்துண்டுடுத்து... போயிட்டார்..."

"என்ன பண்ணித்துடா?"

''புதுசா ஒன்னும் இல்லே மாமா வழக்கமா இருந்த பலகீனம்தான். ஆனா பாருங்கோ, போன மாசம் இருந்தாப்பல இருந்து கால் வீங்க ஆரம்பிச்சுதாம். என்னப்பா இப்படி இருக்கேனு அக்கா கேட்டிருக்கா 'தெரியலேம்மா'னு சொல்லலவே, அக்கா அதோட விட்டுட்டா, அதுக்கப்புறம் உடம்பு ரொம்ப இளைச்சு போயிட்டார். நன்னா தான் சாப்பிட்டார். என்ன ஏதுனு இளைப்புக்கு காரணமே புரியலை. இங்கே வைத்தியர் கிட்ட காட்டினப்ப சூரணம் தந்தார். நாலு நாள் முன்னால தலை சுத்தறது'னு உட்கார்ந்தவர், மூச்சு இரைக்கறது. சரியா ஸ்வாசம் விட முடியலைனு சொன்னதும் அக்கா பயந்துண்டு வைத்தியரை கூப்பிட்டு அனுப்பி இருக்கா. அவர் வந்து ரத்த அழுத்தம் ஜாஸ்தியா இருக்குனு மருந்து கொடுத்திட்டு எனக்குத் தகவல் சொல்லி அனுப்பினார். நா வர்றப்ப அப்பாக்கு நினைவு தப்பிடுத்து. தஞ்சாவூருக்கு கூட்டிண்டு போகலாம்னு டாக்ஸி அழைச்சுண்டு வரத்துக்குள்ள பிராகண போயிடுத்து மாமா....'

அம்பியின் குரல் தழுதழுத்தது.

கூடத்தில் அவனோடு இரண்டு அக்கா புருஷன்களும் நாலைந்து அக்கம் பக்கத்து ஆண்களும் அமர்ந்திருந்தனர்.

''மனுஷானு பிறந்துட்டா எல்லாரும் ஒருநாள் போக வேண்டியவா தானே...ம்ம்...தேத்திக்கோடா... உங்கக்காவ நினைச்சுப் பாரு—அப்பா இருந்தார் அவளுக்கு ஆதரவா...ம் இனிமே அவ பாடுதான் பாவம்...ஒண்டியா தவிக்கப்போறா ..''

அம்பி சரக்கென்று தலையைத் தூக்கினான்.

என்ன மாமா அப்படி சொல்லிட்டேள்! நா இல்லையா? எங்க அக்காக்கு நா இல்லியா?''

அப்போது மட்டுமல்லாமல் அப்பாவின் காரியங்கள் முடிந்து, கிரேக்கியம் ஆன பிறகும் விடாமல் தொடர்ந்து



அம்பி இந்த வார்த்தைகளை எல்லாரிடமும் சொன்னதோடு அல்லாமல் அன்று இரவு இனி ஆவது என்ன என்ற பேச்சு எழுந்த போதும் இதையே அடித்துப் பேசினான்.

முற்றத்து படிக்கட்டில் காமுவும், சாரதாவும் அமர்ந்திருந்தார்கள்.

ஊஞ்சலில் இரண்டு மாப்பிள்ளைகளும், சித்தப்பாவும்.

சமையல் கட்டு வாசலில் சித்தி, அம்புலு.

இந்த பக்கம் அம்பி,

''நாளைக்கு நா ஊருக்கு கிளம்பணும். பதினைஞ்சு நாள் லீவுதான் எனக்கு. என்ன அம்பி, நீ என்ன பண்ணறதா இருக்கே? என் கூட வந்து படிப்பை முடிக்கப் போறியா? இல்லே, அக்கா தனியா இருக்-கானு, இங்கேயே தங்கி நிலத்தை பாத்துக்கப் போறியா''

யோசிக்காமல் அம்பி சட்டென்று பேசினான்.

''நா எப்படி சித்தப்பா வர்றது? அக்காவுக்கு இனிமே நா தானே எல்லாம்.''

''அதான் கேட்டேன்''.

''நா நன்னா யோசனை பண்ணி பாத்துட்டேன். தொடர்ந்து படிச்சு என்ன பண்ண போறேன்? இன்னும் இரண்டு வருஷ படிப்பு முழுசா இருக்கு... அக்காவ தனியா விட்டுட்டு அப்படியாவது என்ன படிப்பு வேண்டி கிடக்கு? நா இங்கேயே இருந்து நிலபுலன் விவகாரத்தை கவனிச்சுக்கறதுதான் சரி, இல்லியா அத்திம்பேர்?''

காமுவின் புருஷன் இரண்டுங் கெட்டானாக தலை ஆட்ட இரண்டாமவன் அதுகூட சொல்லாமல் வாளா திருந்தான்.

காமு தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

"நேத்து வக்கீல் மாமாவை எங்காத்துக்கார் பாத்தாராம். அப்பா வீட்டையும், கிழக்கு பக்கமாக இருக்குற இரண்டு காணி நெலத்தையும் அக்கா பேர்ல எழுதி வைச்சிருக்கறதை சொன்னாராம்—இது பத்தி உனக்கு ஏற்கனவே தெரியுமாமே ஏன் எங்க கிட்ட சொல்லலே?"

"ஆமா, தெரியும். எனக்கு மட்டும் இல்லே, சித்தப்பாக்குக் கூட தெரியும். அப்பா இரண்டு வருஷம் முன்னாலியே இதை எழுதி வைச்சுட்டார். இல்லையா சித்தப்பா?"

"அப்படி எழுத இங்க என்ன முறை, பிள்ளை-யில்லாத சொத்தா! அதான் ராஜா வாட்டம் நீ இருக்கியே!'

சாரதா தன் பங்குக்கு பேச அம்பி எரிச்சலுடன் அவளைப் பார்த்தான்.

"என்னை அம்போனு அப்பா விட்டுடலேக்கா. ஆத்தாங்கர பாசத்துலே இருக்குற நாலு காணியையும் என் பேர்ல தானே எழுதி வைச்சிருக்கார்"

"அது போதுமா?"—

"ஏன் போதாமா?"

"அவ மட்டும்தான் அப்பாக்கு பொண்ணு! நாங்கள்ளாம் இல்லியா?"

இங்கே தொட்டு, அங்கே தொட்டு இரண்டு அக்காக்களும் விஷயத்துக்கு வர அம்பி கோபமாக விழித்தான்.

"அம்புலுக்காவும் நீங்களும் ஒண்ணா? அதெப்படி நாக்கு கூசாம இந்த வார்த்தைய உன்னால சொல்ல முடியறது?"

"அவ இப்ப என்ன சொல்லிட்டானு நீ இந்த கத்தல் கத்தறேடா?"



பெரிய அத்திம்பேர் வரிந்து கட்டிக் கொண்டு கிளம்ப, மூண்ட சண்டையை சித்தப்பா மேலே விழுந்து தடுக்க, "அம்பி இங்க கொஞ்சம் வாடா" என்று சமையல் கட்டிலிருந்து அம்புலு அழைந்தாள்.

முன்னால் வந்து நின்ற தம்பியிடம் சின்ன குரலில் அவள் பேசினாள்.

"நா ஒருத்தி இங்க பெரியவளா இருக்கறதை மறந்-துட்டு, ஆளாளுக்குப் பேசினா என்னப்பா அர்த்தம்? ம்? அப்பா எழுதி வைச்சா என்ன? நாம அதை அப்படியே ஏத்துக்கணும்னு சட்டமா? அவருக்கு ஏதோ ஆத்தாமை எழுதி வைச்சார் அதவிடு நா ஒண்ணு சொல்றேன். கேட்பியோன்னோ? காமுவும், சாரதாவும் கூட இந்தாத்து பொண்கள் தான், அவாளுக்கும் இந்த சொத்துலே பாத்-யதை இருக்கு என் பேர்ல இருக்குற இரண்டு காணி நிலத்தை அவாளுக்கு ஆளுக்கு ஒரு காணியா எழுதிக் கொடுக்க ஏற்பாடு பண்ணிடு. புருஷன் கிட்டே பிறந்-தாத்து சொத்துனு சொல்லிக்க அவாளுக்கும் ஏதாவது கொடுக்கறது நமக்கும் பெருமை..."

"என்னக்கா நீ..."

"குறுக்க பேசாம கேளுடா... அப்புறம் இப்ப உன் படிப்பை பாதிலே விட்டுட்டு இங்கே நீ ஓடி வர அப்படி என்ன நிர்பந்தம்? நீ டிகிரி படிப்பு படிக்கணும்னு அப்பா ஆசைப்பட்டார். என் விருப்பமும் அதாண்டா. இரண்டு வருஷத்துல படிப்பை முடிச்சுட்டு நீ ஆபீஸர் வேலை பார்க்கணும்னு நா கனா கண்டுண்டு இருக்கறதை கெடுத்துடாதடா— இந்த நில வரும்படியெல்லாம் நாளைக்கு உனக்கு கல்யாணம், குடும்பம்னு ஆச்சுன்னா போரும்... நா சொல்றதைக் கேளு .. படிப்பை விடாம படிச்சுடு... இங்க எனக்கு ஒரு பயம் இல்லே... தனியா இருக்க எந்த கஷ்டமும் இல்லே... உடம்பு தெம்பா தான் இருக்கேன்... என் பேச்சை தட்ட மாட்டேங்கற நம்பிக்கைல தாண்டா இத்தனை பேச்சு பேசறேன்.... என்னடா?"

கண்களில் நீர் துளிர்க்க அவள் பேசினதுக்கு அம்பி கட்டுப்பட்டான்.

அவள் சொன்னபடி காமுவுக்கும், சாரதாவுக்கும் தலா ஒரு காணி நிலம் கொடுக்க ஏற்பாடு செய்தான். அம்புலுவின் நிலத்தை அல்ல. தன் நாலு காணியிலிருந்து இரண்டை பிரித்துக் கொடுக்க முன் வந்தான்.

"என்னடா இது அநியாயம்?" என்ற அம்புலுவிடம் "இதுலே நா உன் பேச்சை கேட்க மாட்டேன்க்கா என்னை வற்புறுத்தாதே— என்று கராராய் சொன்னவன், அவள் விருப்பப்படியே திருச்சிக்குச் சென்றான். கவனத்துடன் படிப்பை படித்து முடித்தான். ஒருநாள், இரண்டு நாட்கள் நடுவில் நேரம் கிடைத்தாலும் கிராமத்துக்கு ஓடி வந்து அக்காவுக்கு உதவியாக இருந்து விட்டுப்போனான்.

இரண்டு வருஷங்கள் கழித்து சொன்ன வாக்கு தப்பாமல் முதல் வகுப்பில் தேறி, ஸதர்ன் ரயில்வேயில் ஒரு பொறுப்பான உத்தியோகத்தில் சேர அம்பி சென்னைக்குச் சென்ற போது என்னமோ ஆகாசத்திலிருந்து சந்திரனையே பரித்துக் கொண்டு வந்து விட்ட சந்தோஷம் அம்புலுவினுள் ஏகமாய் பரவி இருந்தது.

## 1960

வேலைகள் முடிந்து கிணற்றடிக்கு வந்த அம்புலு பச்சைத் தண்ணீரை வாறி முகத்திலும், கழுத்திலும் அடித்துக் கொண்டு ஈரத்தை துடைக்காமல் அங்கேயே மேடையில் உட்கார்ந்தாள்.

காற்று மந்தஹாஸத்துடன் ஆளைத் தழுவியது. கழுத்தடியில் குண்டூசியாய் புறப்பட்டிருந்த வேர் குருவுக்கு அந்த காற்றும், ஜிலுஜிலுப்பும் அப்பாடி என்றிருந்தது.



நாளைக்கு தம்பி வரப் போவதற்காக நாள் பூராவும் பாடுபட்டு பதார்த்தங்கள் செய்திருந்தது களைப்பைத் தரமுட்டாக்கை லேசாய் தளர்த்திக் கொண்டு கிணற்று கட்டையில் முதுகை சாய்த்துக் கொண்டாள்.

இன்னும் இருட்டத் துவங்கவில்லை.

யார் வீட்டு ரேடியோவிலிருந்தோ, மதுரை மணி 'அய்யரின்' எப்ப வருவாரோ பாட்டு ஒலிபரப்பானது காதில் தெளிவாக வந்து விழுந்தது.

கிராமத்தில் சில வருஷங்களாக உண்டாகிவிட்ட மாற்றங்களை எண்ணுகையில் இது தான் பிறந்து வளர்ந்த ஊர்தானா என்று சந்தேகம் வியப்பாய் அம்புலுவுக்குள் தலை நீட்டியது.

வீட்டுக்கு வீடு மின்சாரம் வந்து விட்டது. பளிச் சென்று ஸ்விட்சை தட்டினால் எரியும் விளக்குகள், மூன்று கைகளை பரத்திக் கொண்டு மிராசு வீட்டிலும், வக்கீல் வீட்டிலும் சுழலும் காற்றாடி. மெட்ராஸிலும், திருச்சியிலும் வித்வான்கள் பாடுவதை நொடியில் இங்கு ஒலிபரப்பும் ரேடியோ—என்று ஒவ்வொன்றாக ஊருக்குள் நுழைந்து பதினைந்து இருபது வருஷங்கள் ஆகிவிட்டது கூட பெரிசில்லை; ஆனால் பம்பு செட்டு போட்டு தண்ணீர் இறைப்பதும், ஊருக்கே பஸ் வந்து போவதும், சினிமா கொட்டகை வந்து விட்டதும், ஹை ஸ்கூல் ஆரம்பிக்கப்பட்டு விட்டதும் ...அடேயம்மா! பட்டிக் காடாகவா இது இருக்கிறது!

திருச்சிக்கு ஏரோப்ளேன் வருகிறதாமே!

அம்பி கூட ஒருநாள், அக்கா நீ 'ம்' னு சொல்லு—ப்ளேன்ல உன்னை மெட்ராஸுக்குக் நா கூட்டிண்டு போறேன்—என்று சொல்லி இருக்கிறான்.

விளையாட்டுக்குச் சொன்னானோ, இல்லை நிஜமாசத் தான் சொன்னானோ!

அது சரி, வினை பிறகு ஊர் எல்லையைத் தாண்டி இராத நானு திருச்சிக்கும், மெட்ராஸுக்கும் போகத் துணிவேன்—அதுவும் ப்ளேனில்?

அம்புலுவுக்கு சிரிப்பு வந்தது. கூடவே யோசனையும் எழுந்தது.

ப்ளேன் என்றால் என்ன?

நாற்பது, அம்பது பேர்கள் சவாரி பண்ண முடியும் என்று அம்பி சொல்கிறானே, அத்தனும் பெரிய சமாசாரம் வானத்தில் எப்படி பறக்க முடியும்? கனம் தாங்காமல் தொப்பென்று விழுந்து விடாதோ!

அம்புலுவுக்கு வரவர விஞ்ஞானத்தின், மனிதனின் எந்த வளர்ச்சியை நினைத்து ஆச்சரியப்படுவது என்று புரியவில்லை.

இட்லி அரைக்க மிஷின் வந்து விட்டதாம். பட்டனை தட்டினால் விறு விறு வென்று சுற்றி பந்தாக மாவை அரைத்து தருகிறதாம்!

பழ ரஸம் பண்ண மிஷினும், துணி தோய்க்க கூட மிஷினும்.

"அமெரிக்காலேதான் இதெல்லாம்னு நினைக்காதேக்கா, இப்ப நம்ம ஊருக்கே அத்தனையும் வந்துடுத்து... மெட்ராஸிலே பதினாலு மாடி கட்டிடம் ஒண்ணு கட்டி இருக்கா பாரு—நீ பாத்தா அசந்து போவே மேல் மாடிக்குப் போக லிஃப்ட் இருக்கு. அங்கேயிருந்து பார்த்தா மோட்டார், கார், பஸ்ஸெல்லாம் கடுகு கடுகா தெரியறது...எப்பக்கா நீ அங்க வந்து எல்லாத்தையும் பாக்கப்போறே! நானும் விடாம நச்சரிக்கறேன்—நீ தான் காதுலியே வாங்க மாட்டேங்கறே..."



வேலையில் சேர்ந்து விட்ட இந்த நாலு வருஷங்களாகவே அம்பி அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை.

"இங்க தனியா ஏன் இருக்கணும்? படிடானு சொன்னே: படிச்சு முடிச்சுட்டேன், நல்ல வேலைல சேருடானு சொன்னே! சேர்ந்துட்டேன். நானூறு ரூபா சம்பளம் நம்ம இரண்டு பேருக்கும் போறாதா? நிலத்தை குடியானவன் தானே பாத்துக்கறான்! அப்புறம் நீ ஏன் இங்க இருக்கணும்... அங்கே வந்துடுக்கா..."

வேலைக்கு சேர்ந்த உடனே அம்பி இப்படிச் சொன்னதும் இவனை என்ன சொல்லி சமாளிப்பது என்று யோசித்து பக்குவமாய் அம்புலு பேசினாள்.

"இப்பத்தானேடா வேலைல சேர்ந்திருக்கே -நாலு மாசம் போயி வேலையும் புது ஊரும் உனக்கு புரிபடட்டும். அப்புறமா நா வராம என்னப் பண்ணப் போறேன்?" என்று சமாதானம் சொன்னாள்.

சரி என்று அந்த வார்த்தையை ஏற்றுக் கொண்டு அம்பி, சில மாசங்கள் கழித்து திரும்ப இந்த பேச்சை எடுப்பதற்குள் சித்தப்பா மூலம் ஜீயபுரத்து சம்பந்தத்தை அவனுக்கு பேசி முடித்தாள்.

அகிலா அவளைப் பெற்றவர்களுக்கு ஒரே பெண் அவளைத் தவிர பாக்கி அனைவரும் பஞ்சபாண்டவர் மாதிரி ஐந்து அண்ணன், தம்பிகள்.

பெரிய இடம் என்று இல்லாவிட்டாலும் பங்கரை இல்லை.

கையில் நாலாயிரம் கொடுத்து, வைர மூக்குத்தி, இரட்டை வடம் சங்கிலி என்று ஓரளவுக்கு நன்றாய் செய்ய தயாராய் நின்ற இடம்.

அகிலா கண்ணுக்கு லட்சணமாய் இருந்தாள். உயரமாய், மாநிறம், பெரிய கண்கள், நிறைய தலைமயிர் என்று பார்க்க பளிச்சென்று இருந்தாள்.

கல்யாணம் ஜீயபுரத்தில் நடந்தது.

"நா எதுக்குடா நல்ல காரியம் நடக்கிற எடத்துலே." என்று கல்யாணத்துக்கு வர அம்புலு நிர்தாட்சிண்யமாக மறுத்து விட்டாள்.

"ஏன், நீ வந்தா என்னவாம்? உன்னை மாதிரி இருக்கிற வாள்ளாம் இப்ப எங்கயும் போறு, வரு தெரியுமோன்னோ?"

"நீ இப்படி இருக்றகிது அமங்களமா எனக்குத் தோணலியேக்கா.. நான் நினைக்கறது தானே முக்கியம்—ஊர் கிடக்கு—அது எல்லாத்துக்கும் தான் பேசும்"—

"தாய்க்குத் தாயா என்னை வளர்த்த நீ இல்லாம நா போக மாட்டேன்க்கா... நீ வந்தா தான் ஆச்சு..."

நாளுக்கொன்றாக சொல்லி அம்பி பிடிவாதம் பிடித்தது அம்புலுவின் உறுதிக்கு முன் வலு இல்லாமல் போனது உண்மை.

'எவா எப்படி வேணு சுத்தட்டும் அம்பி—என் மனசுக்கு வேணுங்கறதை நா செய்ய மாட்டேன். அவ்வளவுதான்.'

தள்ளி நில்லுன்னு என்னை இதுவரைக்கும் யாரும் சொல்ல நா இடம் கொடுக்கலே—இனிமேயும் எதுக்கு?—'

"உனக்கு நா உசத்தின்னு ஊர், உலகத்துக்கும் அப்படியே இருக்கணும்னு எதிர்பார்க்கறது தப்பில்லையா? என் விருப்பப்படியே என்னை இருக்க விடுடா— நா அங்க வந்தா தானு? மாலையும் கழுத்துமா நீங்க இங்க வந்துட்டா, நா கண் குளிர பாத்திடுவேன். வீணு பிடிவாதம் பண்ணுதட? சொல்றதைக் கேளு..."

வழக்கம்போல அம்பி கேட்டான். ஆனால் தாலி கட்டின கையோடு டாக்ஸி வைத்துக் கொண்டு பெண்டாட்டி சகிதம் வந்து அக்கா காலில் விழுந்தான்.



கூடவே "இவதான் எனக்கு எல்லாம். இவ மனசு கோணும நாம என்னிக்கும் நடந்துக்கறது எனக்கு முக்கியம்" என்று நடுகூடத்தில், நாலு பேர் நடுவிலேயே புது மனைவியிடம் சொன்னான்.

அந்த முறை சென்னைக்குப் புறப்பட்ட போதும் 'என் கூட வந்துடுக்கா' என்ற பல்லவியை அம்பி பாடவேச் செய்தான்.

"நன்னு இருக்குடா—புதுசா கல்யாணம் ஆகி சின்னஞ்சிறுசுகள் போறப்ப நா எதுக்கு கூட, பூஜை வேளைல கரடி மாதிரி. அவளைப் பெத்தவ வர்ரு—அப்புறம் என்ன? கொஞ்ச நாள் போகட்டும், பாத்துக்கலாம்."

கொஞ்ச நாள் என்பது இப்போது இரண்டு வருஷங்களாகிவிட்டன. இன்னும் கிராமத்தை விட்டு ஒருதரம் கூட மெட்ருஸைப் பார்க்க அசைந்தவளில்லை அம்புலு.

இதனடுவில் நாலு மாசத்தில் ஒரு தரம், ஏழு மாசத்தில் ஒரு தரம் என்று அகிலாவுக்கு இரண்டு முறை குறை பிரசவம் ஆக, சில நாட்கள் ரெஸ்டாக அவள் பிறந்தகத்தில் இருக்க என ஜீய புரததுக்கு வந்த போது மட்டும் தன் கண்டிப்பையும் மீறிக் கொண்டு மனசு கேட்காமல் தம்பி மனைவியை பார்க்க என ஜீயபுரத்துக்கு போய் வந்தாள் அம்புலு.

முதல் முதலாக செய்த பஸ் பயணம் பத்து நிமிஷத்துக்கு ஒரு தரம் பஸ்சை நிறுத்தச் சொல்லி வாந்தி எடுத்து அமர்க்களப்படுத்தி விட்டாள்.

ஜீயபுரத்தில் சம்பந்தி வீட்டில் அத்தனை வசதி போறுத மாதிரி தோன்ற, பணத்தை லட்சியம் பண்ணுமல் டாக்ஸியில் அகிலாவை படுக்க வைத்து ஊருக்குக் கூட்டி வந்தாள். மூன்று மாசங்கள் தன்னோடு வைத்துக் கொண்டு உடம்பை நன்கு தேற்றி தம்பியிடம்

அனுப்பினாள்...''நீ பாலும், தயிருமாக வைத்து ஊட்டிய ஊட்டத்தில் அகிலா இப்போது உடம்பு சௌக்கியமாக இருக்றாள், டாக்டர் கூட சந்தோஷப்பட்டார்.'' என்று தம்பி எழுதின கடிதாசை பக்கத்து வீட்டு குட்டியை விட்டு பத்து தரம் படிக்கச் சொல்லி சந்தோஷித்தாள்.

அப்போது தம்பியை பார்த்ததுதான், கிட்டத்தட்ட எட்டு மாசங்களாகி விட்டன. 'ஒரு மாசம் முழுசாய் இருக்கப் போகிறேன்' என்று எழுதிப்போட்டு விட்டு நாளைக்கு வரப் போகிறான்.

அதற்கான முஸ்திப்புக்களில் இரண்டு நாட்களாக அம்புலு இறங்கி விட்டாள்,

ரவை இடித்து பூரணம் வைத்து சோமாஸ் செய்தாள்: டப்பா நிறைய மனோப்பூ பிழிந்தாள். பயத்த லாடு என்றால் அம்பிக்கு இஷ்டம் என்று அதையும் இன்று செய்து விட்டாள்.

நாளையிலிருந்து நாளுக்கு ஒன்றாக வக்கணையாய் சமைத்துப் போட என்னென்ன அயிட்டம் என்பதைக் கூட மனசில் குறித்துக் கொண்டு விட்டாள்.

திட்டமிட்டபடி மறுநாள் காலை எட்டு மணி அளவில் பெண்டாட்டியுடன் அம்பி வந்து இறங்கினான்.

பகல் பூராவும் ஊர்க்கதை பேசிவிட்டு'இரவு சுற்றி வளைக்காமல் தான் தீர்மானித்துக் கொண்டு வந்திருப்பதை வெளியில் சொன்னான்.

"என் கூட வந்திடு, இங்க தனியா இருக்கதேனு நா எத்தனையோ தடவை சொல்லியாச்சு: ஏனோ நானு சொல்றதை நீ காதுலியே வாங்காம இருக்கே. கிராமத்தை விட்டு வரதலே உனக்கு என்ன கஷ்டம், சொல்லு? உன்னை இங்க விட்டுட்டு ஒவ்வொரு தரம் புறப்-



படறப்பவும் நா படற பாடு எனக்குத்தான் தெரியும். இந்த தடவை நீ என்ன சொன்னாலும் நா கேக்கறதா இல்லே. அகிலா இப்ப திருப்ப உண்டாயிருக்கா. இரண்டு மாசம் பூர்த்தி ஆயிடுத்து. இந்த முறைக்கு நா அவளை ஜீயபுரத்துக்கு அனுப்பப் போறதில்லை மெட்ராஸ்லேயே வைச்சிண்டு பிரசவம் பார்க்க உத்தேசம். இப்ப நீ என் கூட வந்தா எல்லாத்துக்கும் எனக்கு சௌகரியம். ஆத்துக் கவலை, இவளைப் பத்தின கவலை இல்லாம நா இருப்பேன். சுயநலத்தோட உன்னை நா கூப்பிடலை; ஸ்வாதீனமா எல்லாத்தையும் கவனிச்சுக்க வானு கூப்பிடறேன். வழக்கம் போல மாட்டேன்னு சொன்னா, என் வேலைய ராஜினாமா பண்ணிட்டு நா இங்க உன்னோட வந்துடறதா இருக்கேன். உனக்கு எது சரினு தோணறதோ செய். ஒரு மாச லீவுல நான் வந்திருக்-கறதே, உன்னோட பேசி, கூட அழைச்சுண்டு போக எல்லா ஏற்பாட்டையும் பண்ணறத்துக்குதான்... அப்புறம் உன் இஷ்டம்.''

பதில் ஏதும் பேசாமல் அன்று இரவு முழுவதும் அம்புலு யோசித்தாள்.

கிட்டத்தட்ட அறுநூறு ரூபாய் வரும் வேலையை விட்டு விட்டு கிராமத்துக்கு வருவதோ இல்லை, அங்கே பிள்ளைதாச்சி பெண்ணை தனியாக தவிக்க விட்டு விட்டு வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பதோ சரியில்லை என்று தோன்ற, காவேரிக்கரை, பிறந்த ஊரோடு இத்தனை வருஷங்கள் வாழ்ந்தது. போதும், இனி தம்பியின் மன நிம்மதி முக்கியம் என்று தீர்மானித்து. மறு நாள் விடிந்ததும் அவனை ஏறிட்டு ''உன் இஷ்டம் போல செய் அம்பி'' என்ற போது சின்னதாக சிரிப்பொன்று அவள் அதரத்தில் பூத்திருந்தது.

# 1961

மருந்தை புகட்டி விட்டு, பாலாடையை குழந்தைத் தலையைச் சுற்றி மூன்று தரம் சுற்றிய பின் அம்புலு அதை கீழ வைத்தாள்.

மருந்து குடித்த குழந்தையாக அழுது ஆர்பாட்டம் பண்ணாமல், பாப்பா ங்கூ என்று சுவாரசியமாக அத்தையை வம்புக்கு இழுத்தாள்.

"உனக்கு சரியா பேசிண்டு இருக்க எனக்கு இப்ப நேரம் இல்லை பொண்ணே—சமர்த்தா தானே விளையாடிண்டு இரு."

பாயை விரித்து, குழந்தையை தரையில் கிடத்தியவள் சிரிக்கும் அந்த பூச்செண்டை விட்டு நகர மனமில்லாமல் அங்கேயே உட்கார்ந்தாள்.

ஆறுமாச குழந்தைக்கு பாப்பா நல்ல வளர்த்தி. சிகப்பு நிறமும், மூக்கும்,முழியும் அப்படியே நீ தான்க்கா இவ" என்று அம்பி சொல்லும்போது என்னமோ தானே ...ண்டாக்கி இந்தப் பிஞ்சை பெற்று விட்ட திணுசில் பெருமை உள்ளுக்குள் பளபளக்கும்.

அம்மா பெயரான தர்மாம்பாளை வைத்துவிட்டு அதைச் சொல்லி அழைப்பது மரியாதை இல்லை என்று அம்புலு கருதியதில் குழந்தை பாப்பா—வானாள்.

தம்பியின் விருப்பப்படி அந்த முறை அவன் ஊருக்கு வந்தபோது அத்தனையும் ஒழித்துக் கொண்டு சென்னை வரக்கு தப்பாமல் கூடவே அம்புலு கிளம்பி ...ட்டாள்.



குடியானவனை அழைத்து நிலத்தை கவனமாய் பார்த்துக் கொள்ளச் சொன்னாள். அறுப்பு காலத்துலே நா வந்துடுவேன். வெள்ளாமை வழக்கமாக இருக்கறத்துக்கு குறையாம பாத்துக்கோ, என்றாள்.

வீட்டில் இருந்த சாமான்களை உள் அறையில் போட்டு, வீட்டை பூட்டினாள்.

'யாருக்காவது வாடகைக்கு விடலாமாக்கா?' என்று தம்பி சொன்னபோது வேண்டாம் என்று தலையாட்டி" அறுப்பு, அப்ப, இப்பனு நாம வந்துண்டு போயிண்டு இருந்தா தான் நெல்லும், துவரையும் உருப்படியா வீட்டுக்கு வரும். இல்லாட்டா ஏமாந்த சோணகிரி அகப்பட்டானு அவனவன் தலையிலே மிளகாய் அரைச்சுடுவான— நாம வந்து போறப்ப தங்கிக்க நமக்குனு ஒரு இடம் இருக்கறது தான் சரி' எதுக்கு ஒருத்தருக்கு பாரமாய் இருக்கணும்?" என்று சொல்லி விட்டாள்.

எதிர் வீட்டு தாயாதிகாரர்களிடம் வீட்டுச் சாவியைக் கொடுத்து "தென்னை மரங்களிலே நிறைய காய் இருக்கு அப்பப்ப யாரையாவது விட்டு பறிச்சு உள்ளே போட்டுடச் சொல்லுங்கோ—மாமா" என்றாள்.

ஆக தெரிந்த வரையில் சகல ஏற்பாடுகளையும் பண்ணி விட்டே தம்பியுடன் சென்னைக்குப் போக ரயில் ஏறினாள்.

ரயில் வண்டியை கிட்டத்தில் அதுநாள் வரை அவள் பார்த்தது இல்லை. ஆதலால் கருப்பு என்ஜினும், நீள உடம்புமாக இருந்த வண்டியைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுப் போனாள்.

"சின்னக் குழந்தை மாதிரி ஜன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து வண்டி வேகமாய் மரம், வீடு, செடி, கொடி, மலைகளைத் தாண்டிக் கொண்டு ஓடிய போது அம்மாடி என்று மனசுக்குள் வியந்தாள்.

எக்மோரில் காலடி வைத்ததும் அந்த கூட்டமும்,
சத்தலும், மனிதர்களின் அவசரமும், வாகனங்களின்
எண்ணிக்கையும் அவளை பிரமிக்க வைத்தன.

திருவிழா மாதிரி என்ன கூட்டம் இது!

நித்தியப்படியே இந்த ஊரில் இத்தனை கூட்டம்
உண்டா?

இல்லை, இன்றைக்கு ஏதாவது விசேஷமா?

இப்படி மேலே விழுந்து கொண்டு ஓடுகிற அளவுக்கு
அப்படி என்ன அவசர வேலை?

எதற்காக இந்த கத்தல் கத்துகிறார்கள்? காது இவர்-
களுக்கெல்லாம் செவிடா? மெதுவாகப் பேசி நிதானமாக
காரியங்களைச் செய்தால் என்ன?

நூறு கேள்விகளை மனசுக்கு கேட்டுக் கொண்ட-
வளுக்கு ரொம்ப சீக்கிரமே ஓஹோ இவர்கள்
பட்டணத்து ஜனங்கள் இவர்கள் இப்படித்தான் மெஷின்
மாதிரி எல்லாவற்றிலும் பரபரப்பாக இருப்பார்கள்
ஓட்டமும், கத்தலும், அவசரமும் இவர்கள் வாழ்க்கையில்
ஒரு முக்கிய அங்கம் என்பது நன்கு புரிந்து போனது.

அம்பியின் வீடு மாம்பலத்தில் இருந்தது. மாடியில்
வீட்டுக்காரர்கள். கீழே இவர்கள். சின்னவீடு தான்,
ஆனாலும் தனி போர்ஷன் என்பதால் வாடகை கொஞ்சம்
அதிகம். இரண்டு அறை சமையல்கட்டு. தனி கக்கூஸ்.
பாத்ரூம் என்று இருந்த போர்ஷனுக்கு வாடகை நூற்றி
நாற்பது ரூபாய் இதற்கா! நூற்றி நாற்பது ரூபாயா

''எதுக்குடா அம்பி இத்தனை வாடகை கொடுக்கணும்
என்று வந்து இறங்கின கையோடு மனசாகாமல்
அம்புலு கேட்டதும் அவன் சிரித்தான்.

''இது மலிவுக்கா. இப்ப இதை காலி பண்ணு,
இதுக்கு இருநூறு கொடுக்க ஆள் ரெடியா இருக்கு.



எட்டினாப்பல பஸ் ஸ்டாண்ட், மார்க்கெட், சிவாவிஷ்ணு
கோவில் இருக்கறத்துக்கு நிஜமா இந்த வாடகை
குறைச்சல் தாங்க்கா...''

அது என்னமோ சரிதான்.

ஆனாலும், தண்ணி நாள் முழுக்க வராது. காலையில்
இரண்டு மணி நேரங்கள் வரும், அப்புறம் மாலையில் ஒரு
மணி நேரம். அவ்வளவுதான். அதற்குள் தொட்டி ட்ரம்,
அண்டா, பக்கெட் என்று தேவையான ஜலத்தை
பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

நினைத்து நினைத்து இஷ்டத்துக்கு தண்ணீரை செல
வழிக்க முடியாது. சாயங்காலம் வரை இது தான் என்று
சிக்கனமாக இருக்க வேண்டும்.

காலையில் ட்யூப் கட்டி தொட்டியை அம்பி நிரப்பி
விடுவான். சமைக்க, குடிக்க தேவையானதை அம்புலு
பிடித்து உள்ளே வைத்துக் கொள்வாள்.

வந்து இறங்கினதும் குடத்தைத் தூக்கிக் கொண்டு
தண்ணீர் பிடிக்க அகிலா வந்தபோது, நன்னா இருக்குடீ...
இனிமே நீ எதுக்கு கனத்தை தூக்கணும்! அதான் நா
வந்துட்டேனே. என்று சொல்லியபடி அவளை உட்காரச்
சொல்லிவிட்டு தான் அந்த குடத்தை கையில் வாங்கிக்
கொண்டாள்.

அதற்குப் பிறகு அந்த வீட்டின் அத்தனை வேலை-
களையும் கோபுரத்தை சுமக்கும் பொம்மையாக தன்
தோள்களில் அம்புலு தூக்கி வைத்துக்கொண்டது நிஜம்.

தூங்கி எழுந்து காபி போடுவதிலிருந்து சகலமும்
அவள்தான் செய்தாள்.

காலை சமையல், மதியடிபன், இரவு சமையல் என்ப தோடு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை பிள்ளைதாய்ச்சிப் பெண் என்று ருசியாய் பட்சணங்களை செய்து கொடுத்தாள்.

ஒருநாள் விட்டு ஒருநாள் இட்லி, தோசைக்கு அரைத்தாள். தன் வழக்கத்தை விடாமல் எந்திரத்தில் மாவு திரித்தாள், அப்பளம் தயாரித்தாள், வருஷாந் திரத்துக்கு வடாம் பிழிந்தாள், ஊறுகாய் போட்டாள்

இன்னும் சொல்லப் போனால் வேலைக்காரி வேலை அத்தனை சுத்தமாக இல்லை என்பதால் "அவளுக்கு எதுக்கு தண்டத்துக்கு பத்து ரூபா? நம்ம மூணு பேருக்கு விழற பாத்திரத்தை என்னால தேய்க்க முடியாதா?" என்று சொல்லி அவளை நிறுத்திவிட்டு அந்த வேலையும் தானே செய்யலானாள்.

"ஏன் தான் வீணா சிரமப்படுவியோ! எனக்கு இத்தனை தினுசா நாளுக்கொண்ணு சமையல் வேண்டாம்— கடையிலே அத்தனை பொடி வகையறாவும், அப்பளம் வடாமும் செஞ்சு விக்கிறான். கஷ்டப்படாம வாங்கிங்-கலாங்கா— அவளையும் கூடமாட வேலை பண்ணச் சொல்லு ஒண்டியா லோல் படாதே—"

அம்பி கரடியாய் கத்தி பார்த்துவிட்டான்' ஆனால் அம்புலு காதில் வாங்கினால்தானே!

"நா செய்யாத வேலையா? இதுலே என்னடா பெரிய சிரமம்!" என்று மட்டும் பொறுக்க மாட்டாமல் போனால் சொல்லி சிரிப்பாள்.

உட்கார வைத்து கவனித்துக் கொண்டதில் அகிலா உடம்பு தேறி, குறித்த சமயத்தில் சுக பிரசவத்தில் பெண்ணை பெற்றெடுத்து மாசம் ஆறுப் போகிறது. இன்னமும் அவளை சமயல் கட்டினுள் அம்புலு அனுமதிக்கவில்லை.



மாடி வீட்டு மாமி கூட வாய்க்கு வாய் "இந்த மாதிரி மாமியார் யாருக்கு கிடைப்பா! பெத்த தாயாரை விட உசத்தியா கவனிக்கற மாமியார் யாருக்கு கிடைப்பா?" என்று சொல்லி காண்பிப்பது உண்டுதான்.

குழந்தையைத் தரையில் விட்டு, அவள் சிரித்து வம்புக்கு இழுப்பதில் தன்னை மறந்து உட்கார்ந்திருந்த அம்புலு கூடத்து கடிகாரம் ஏழு மணி அடிப்பதைக் கேட்டு சட்டென்று நிமிர்ந்தாள்.

ஏழா!

இன்னும் பாதி சமையல் பாக்கி இருக்கிறதே!

எட்டுமணிக்கு அம்பி சாப்பிட உட்கார்ந்து விடுவானே?

நாழியாகிவிட்ட உணர்வோடு குழந்தையின் கன்னத்தில் 'போடி போக்கிரி'—என்று தட்டிவிட்டு எழுந்தவள் பரபரப்புடன் சமையல் கட்டுக்குள் நுழைந்து தேங்காயைத் துருவத் தொடங்கினாள்.

## 1970

"இப்ப எப்படிப்பா இருக்கு?"

"ம்ம்... அப்படியே தான்க்கா இருக்கு... அம்மா... ஆ..."

அம்பியால் பொருந்தி படுக்க இயலவில்லை. உட்கார்ந்தான். தலைகாணியை வயிற்றில் அமுக்கிக் கொண்டான். தாளமாட்டாமல்போனால் அம்மா... ஆ... என்று அரற்றினான். உதடுகளைக் கடித்து விழியோரத்தில் எட்டிப் பார்த்த நீரை அடக்கினான்.

தம்பியின் அவஸ்தை அம்புலுவுக்கு சகிக்க முடியாமல் இருந்தது.

மூன்று, நாலு மாசங்களாகவே இந்த வேதனை வந்து விட்டது.

வயிற்றில் முணுக் முணுக்கென்று வலிக்கிறது என்றான். தொடர்ந்து மார்புக்கூடு முடியும் இடத்தில், வயிறு தொடங்கும் இடத்தில், எரிச்சலாய் எரிகிறது என்றான். அப்புறம் தொட்டால் வலிக்கிறது என்றான். வயிற்றில்கைகளை குறுக்காக மடித்து கட்டி கூனி உட்கார்ந்து வலிக்கிறதே—வலிக்கிறதே என்று தவித்தான்.

வலி ஆரம்பித்த உடனேயே தனக்குத் தெரிந்த கை வைத்தியத்தை அம்புலு செய்து பார்த்தாள். பூச்சி இருக்குமோ என்ற ஊகத்தில் இரண்டு தரம் பேதிக்குக் கொடுத்து பத்தியமாய் மிளகு ரசம், பருப்புத் துகையல் பண்ணிப் போட்டு பார்த்தாள்: கண்டபடி வெயிலில் அலைவது சூட்டை கிளப்பி விட்டிருக்குமோ என்று எண்ணி பக்கத்து விட்டிலிருந்து நாலு செம்பருத்திப் பூக்களை பறித்து வந்து கொதிக்க வைத்து, கஷாயம் இறக்கி பால் சர்க்கரையுடன் கலந்து கொடுத்தாள்: பெருஞ்சீரகத்தை கருக வறுத்து, ஜலம் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி தந்து பார் தாள். வெளிக்கு நன்றாக போகாமல் இருந்தாலும் வயிற்றை வலிக்கலாம் என்ற நினைப்பில் அன்றாடம் ராத்திரி இரண்டு பூவன் பழங்களைக் கொடுத்து, பாலோடு சாப்பிடச் சொல்லிப் பார்த்தாள்.

ம்ஹூம்,

எதற்கும் கடுகத்தனை பலன் இல்லை.

சூடோ, அஜீரணமோ இல்லை, இது நிச்சயமாய் வேறு ஏதோ வயிற்று வலிதான் என்பது புரிந்ததும் டாக்டரைப் பார்த்து வா என்று தம்பியை நச்சரித்து அனுப்பினாள்.



வயிற்றில் புண்ணாம். இரப்பை வாயில் புண் தோன்றி இருக்கிறதாம். காரம், புளி, சுத்தமாய் கூடாதாம். வெறும் வயிறாக இருப்பதும் தவறாம். இரண்டு மணிக்கொருதரம் பாலோ ஹார்லிக்ஸோ சாப்பிட வேண்டுமாம்.

டாக்டர் மருந்தை விட சாப்பாட்டில் அதிக கவனத்தை செலுத்தும்படிச் சொல்ல, வெகு ஜாக்கிரதையுடன் காரம், புளி சேர்க்காமல், புளிக்காத தயிர் சாதம், தேங்காய் சாதம், பொரித்த குழம்பு என்று அம்புலு தம்பிக்கு செய்து போட்டாள்.

ஒரு மாசம் வரை கொஞ்சம் அடங்கி இருந்த மாதிரி இருந்து விட்டு, திரும்ப இரண்டு மாசமாய் வலி வாலாட்டத் துவங்கிவிட்டது.

டாக்டரும் என்னென்னவோ மருந்துகளை மாற்றிக் கொடுத்து பார்த்து விட்டார்: அம்புலுவும் மிளகாயையும் புளியையும் அவன் கண்ணில் படாதபடி சாப்பாடு தயார் பண்ணி போட்டு பார்த்து விட்டாள்.

எல்லாவற்றுக்கும் பெப்பே தான்.

வலி அதிகமானதில், அம்பி சரியாக சாப்பிட மறுத்தான். வேலைக்குப் போகாமல் வீட்டிலேயே சுருண்டு படுத்தான். ஆள் பாதியாகத் தேய்ந்து போனான்.

"வயத்திலே புண் இருக்கிறது தெளிவாயிடுத்து இதை சரியாக்கறதுக்கு வழி என்னாங்கறதை யோசிக்கணும்ப்பா. பெரிய ஆஸ்பத்திரிக்குப் போய் பாருனு இந்த டாக்டர் சொல்லிட்டதை செய்யாம படுத்து இருந்தா எப்படி? எழுந்திருப்பா"

"என்னால் முடிஞ்சதை பார்த்திட்டேன். இனிமேயும் கட்டுப்படலைன்னா, ஆபரேஷன் பண்ணறதைத் தவிர எனக்கு வேற வழி இருக்கறதா தோணலை. ஸர்ஜனுக்கு லெட்டர் தரேன். போய் பாருங்க'—என்று டாக்டர்

சொல்லி வாரம் என்றாகி விட்டது. பெரிய டாக்டரைச் சென்று பார்த்தால் ஆபரேஷன் செய்து விடுவாரோ என்ற பயத்தில் அம்பி போகவே இல்லை.

“அக்கா சொல்றதை கேளுங்கோ. பொம்பளைகள் நாங்க தைரியமா இல்லியா? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி அவஸ்தைப் படப்போறேள்? நா கூட வரேன் புறப்படுங்கோ”

மாறி மாறி அக்காவும், மனைவியும் தைரியம் சொல்ல அன்று அம்பி ஸர்ஜனைச் சென்று பார்த்தான்.

அவர் வயிற்றைத் தட்டிப் பார்த்தார். பிசைந்து பார்த்தார். மறுநாள் ‘பேரியம் மீல்’ எக்ஸ்ரே எடுக்கச் சொன்னார்.

எடுத்தார்.

புண் பரவி இருக்கிறதாம். ஆபரேஷன் செய்யறதைத் தவிர வேறு வழி இல்லையாம். தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

வீட்டுக்கு வந்து அக்காவின் அருகில் அமர்ந்து அம்பி யோசனை பண்ணினான்.

“பண்ணனும்னா, சீக்கிரமா செய்யறதுதான் நல்லது அம்பி. பகவான் மேல் பாரத்தைப் போட்டுட்டு ஆகறதை கவனிக்கலாம். பயப்பட ஒன்னும் இல்லேனு சொன்னாரோன்னோ?”

“மேஜர் ஆபரேஷன் தான்க்கா...வயத்தை கிழிச்சு புண் உண்டாயிருக்கற பகுதிய வெட்டி எடுத்துட்டு தைச்சிடுவாளாம். பயப்பட ஒன்னும் இல்லேனு டாக்டர் சொன்னாலும் நமக்கு பயமாதானே இருக்கு! நாலு குழந்தைகள், நாமெல்லாம் இவரை அண்டித்தானேக்கா



இருக்கோம்? இவருக்கு ஒண்ணுனா நாம என்ன பண்ணறது சொல்லுங்கோ?”

புருஷன் வலியில் அவஸ்தைபடுகிறானே என்ற நினைப்பைவிட நாளைக்கு அவனுக்கு ஏதாவது ஆனால் தானும் குழந்தைகளும் கஷ்டப்படுவோமே என்ற எண்ணத்தில் அகிலா பேசியது அம்புலுவுக்கு கோபமூட்டியது.

“அச்சான்யமா நீ ஏன் என்னென்னமோ பேசறே? சுவர் இருந்தாத்தானே சித்திரம்? இவன் நன்னா இருக்கறது முக்கியம்டீ... முதல்ல இவனுக்கு தைரியம் சொல்லி இவன் உடம்பை சரியாக்கிற வழியைப் பார்க்காம, வெட்டியா வேண்டாத பேச்சு பேசாதே—”

“அவ சொல்றதும் நியாயம் தானேக்கா... குழந்தைகள் நாலு, நாம! மூணு பேர்; என் சம்பளத்திலே இந்த ஏழு ஜீவன்களும் வாழ்ந்தாகணும். ஊர்லேந்து நெல் வரதோபிழைக்கறோமோ!... இரண்டு மாசமா நா ஒழுங்கா ஆபீஸுக்குப் போகலே. இனிமே ரொம்ப லீவு கிடையாது. மெடிக்கல் லீவும், சம்பளமில்லாத லீவும் எடுத்தாத்தான் நாலு மாசமாவது ஆபரேசன் முடிஞ்சு ஆத்தோட இருந்து உடம்பை தேத்திக்க முடியும். ஆபரேசன் செலவுக்கு வேணா ஆபீஸிலேந்து பணம் கொடுப்பா. அப்புறம், நாலு மாசம் நாமெல்லாம் சாப்பிடறது எப்படி? உபரி செலவுகளுக்கு என்ன பண்ணறது? எனக்கு நிஜமா ஒண்ணும் புரியலைக்கா...”

இரண்டு நிமிஷங்கள் பேசாதிருந்துவிட்டு சின்ன குரலில் அம்புலு பேசினாள்.

“ஆபரேசன் பண்ண வேண்டி வரும்னு டாக்டர் சொன்னதுலேந்தே, இது பத்தி நான் யோசிச்சுண்டுதான் இருக்கேன். நான் சொல்றதைக் கேட்பியோ? என் பேர்ல இருக்குற நிலத்தை, போன தடவை ஊருக்குப்போனப்-

பவே குடியானவன் ஒரு விலை போட்டுக் கொடுத்திடுங்-கம்மான்னு கேட்டான். விளைச்சல் இருந்தாக் கூட நம்ம-கிட்ட வெள்ளாமை சரியா இல்லேன்னு பொய் சொல்லி கொடுக்க வேண்டிய நெல்லை கொடுக்காம ஏமாத்தறான். வரவர இவன்களோட நம்பளால மன்றாடவே முடியலை. பேசாம ஒரு விலையைச் சொல்லி வித்துட்டா என்ன? பாடுக்கு பாடும் இல்லே— பணத்துக்கு பணமும் கிடைக்கும்."

முதலில் அம்பி இந்த யோசனையை ஏற்கவில்லை. "அதெப்படிக்கா உன் நிலத்தை விக்கறது? வேணா என்னோட இரண்டு காணியை விக்கலாம்!" என்று சொல்லிப் பார்த்தான். ஆனால் 'எனக்கு எதுக்குடா நிலமும்,நீச்சும்— நீ இருக்கறப்போ!' என்று அம்புலு பிடிவாதமாய் இருக்க,கடைசியில் அந்த முடிவுக்குப் பணிந்தான்.

ஊருக்கு விவரமாய் தகவல் எழுதிப் போட்டுவிட்டு அம்புலு தனியாய் போய் நாலு நாள் தங்கி வக்கீல் மாமாவின் உதவியோடு, இரண்டு காணியை விற்று பணத்துடன் வந்தாள்.

பதினைந்து நாட்களில் அம்பிக்கு ஆபரேசன் நடந்தது.

இரவும், பகலும் ஆஸ்பத்திரியிலேயே பழி கிடந்து இமைகளை மூடாமல் விழித்து, தம்பிக்கு பணிவிடை செய்தாள்.

விட்டுக்குக் கூட்டிவந்த பிறகும் கட்டிலை விட்டு அவனை இறங்க விடாமல் பார்த்துக் கொண்டாள்.

வெளியில் காட்டாமல் மனசுக்குள்ளேயே ஏகமாய் கவலைப்பட்டதாலோ, அல்லது அப்பாவின் வியாதி பரம்பரையாய்மகளுக்கு வந்ததாலோ, இல்லை இரண்டுமே தான் காரணமோ, அந்த வருஷம் முடிவதற்குள் தாகம்,



அடிக்கடி சிறுநீர் கழித்தல் பலகீனம் என்று ஒவ்வொன்றாக அவளுக்குள் குடி ஏறினதில் ரொம்ப சீக்கிரமே டயபடீஸ் அம்புலுவை ஸ்திரமாக ஆக்கிரமித்துக் கொண்டது

## 1971

"போன தடவை நா பாத்ததுக்கு இப்ப வெயிட் குறைஞ்சு இருக்கிங்களே, சரியா சாப்பிடறிங்க இல்லே?"

"அதுக்கெல்லாம் ஒண்ணும் குறைச்சல் இல்லே டாக்டர்."

"அப்ப என்ன? தம்பி உடம்பை நினைச்சு ரொம்ப கவலைப் பட்டீங்களா, பெரியம்மா? அவர்தான் இப்ப நல்லா ஆயிட்டாரே!"

டாக்டர் சிரிப்புடன் கேட்க பதில் சொல்லாமல் அம்புலு உட்கார்ந்திருந்தாள்.

"உடம்பை என்ன பண்ணுது,விவரமா சொல்லுங்க

"நா சொல்றேன் டாக்டர். அக்காவைக் கேட்டா எனக்கு ஒண்ணும் இல்லேனுதான் சொல்லுவா...சில மாசங்களாவே இவளுக்கு உடம்பு சரியில்லே டாக்டர். என் ஆபரேஷன் கலாட்டாலே இவளை யாரும் கவனிக்கலை. அடிக்கடி தாகம் எடுதது தண்ணி குடிக்கறா. யூரின் போறா...வெல வெலனு படுத்துக்கறா. இப்படி சோம்பி படுத்துக்கற டைப் இவ இல்லே ..ஆபரேஷன் முடிஞ்சி, வீட்டிலே ரெஸ்ட்டா இருக்கறப்ப அக்கா ராத்திரிலே எழுந்து பின்பக்கம் போயிட்டு வர்றதை கவனிச்சேன். என்னக்கானு கேட்டேன். ஒண்ணுமில்லேனு சொல்லிட்டா. அது நடந்து மூனு நாலு மாசம் இருக்கும். உடம்பு ரொம்ப இளைச்சிப் போனதும் நான் சண்டை போட்டு கூட்டிண்டு வந்திருக்கேன்."

"ம்ம்...உங்க பேமிலிலே யாருக்காவது டயபடீஸ் இருந்திருக்கா?"

"தெரியாது டாக்டர். ஆனா அப்பா சாகறதுக்கு முன்னால் சில வருஷங்கள் இப்படித்தான் தாகம் எடுத்து அடிக்கடி யூரின் வந்து சிரமப் பட்டார்னு நினைக்கறேன்."

டாக்டர் அன்றே அம்புலுவின் ரத்தம், மூத்திரத்தை டெஸ்ட் செய்யச் சொல்லி, மறுநாள் வரச் சொன்னார்.

போனார்கள்.

"நா சந்தேகப்பட்டபடி உங்கக்காவுக்கு டயபடீஸ் அதாவது சர்க்கரை வியாதிதான். நீங்க சொன்ன விவரக் கள்லேந்து உங்க அப்பாவுக்கு இந்த வியாதி இருந்திருக்கும்னேதோணுது, கவலைபட ஒண்ணும் இல்லே. ஆனா: இனிமே டயட்டுலே இவங்க ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். பதினைஞ்சு நாளுக்கு ஒரு தரம் யூரின் டெஸ்ட் பண்ணறது நல்லது. வீட்டிலேயே செய்தாலும் சரி இல்லேன்னா இங்கே வந்து பார்த்தாலும் சரி. கண்ட்ரோல்ல வைச்சிருக்கிறது முக்கியம்" என்று சொன்னவர் அம்புலு பக்கம் திரும்பினார்.

"சர்க்கரை வியாதிய நினைச்சு நீங்க வீணா பயப்படாதீங்க பெரிம்மா. இந்த காலத்திலே அது சகஜம். சாப்பாட்டுலே அளவா இருந்திட்டா பாதி பிரச்சனை தீர்ந்துது. அரிசி சோறு ஒரு வேளை மட்டும் கொஞ்சமா சாப்பிடுங்க. பாக்கி வேளைக்கு கோதுமை, ராகி, அப்படி ஏதாவது சாப்பிடுங்க."

அம்பி குறுக்கிட்டான்.

"அக்கா சாப்பாட்டுலே ரொம்ப ஸ்ட்ரிக்ட் டாக்டர். ஒரு வேளைதான் சாப்பிடுவா. ராத்திரி தினமும் பலகாரம் தான்."



"அப்படின்னா பகல்லே சோறு சாப்பிடுங்க. ராத்திரி கோதுமைக் கஞ்சி, உப்புமா, ராகி கஞ்சினு சாப்பிடுங்க. இந்த வியாதிக்கு அரிசி எமன். உருளை, சேப்பு, சேனை காரட், பீட் ரூட் மாதிரியான கிழங்கு வகைகளை தவிர்த்திடுங்க கோஸ், கீரை, பீன்ஸ், மற்ற பச்சை காய்கறிகளை தாராளமா சேர்த்துக்குங்க. சர்க்கரை, வெல்லம் கிட்ட வரக்கூடாது. எப்பவாச்சும் இனிப்பு சாப்பிட்டா உடனே மூத்திரத்தை டெஸ்ட் பண்ணிடுங்க. கொழுப்பு சத்தையும் விட்டுடறது நல்லது. மருந்தை மட்டும் நம்பறதைவிட, சாப்பாட்டு மூலமா இதை நல்லா கட்டுப் படுத்திட முடியும். அப்புறம், முக்கியமா, இனிமே நீங்க எதுக்கும் கவலைப்படக் கூடாது. வீணா ஓர்ரி பண்ணிகிட்டா இந்த வியாதி அதிகமாத்தான் ஆவும். என்ன பெரிம்மா?"

வீட்டுக்கு வந்து மனைவியிடம் அத்தனையும் விவரமாகச் சொல்லி, ஏற்கனவே இந்த விரதம், அந்தக் கிழமைனு சொல்லிண்டு மாசத்துலே பாதி நாள் உபவாசம் இருப்பா, அந்த டாக்டர் வேற இப்படிச் சொல்லிவிட்டதில் இனிமே நாக்குலே எதையும் வைக்க மாட்டா. இப்ப நமக்கு ரொம்ப போருத வேளை... என்னை படுத்தினது போருதுனு அக்காக்கும் சனி பிடிச்சுண்டு இருக்கு. நீதான் இனிமே அக்காவை நன்னா கவனிச்சுக்கணும், பெரியவளா அவ ஆத்தோட சௌக்யமா இருந்தா நமக்கு அது போதும்."

கணவர் இப்படிச் சொல்லி விட்டதற்காக அகில உடனே தாஸானு தாஸியாய் அந்தப் பேச்சை ஏற்று கொண்டுவிடவில்லை; அம்புலுவும் ஓய்வாக உட்கார்ந் விடவில்லை. வழக்கம் போல சமையல் செய்தாள், த காரியங்களைத் தானே கவனித்துக்கொண்டாள் குழந்தைகளுக்கு எண்ணை தேய்ப்பது, தலைவாரி விடுவ போன்ற வேலைகளைத் தொடர்ந்து செய்தாள்.

ஆனால் நாள் செல்லச் செல்ல திடுமென்று தள்ளாமை வந்து பத்து தேய்த்து, வீடு பெருக்கி, மெழுகும் காரியங்களைச் செய்ய முடியாமல் போக, தன்னாலும் அத்தனை வணங்கி சிரமப்பட முடியாது என்று புரிந்து அகிலா ஒரு வேலைக்காரியை நியமித்த பிறகு இத்தனை வருஷங்களில் அவ்வப்போது கால் மணி, அரைமணி என்று உட்கார அம்புலுவுக்கு போது கிடைத்தது.

## 1978

சிவா விஷ்ணு கோவிலுக்கு கதை கேட்கப் போயிருந்த அம்புலு, பாதிக் கதையில் தலையை லேசாக வலிக்கிற மாதிரி இருக்க, எழுந்து வீட்டுக்கு வந்தாள்.

வாயில்படியில் காலை வைத்த நிமிஷத்தில் உள்ளுக்குள் பாப்பா அழுவதும், அம்பி அதட்டுவதும் கேட்க, உள்ளே போகாமல் அங்கேயே நின்றாள்.

"இந்த அழுது புலம்புற விஷயமெல்லாம் என்கிட்ட வேண்டாம், தெரிஞ்சுக்கோ—உன் மனசுலே நீ என்ன நினைச்சுண்டிருக்கே? நீ என்ன இளவரசியா? உன்னைப் பெத்த நான் என்ன ஒரு ஜமீன்தாரா? நம்ப நிலமை தெரியவேண்டாம் உனக்கு? சுத்திச் சுத்தி வந்தானும்... காதலிக்கறேன்னு சொன்னனும்...நல்ல கூத்துடா இது. செருப்ப கட்டிண்டு அடிக்கறதுக்கு இல்லாம!"

"ஷ்...ஷ்..சித்த மெதுவாத்தான் பேசுங்களேன். நாலு வீட்டுக்குத் தெரியற மாதிரி ஏன் இப்படி கத்தறேள்! இவ இப்ப என்ன தப்பு பண்ணிட்டா நீங்க இந்த குதி குதிக்கறதுக்கு?"

"வாய மூடுடி...இவளுக்கு உன் சப்போர்ட் வேறயா? என்ன பண்ணிட்டான்னு கேக்கறே!"



"நா கேக்கறதுக்கு பதட்டபடாம நீங்க பதில் சொல்லுங்கோ. பாப்பா கண்ணுக்கு ராஜாத்தியா இருக்கா பெரிய மனுஷா வீட்டுப் பிள்ளை இந்த அழகுக்கு ஆசைப்பட்டுண்டு தவறுலே வலிய வந்தா அதுக்கு இவ என்ன பண்ணுவா? அந்தப் பையனும் தப்பா நடந்துக்கலியே—' "எனக்கு உன்னை பிடிச்சி-ருக்கு கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன். எங்கப்பா அம்மாகிட்ட நா பேசி தயார் பண்ணினப்புறம் சொல்றேன். உங்கப்பாவை வந்து பேசச் சொல்லு'னு சொல்லி இருக்கான். இதுல தப்புத் தண்டா என்ன இருக்கு?'

"பெரியவா நாம இருக்கறச்சே சிறுசுகளா பேசி முடிக்கிற காரியமாடி இது! நம்ம குடும்பம் என்ன, குலம் கோத்திரம் என்ன..."

"எல்லாம் அவாளும் நம்ம ஜாதி மனுஷா தான்னு!"

"அதுமட்டும் போறுமாடீ? ஜாதகம், மத்த பொருத்தம் பார்க்க வேண்டாமா?"

"ஆமா ஜாதகம் நூறு பொருத்தம் பார்த்து பண்ணவா ரொம்ப ஓஹோனு வாழ்ந்துட்டாளாக்கும்?"

யாரை மனசுல வைச்சிண்டு பேசறே அகிலா அக்காவையா?"

"நா யாரையும் எதுவும் சொல்லலை; நீங்க வரிஞ்சு கட்டிண்டு கிளம்பாதீங்கோ, பாப்பாவோட அழகுக்கு பெரிய இடம் தானு வந்திருக்கு. பையனுக்குப் பெண்ணையும், பெண்ணுக்குப பிள்ளையையும் பிடிச்சிருக்கு இனிமே பெத்தவளா லெட்சணமா நாமதான் மேற் கொண்டு செய்யறதைச் செய்யனும்."

"நீ பாட்டுக்கு பேசிண்டேபோனு என்னடி அர்த்தம்? பெரிய என்ஜினியர் அந்த பையனோடை அப்பா; சொந்தமா

விடு, கார்னு தடப்புடலா இருக்கார். இவனும் டாக்டர் படிப்பு கடைசி வருஷத்துலே இருக்கான். நம்மஸ்திதிக்கு ஏத்த இடம் இல்லே அகிலா. நிதானிச்சுண்டு பேசு—''

''மனசு வைச்சா மார்க்கம் இல்லியாக்கும்!''

''என்ன சொல்ல வர்றே நீ?''

''நிலத்துல விளையறதை குடியானவன் கண்ணுலேயே காட்ட மாட்டேங்கறான். பூதமா ஒரு விடு ஒண்ணுத்துக்கும் பிரயோஜனம் இல்லாம இருக்கு. இரண்டையும் வித்தா ஐம்பதனாயிரம், அறுபதினாயிரம் தேருதா? அதுல முக்கால் வாசிய எடுத்து ஜாம் ஜாம்னு கல்யாணத்தை நடத்த முடியாதா? யோசிச்சு பாருங்கோ நாளைக்கு நம்ம பொண் அமோகமா இருந்தா நமக்குத் தானே பெருமை...''

'மூத்தவளுக்கு இருக்கறதை வாரி விட்டுட்டா, அடுத்தவளுக்கு?''

"இத வைச்சிண்டு இவளுக்கு இப்ப செய்யறது. அடுத்தவளுக்கு இன்னும் எப்படியும் நாலஞ்சு வருஷம் ஆகும். உங்க ஆபீஸ்லே பி. எஃப்லேந்து கடன் வாங்கறது... பெண்களை பெத்துட்டா மட்டும் ஆச்சா? சரியா கரை ஏத்த வேண்டாமா? கடைசி இரண்டும் நல்ல வேளையா பிள்ளைகள். இப்போதைக்கு அதுகளைப் பத்திகவலை இல்லே.''

''நிலம் வேணா என்னுது, வித்திடலாம், ஆனா, வீடு? அது அக்கா தாச்சே!''

''நிலைமை இப்படினு சொன்னா உங்கக்காவா மாட்டேன்னு சொல்லப் போறா! அவருக்கு நம்மை விட்டா வேற யாரு?''

''அதுக்கில்லே. வந்து...''

''இதப் பாருங்கோ. வந்து, போயினு சொல்லிண்டு வந்திருக்கற சம்பந்தத்தை தட்டி விட்டுடாதீங்கோ.



பேசற தினுசுலே உங்க அக்காகிட்டே பேசிடுங்கே சொல்லிட்டேன். கோணா மாணானு எதையாவது சொல்லி தடுக்க வழி பண்ணிடாதீங்கோ. முக்கியமா பாப்பாவுக்கு இந்த பையனை பண்ணிக்கணும்னு ஆசை இருக்கு. அதை புரிஞ்சுகோங்கோ ..''

அம்பி புரிந்துகொண்டானோ இல்லையோ, அம்புலு கச்சிதமாய் புரிந்துகொண்டாள்.

பாப்பாவுக்கும், பணக்கார வீட்டுப் பையனுக்கும், இது உண்டாகி விட்டதையும், இந்த இடத்தை முடிக்க வேண்டும் என்று அகிலா விருப்பப்படுவதையும், நிலம், விட்டை விற்றாவது இந்தக் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும் என்பதில் முனைப்பாக இருப்பதையும் நன்கு புரிந்து கொள்ள முடிந்ததால் மறுநாள் மகா தயக்கத்-துடன் அம்பி அவளிடம் வந்து விஷயம் இப்படி என்று சொன்ன போது எந்த ஆட்சேபனையும் தெரிவிக்காமல் அம்புலு சம்மதித்தாள்.

கூடவே,''குழந்தைகள் நன்னா இருக்கறதுதாம்பா எனக்கு முக்கியம். இது நல்ல இடம்னு தோணினா முடிச்சுடறதுதான் சரி. பணத்தைப் பத்திக் கவலைப் படாதே. உங்களுக்கு உதவாத வீடு எனக்கு மட்டும் எதுக்கு? எனக்கும் உங்களைவிட்டா வேற யாரு?''என்றும் சொன்னதோடு நிற்காமல் பத்தாவது வயசில் கழட்டிப் பெட்டிக்குள் வைத்து விட்ட இரட்டை வடசங்கிலி, நாகு கொத்தை அழித்து புது மோஸ்தரில் நாலு ஜோடி வளையல்களும், கெட்டிச் செயினும், பண்ணச் சொல்லி அவைகளை அத்தையின் சீதனமாக பாப்பாவுக்கு கல்யாணத்தன்று சபையில் ஒதினாள்.

# 1979

பாப்பாவின் புக்ககத்தார் இத்தனை பிக்கார ஜன்மங்களாக இருப்பார்கள் என்று அம்பி, அம்புலு,ஏன் அகிலா கூட எண்ணவில்லைதான்.

பிள்ளை பெண்ணின் அழகில் மயங்கி மணக்க முன் வந்திருக்கிறான், சீர்,செனத்தி விஷயத்தில் அத்தனை கராராய் இருக்க மாட்டார்கள் என்று நினைத்தது கல்யாணத்துக்கு முன்னாலேயே பொய்த்துவிட்டது.

மாமியார்காரி நிச்சயதார்த்தத்துக்குப் பிறகு பெரிய லிஸ்ட்டைக் கொடுத்து வாங்கச் சொன்னதும்,மாப்பிள்ளை முரளி தனிமையில்"இதை எப்படியாவது பண்ணிடுங்கோ சபைலே கௌரவமா இருக்கணும்; அப்புறம் நா பாத்துக்கறேன்"என்று தைரியம் சொல்ல, நிலம் வித்த பணத்தில் குறைவில்லாமல் அம்பி திருமணத்தை நடத்தினான்.

ஒரு மாசம் போவதற்குள் ஆடி மாசம் வர, அதற்குத் திரும்ப சம்பந்தியம்மாள் லிஸ்ட் போட "என்ன மாப்பிள்ளை இது!"என்று முரளியை கேட்டதற்கு அவன் கொஞ்சம் முறுக்காய் "எங்கம்மாவை நா மீறி ஒன்னும் செய்ய முடியாது பார்த்து 'பண்ணிடுங்கோ" என்று சொல்ல அதிலிருந்து பிடித்தது சனியன்.

ஆடிச் சீர்,

தலைத் தீபாவளி—

கார்த்திகை—

பொங்கல்

மண்ணாங்கட்டி—



லொட்டு லொசுக்கு—

நிலம் வித்த பணம், வீடு வித்த பணம் என்று அத்தனையும் ஒரே வருஷத்தில் காலியாக்கினது போதாது என்று திரும்பி பார்ப்பதற்குள் வந்து நின்ற வளைகாப்புக்கு ஆபீஸில் லோன் போட வேண்டிய நிலைமை வர, சிரித்த முகமாக இருந்த அம்பி கொஞ்சம் கொஞ்சமாக சிடுசிடுக்கத் துவங்கினான்.

இதனடுவில் தன் பங்குக்கு தானும் துள்ள எண்ணி, அம்புலுவின் டயபடீஸ் தலை தூக்கியது.

தாகம், தொண்டை வறட்சி, படபடப்பு, தலைசுற்றல் பலகீனம் தாங்கமாட்டாமல் போக, டாக்டரைப் போய் பார்த்து யூரின் டெஸ்ட் செய்தபோது, அது செங்கல் நிறத்தைக் காட்டி, தலையில் கல்லைத்தூக்கிப் போடட்டுமா என்றது.

"ப்ரிக் ரெட் கலர்-னா மோசமான நிலை ஆச்சே! எப்படி இத்தனை தூரத்துக்கு வரவிட்டீங்க? டயட்லே கட்டுப்பாட்டோடதானே இருக்கீங்க?" என்று கோபித்து விட்டு, இன்ஸுலின் இன்ஜெக்ஷன் காலையிலும் மாலையிலும் உடனடியாய் எடுப்பது அவசியம் என்று டாக்டர் சிகிச்சையை ஆரம்பித்தார்.

அந்த ஒரு வாரத்துக்கு தினமும் மூத்திரத்தை பரிசோதிக்கச்செய்தார். கொஞ்சம் கட்டுப்பட்டு மூத்திரத்தின் நிறம் மங்கலான பிறகு, இன்ஸுலின் அளவைக் குறைத்தார்.

"சாப்பாட்டுலே கண்டிப்பா இருங்க, வாரம் ஒரு தடவை டெஸ்ட் பண்ணிக்குங்க"— என்று அவர் சொன்னதற்கு தலை ஆட்டிவிட்டு வந்தவளுக்கு வீட்டில் முதல் முறையாக எதிர்ப்பு சின்னதாக எழுந்தது.

வாரா வாரம் சிறுநீரை பாட்டிலில் பிடித்து வைப்பதும் சுரேஷிடம் கொடுத்து பரிசோதனைக்கு அனுப்புவதும், இரண்டு ருபாயை அதற்காக செலவிடுவதும் அகிலாவுக்கு ஏனோ அதிகப்படி தொந்தரவாக, செலவாக தோன்றிவிட, புருஷன் அருகில் இல்லாத போது தைரியமாக முணு முணுக்கத் துவங்கினாள்.

“கர்மம் கர்மம். மூத்திரத்தை தான் கையால தொடறது போறாதுனு குழந்தைகளையும் தொடச் சொல்லணுமா?”—என்றாள்.

“படிக்கற பிள்ளையாச்சே. தோண தோணனு வேலை சொல்லாம இருப்போம்னு யார் நினைக்கறா?”—என்றாள்

“வாரா வாரம் இது ஒரு தண்டச் செலவு... தோட்டத்துல காய்க்கற மாதிரி—எல்லாரும் ராஜ வைத்தியம் நடக்கணும்னு எதிர்பார்த்தா எப்படி?” என்றாள்—

மொத்தத்தில், மேற்கொண்டு, இரண்டு மாசங்கள் போவதற்குள் அகிலாவின் எரிச்சலை குறைக்கும் நோக்கோடு அம்புலு தானே வீட்டில் சிறுநீரைத் பரிசோதிக்கத் தலைப்பட்டாள்.

டாக்டரின் அறிவுரைப்படி ஒரு ஸ்பிரிட் விளக்கை வாங்கி வைத்துக்கொண்டு சிறிதளவு சிறுநீரை கண்ணாடிக் குழாயில் காய்ச்சி, இரண்டு மூன்று சொட்டுகள் பெனிடிக்ட் ஸொல்யூஷனை விட்டு, நிற மாற்றத்தைக் கொண்டு சர்க்கரையின் அளவு எவ்வளவு இருக்கிறது என்று தெரிந்துகொள்ளப் பழகிக் கொண்டாள்.

இரண்டு நாளுக்கு ஒரு தரம் காலையில் குளிக்கும் போது இப்படி பரிசோதித்துக் கொள்கையில் என்ன பாவம் செய்தேனோ இப்படியெல்லாம் செய்துபார்க்க என்ற வருத்தம் அவளுள் எழும்.



வரவர அவளால் முன்னைப் போல எந்தக் காரியத்தையும் செய்ய முடியாமல் இருப்பதை அவளாலேயே உணர முடிந்தது.

எனக்கு இப்போது வயது என்ன?

ஐம்பத்தி ஒன்பதா?

அதற்குள் ஏன் இத்தனை தள்ளாமை!

இந்த பலகீனத்துக்கு சர்க்கரை வியாதியா காரணம்?

ராத்திரி நிம்மதியாய் தூங்கக்கூட முடியாதபடி தினமும் ஆடுக்கால் சதையை கொரக்களி பிடித்து இழுக்கிறதே—காதில் படபடவென்று இதயம் இரைகிறதே— இதை டாக்டரிடம் சொல்லி மருந்தை வாங்கிக் கொள்ளலாமா!

ம்ஹூம்—வேண்டாம்.

ஏற்கனவே ஊர்ப்பட்ட மருந்து செலவு. அதோடு இதுவும் சேர்ந்துகொள்ள வேண்டாம்.

பாவம் அம்பி. அவன் ஒருத்தன்தான் என்ன பண்ணுவான்?

ஆபீஸுக்குப் போய் வருவதற்குள் அவன் ஆடிப்போய் விடுகிறான்.

ஆபரேஷன் ஆன உடம்பு, தெம்பில்லை.

ஆனாலும், இந்த சம்பந்தி வீட்டார் இப்படி படுத்த வேண்டாம்.

இந்தக் காலத்தில் இப்படி ஒரு சம்பந்தி அம்மாளா?

அந்த பிராமணனும், பிள்ளையும் வாயைத் திறக்க மாட்டேன் என்கிறார்களே!

உசந்த இடம் என்று கழுநீர்ப் பானையில் கைவிட்டு விட்டோமோ!

ஆயிற்று, இரண்டாமவள் பதினெட்டு வயசில் நிற்கிறாள். அடுத்த வருஷமோ, அதற்கும் அடுத்த வருஷமோ அவளுக்கு ஒரு வழி பண்ண வேண்டும்.

பிள்ளை சுரேஷுக்கு இப்போது பதினாறு வயது! 'டாக்டருக்குப் படிக்கப் போறேன். ஆசையா இருக்கு. என்கிறான். அதற்கு என்ன பணம் செலவாகுமோ!

இதற்கெல்லாம் அம்பி என்ன செய்யப் போகிறான்'

எப்படி சமாளிக்கப் போகிறான்!

தனக்குத்தானே மருகிக் கொண்டு அம்புலு தவித்துப் போனதற்கு ஏற்ப திரும்ப அம்பிக்கு பழைய வயிற்று வலி வரத் தொடங்கியது.

வலி என்றால் பயங்கர வலி.

டாக்டர் விஜயம்— பரிசோதனைகள், மீண்டும் பேரியம் மீல் எக்ஸ்ரே.

அதே வயிற்றுப் புண் சமாசாரம்தானாம்...

டாக்டருக்கு கோபமான கோபம்.

"குடிக்கிற பழக்கம் உண்டா உங்களுக்கு?''—

''ஐயோ— அதெல்லாம் கிடையாது டாக்டர்''— அம்பி பதறினான்.

''அப்ப திரும்ப எப்படி இந்த அளவுக்கு புண் வந்திருக்கு? காரம், புளி எல்லாம் அதிகமா சாப்பிடத் துவங்கிட்டீங்களா?''—

இது நிஜம்—

அம்புலு சமைத்தால் பார்த்துப் பார்த்து தம்பிக்கு என்று தினமும் இரண்டு சமையல் செய்வாள். அகிலா



அள்ளிப்போட்டு ஒன்றாகச் செய்வதோடு சரி—வயிறு சரியாகி விட்டது என்ற நினைப்பில் பெண்டாட்டியை வேலை வாங்க தயங்க, சாப்பாட்டில் இருந்த கெடுபிடி குறைந்துவிட்டது.

அம்பி தலையைக் குனிந்துகொண்டான்.

''நல்ல வேளையா ரொம்ப பாதிப்பு இல்லே...ஒரு மாசம் மருந்து சாப்பிட்டு கவனமா இருங்க. ஆபரேஷன் இல்லாம சமாளிச்சிடலாமானு பார்க்கலாம்.''

அம்பி ஒரு மாசம் லீவு போட்டான். ஒரு மாசத்தில் வலி சரியாகாததால் விடுப்பு தொட்டுத் தொட்டு மூன்று மாசமாக நீண்டு போனது— அதில் சம்பளமில்லாமல் நாற்பது நாட்கள்.

பணப் புழக்கம் குறையக் குறைய வீட்டில் பால், தயிர், காய்கறிகள் தாராளமாக வாங்குவது கட்டுப்படுத்தப் பட்டது.

ஐஸ்க்ரீம் வேணும் என்ற ஹரிக்கு வசவு கிடைத்தது சினிமா என்று பேச்சு எடுத்தால் அம்பி பிசாசாக கத்தத் துவங்கினான்.

சிக்கனம், சிக்கனம், எதிலும் சிக்கனம்.

இத்தனை போதாது என்று அம்புலுவுக்கு வெள்ளைத் திரையாய் கண்ணில் சதை வளர ஆரம்பித்ததும் இந்தச் சமயத்தில் தான்.

## 1981

அம்புலு திண்ணையிலிருந்து நிதானமாக எழுந்தாள்

காலைத் தேய்த்து ஒவ்வொரு அடியாக நடந்து உள்ளே போனாள்.

வாசல் வெளிச்சத்தில் நிழலாகத் தெரிந்த உருவங்கள் வீட்டுக்குள் இருந்த அரைகுறை இருட்டில் சுத்தமாக மங்கிவிட சுவரைத் தடவி மெதுவாக நகரவேண்டி இருந்தது.

ஏழெட்டு மாசத்துக்குள் படிப் படியாக பார்வை மங்கிப்போய் விட்டதில், இப்போதெல்லாம் கொஞ்சம் இருட்டி விட்டால் கூட குருடுதான். எதற்கும் பிறர் தயவை எதிர் பார்க்க வைக்கும் இயலாமைதான்

''ஐயோ அத்தே..என் புக்கை மிதிச்சுட்டீடேளே... அம்மா பாரும்மா இந்த அத்தையை...மேப் வரைய வைச் சிருந்த பேப்பரை மிதிச்சு அழுக்காக்கிட்டாம்மா!''

ஹரி குரல் எடுத்துக் கத்த, வைத்த காலை சட்டென்று அம்புஜ இழுத்துக்கொண்டாள்.

"தெரியாம மிதிச்சிட்டேண்டா கண்ணு ..கத்தாதப்பா கண் தெரியலேனு நானும் மெதுவாத்தான் வரேன் பேப்பர் இருக்கறது புரியாம மிதிச்சிட்டேன் போல யிருக்கு..."

அம்புஜ கெஞ்சலாய் பேசுவதைக் காதில் வாங்காமல் ஹரி கத்த' அடுத்த நிமிஷம் அகிலா அவனை சமாதானம் பண்ணும் தினுசில் நாத்தனருக்கு டோஸ் விட்டாள்.

''கண்ணு தெரியலேனு ஒரு இடமா உட்கார்ந்தா தேவலே...நாள் பூரா இப்படி லோ லோனு சுத்தினு எப்படி? குழந்தைகளுக்கு படிக்க, உட்காரனு ஒரு இடம் தனியா கிடையாது இந்தாத்துலே நீ ஏண்டா இங்க உட்கார்ந்துண்டு படிக்கறே—சிவனேனு உன் ப்ரெண்ட் யார் வீட்டுக்காவது தொலையறதுதானே...''

அம்புஜ வாயைத் திறக்காமல் தடவித் தடவி நடந்து ஸ்டோர் ரூமுக்குள் சென்று அமர்ந்துகொண்டாள்.

நாளுக்கொன்றாக சின்ன குழந்தையைப் போல தானும் பிறருக்கு ஏதாவது கஷ்டத்தை உண்டு பண்ணிக் கொண்டே இருப்பதை நினைக்கையில் வருத்தமாக இருந்தது.



நாலு நாள் முன் அம்பிக்கு காபி கலந்து வைத்திருந்த தை கையால் தட்டிவிட்டுக் கொட்டினேன்.

நேற்று தரையில் பேப்பர் விரித்து பசிக்கு இட்டு வைத்திருந்தது மேல் காலை வைத்து, அத்தனையும் தூர எறிய வழி பண்ணினேன்.

தண்ணீரைக் கொட்டுகிறேன், எதிரில் வரும் ஆள் மேல் மோதுகிறேன்.

தானாக பாத்ரூமுக்குப் போய் வர கூட துப்பில்லை. பகலில் கொஞ்சம் பரவாயில்லை. இருட்டில் சுத்த மோசம்.

'உங்க புடவை என்ன கனம் கனக்குது! அம்மா மாதிரி நீங்களும் ஆறு கஜம் புடவை உடுத்தின என்ன பெரியம்மா?'' என்று வேலைக்காரி கேட்கிறாள்.

ஏன் கேட்க மாட்டாள்?

தினமும் ஒன்பது கஜப் புடவையை தோய்த்துப் போடு என்றால் அவள் பங்குக்கு அவள் பேசுகிறாள்!

அம்புஜ விரக்தியுடன் சாய்ந்து உட்கார்ந்தாள். முட்டாக்கை இழுத்து விட்ட வேகத்தில் முழங்கை எதன் மேலோ பட்டு விட டமார் என்ற சப்தத்துடன் ஏதோ கீழே விழுந்தது.

என்ன அது!

எதையாவது கொட்டி விட்டேனா என்ன?

பதட்டத்துடன் கைகளைத் துழாவி தேடின போது காலி சம்புடம் ஒன்று உருண்டு விழுந்திருப்பது புரிந்தது.

''என்ன சப்தம் அங்கே? எதை கொட்டினேள்?''

படபடப்புடன் வந்த அகிலாவிடம் ''ஒண்ணு-மில்லேம்மா வெத்து டப்பாதான் அது'' அம்புஜ சொல்ல

'நல்ல வேளை—என்னோய், பருப்புனு எதையாவது கொட்டி தொலைச்சுட்டேளாக்கும். இருக்கற வேலை அதையும் வாரி துடைக்கணுமாக்கும்னு பயந்தே போயிட்டேன்'' என்று முணுமுணுத்தபடி அவள் நகர்ந்தாள்.

அகிலா கோபிப்பதில் தவறு என்ன?

வீட்டில் வேலையான வேலை.

சமையல், நித்தியபடி வேலைகளோடு, பிள்ளை பெற்றிருக்கும் பாப்பாவின் வேலைகள் வேறு...

பாவம். ஒண்டி ஆளாய் அகிலாதான் என்ன செய்வாள்!

குழந்தைகளுக்குப் பரிட்சை நேரம். அததுகளுக்கு பாடம் படிக்கவே அவகாசம் போதவில்லை என்னும்போது அம்மாவுக்கு கூடமாட ஒத்தாசை பண்ணுவது எப்படி?

நான் வேறு ஒன்றுக்கும் உபயோகமில்லாமல்...

இரண்டு வேளையும் சாப்பாட்டைக் கூட கையில் கொண்டு வந்து கொடுக்க வேண்டியிருக்கிறது... ஹ்ம்...

இந்த கண் சதைத்தான் சட்டுபட்டென்று பழுத்துத் தொலைக்கக் கூடாதோ!

''இன்னும் பழுக்கலை பெரிம்மா...வெளிச்சத்துலே உங்க முன்னாலெ விரலை நீட்டினா உங்களுக்குத் தெரியக் கூடாது அப்படி பார்வை மங்கினாதான் ஆபரேஷன் பண்ணமுடியும். இன்னும் சில மாசங்கள் பொறுத்துக்-ங்க'' என்று கண் டாக்டர் சொல்லி எத்தனை மாசமாகிறது!

நாலு இருக்குமா!

இருக்கும்.

முன்னைக்கு இப்போது கட்டோடு பார்வை குறைந்து ன் போயிருக்கிறது.



ஒரு வேளை பழுத்து விட்டதோ!

அம்பி நல்ல குணத்தில் இருக்கும் சமயமாகப் பார்த்து அவனிடம் டாக்டரிடம் போகலாமா என்று கேட்க வேண்டும்.

தனியாக போக முடியாது.

அவன் வந்தால் தான் சரிப்படும்.

ஆபரேஷனுக்கு என்ன செலவாகுமோ?

பணத்துக்கு அம்பி என்ன ஏற்பாடு பண்ணி இருக்கிறானோ! தெரியவில்லை.

பணம் செலவாவதைத் தடுத்துவிடுவோம். இப்போதைக்கு கண் ஆபரேஷன் வேண்டாம் என்று சொல்லி விடுவோம் என்றால் இருக்கிறவர்களுக்கு பாரமாக இருப்பதை விட கண்ணை சரிபண்ணிக்கொண்டு உபயோகமாகவாவது இருக்கலாமே என்றும் தோன்றுகிறது.

அம்பியும் தான் என்ன பண்ணுவான்?

பிள்ளை பெத்தவள் செலவு, காலேஜ் செலவு, மற்ற செலவுகள். இப்போது இந்த கண் ஆபரேஷன் செலவும் உபரியாய்...

சில நாட்களாக முகம் கொடுத்து அவன் பேசுவ இல்லை. பேசினாலும் புலி உறுமுகிற மாதிரி இரண்டு வார்த்தைகளை உறுமிவிட்டுப் போகிறான்.

அவனுக்குள் எத்தனை கவலையோ?

ஈஸ்வரா....சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த அம் வுக்கு சிறுநீர் கழிக்க வேண்டும் போல இருந் கூடவே பசியும் எடுத்தது.

காலையில் சாப்பிட்டது; மதியம் அரை டம்ளர் காபி. அவ்வளவுதான்.

மணி இப்போது என்ன இருக்கும்?

சமையல் கட்டில் பாத்திரங்களின் ஓசை கேட்கிறதே. எட்டு இருக்குமா?

மெதுவாக எழுந்தாள். வெளியில் வந்து குளியல் அறையை நோக்கி உத்தேசமாக சுவரோடு ஒட்டிக் கொண்டு நடந்தாள்.

சமையல்கட்டை தாண்டும்போது ரஸத்தை தாளிக்கும் மணம் கம்மென்று நாசியில் ஏற அப்படியே நின்று "சாப்பிட நாழியாகுமா அகிலா?.. வெல வெலனு வரது, வேணா எனக்கு இலை போடறியா?" என்றாள்.

அரை நிமிஷம் போல அப்படியே நின்றும் பதில் ஏதும் வராததால் ஓ—அறைக்குள் யாரும் இல்லை போலிருக்கிறது என்ற நினைப்புடன் நகர முற்பட்டவளுக்கு நக்கென்று பாத்திரத்தை வைத்து விட்டு அகிலா யாரிடமோ சின்ன குரலில் பேசுவது தெளிவாகக் கேட்டது.

"இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே. வேளா வேளைக்கு ஆம்பிளை குழந்தைகள் சாப்பிட்டாளா கொண்டாளானு அக்கறை இல்லை, தான் முதல்லே கொட்டிக்கணும். இப்படி வாயக் கட்டாம இருந்தா, டயபடீஸ் என்ன, இன்னும் எது வேணாலும் வரும்..."

காலை நகர்த்தின அம்புலு சக்கென்று நின்றாள்.

என்னையா?

என்னையா சொல்கிறாள்?

வேளா வேளைக்கு கொட்டிக் கொள்கிறேனா?



வாயை அடக்கத் தெரியாமல் வியாதியை வரவழைத்துக் கொண்டிருக்கிறேனா!

நானா!

ஐயோ—என்னையா சொல்கிறாள்?

மனசில் உண்டான வலி காரணமாக கண்கள் கசிய, பிரயத்தனத்துடன் அம்புலு நகர்ந்தாள்.

தட்டுத் தடுமாறி நடந்து குளியலறையில் சிறுநீர் கழித்து கைகால்களை அலம்பிக் கொண்டு கதவருகில் வந்தவள், ஷெல்பிலிருந்து கீழே விழுந்து நச நசத்திருந்த சோப்பு கட்டி மேல் காலை தெரியாத்தனமாய் வைக்க — அவ்வளவு தான். இரண்டு கால்களும் பக்கத்துக்கு ஒன்றாக இழுக்க, பிடிமானம் எதுவும் அகப்படாமல் பதறியவள் அடுத்த கணம் தலை குப்புற எசகு பிசகாய் தரையில் விழுந்தாள்.

சொம்பு உருண்டு அண்டாவில் மோதிய சப்தம் வெளியில் பெரிசாய் கேட்டிருக்க வேண்டும்.

அப்போது தான் ஆபீஸிலிருந்து உள்ளே நுழைந்த அம்பி பதறிக் கொண்டு கதவருகில் வந்து "என்னாச்சு?" என்று குரல் கொடுத்தான்.

மல்லாந்து கிடந்த அம்புலுவால் உடனே எழுந்திருக்க முடியவில்லை.

துடைக்கருகில் எமவலி.

கதவில் இடிபட்ட இடத்தில் மண்டை விண்ணென்றது.

"அக்கா..."

"வ...வரேன்."

"என்னாச்சு...கதவைத் திறவேன்"

"விழுந்திட்டேன்...இ...இரு...வரேன்"

எப்படியோ நகர்ந்து தாழ்ப்பாளை விலக்கினாள்.

கதவைத் திறந்த அம்பி, திடுக்கிட்டுப் போனான்.

தரையில் அக்கா. நெற்றியில் ரத்தம்—கண்களில் பிரவாகமாய் ஜலம்.

"எதுக்காக தனியா பாத்ரூம்க்கு வரே? யாரையாவது துணைக்கு கூப்பிட்டுக்கோனு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்"

கத்திக் கொண்டே அவளை குனிந்து தூக்க முயல ஹா என்று அலறினாள் அம்புலு.

"வலிக்கிறதுடா...கால் வலிக்கறதுடா"

சுரேஷை அழைத்து ஒரு பக்கம் பிடித்துக் கொள்ளச் சொல்லி தாங்கியப்படி தூக்கி கூடத்துக்குக் கொண்டு வந்தான்.

புருபுருவென்று துடை வீங்கிக் கொள்வது பயமாக இருக்க, டாக்ஸி பிடித்து வந்து உடனே ஜி.எச்சுக்கு கொண்டு சென்றான்.

அவன் பயந்தது சரிதான்.

துடை எலும்பில் ப்ராக்சர்.

ஆறு வாரத்திலிருந்து, எட்டு வாரங்கள் வரை மாவு கட்டில் இருக்க வேண்டும். அப்புறமாய் எக்ஸ்ரே எடுத்து பார்த்தால் தான் எலும்பு சேர்ந்திருக்கிறதா இல்லையா என்று சொல்ல முடியும் என்றார்கள்.

அந்த ஆறு வாரங்கள் அம்புலுவைப் பொறுத்தவரை மகா சோதனையான நாட்கள்.



கட்டிலை விட்டு இந்தண்டை அந்தண்டை போக முடியாது. சாப்பிட, தண்ணீர் குடிக்க, பாத்ரூம் போக, குளிக்க என்று அத்தனையும் பிறர் தயவில்தான்.

ஆறுவாரம் அவளுக்குப் பணிவிடைகள் செய்வதற்குள் வீட்டில் இருந்தவர்கள் அனைவரும், அம்பி உட்பட, சோர்ந்து தான் போனார்கள்.

இதன் கூடவே டயபடீஸ் கோளாறு வேறு. மூத்திரத்தை சோதிப்பது, மருந்து அல்லது இன்ஸுலின் இன்ஜெக்ஷன் போடுவது என்று, அந்த சிஷ்ருஷைவேறு.

அத்தனை பேருக்கும் பாரமாக போய்விட்டோம்— என்று குன்றிப் போன அம்புலு சாப்பாட்டைக் குறைத்தாள். விக்கல் எடுத்தால் கூட தண்ணீர் கேட்காமல் இருந்தாள்; முடிந்தவரை, யாரிடமும் எதுவும் பேசி தொண தொணக்காமல் சதா ராம ராம என்று ராம ஜெபம் பண்ணியே அந்த ஆறுவாரங்களைக் கழித்தாள்.

டாக்டர் சொன்ன கெடுமுடிய இன்னும் இரண்டு நாட்கள் தான் பாக்கி. பகவான் புண்ணியத்தில் எலும்பு ஒட்டிக் கொண்டு விட்டால் தேவலை. அப்புறம் கண் சிகிச்சையை உடனடியாய் செய்து கொண்டு, இருக்கிற வரைக்கும் உபகாரமாய் இருந்து விடலாம்.

மனசில் என்னென்னமோ எதிர்பார்ப்புகள் வளர்ந்து விட, அன்று இரவு அம்புலுவால் சரியாகத் தூங்க முடியவில்லை.

விடியும் முன்னரே விழிப்பு கொடுத்து விட்டது.

படுக்கப் பிடிக்காமல் பாயில்எழுந்து உட்கார்ந்தாள்.

உள் அறையில் அம்பியும் அகிலாவும் விழித்துக் கொண்டு சின்ன குரலில் எதையோ தீவிரமாகப் பேசுவது நிசப்தமான குரலில் தெளிவாகக் கேட்டது.

"ஆறு வாரமா நா படறபாடு எனக்குத்தான் தெரியும். இனிமே இப்படியே நித்தமும் படணும்னு, ஒருநாள் இல்லாட்டா ஒருநாள் எனக்கு பைத்தியம் தான் பிடிக்கப் போறது..."

"என்ன பண்ணறது அகிலா? எல்லாம் நம்ப போறாத காலம்..."

"போறாத காலம்னு ஏதோ கொஞ்ச நாள் படுத்தும் அப்புறம் சரியாயிடும். இப்படியா? தொடர்ந்து காலைப் பிடிச்ச சனியனு ஆயுசுக்குமா?"

அம்பி பதில் சொல்லாமல் இருக்க அகிலா தொடர்ந்தாள்.

"நேத்துராத்திரி விஷயம் இப்படினு நீங்க சொன்னதிலேந்து எனக்கு ஒண்ணுமே புரியாம படபடப்பா இருக்கு என் ப்ரார்த்தனை காதுலே விழுந்து, கடவுள்தான் இப்படி ஒரு வழிகாட்டி இருக்கார்னே தோணறது ...ப்ரமோஷன் அதுவும் நானூறு ருபாயோட அம்மாடி! காலம் இருக்குற இருப்பிலே எத்தனை பெரிய விஷயம் இது!"

"ப்ரமோஷனை ஏத்துண்டா டெல்லிக்குப் போக வேண்டி வரும் அகிலா."

"போனா என்ன? அமெரிக்கா தண்ணிப்பட்ட பாடா இருக்கற இந்த நாள்ல டெல்லிக்குப் போக பயந்தா ஆகுமா? பணத்தை நினைச்சுப் பாருங்கோ."

"அக்காவை வைச்சுண்டு நாம டெல்லி அது இதுனு, நினைக்க முடியுமா?"

"தெரியுமே-இப்படி சொல்லுவேள்னு எனக்குத் தெரியுமே...சதா அக்கா, அக்கான்னா எப்படி? குழந்தைகளையும், என்னையும்கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கோங்கோ—"

"அவளுக்கு நம்மை விட்டா யாரு சொல்லு?"



"அதுக்காக? அதான் இருபது வருஷத்துக்கும் மேலா உட்கார வைச்சு, தாங்கியாச்சே! இன்னும் தாங்கணும்னா எப்படி? ஏன்? உங்க மத்த அக்கா இரண்டு பேருக்கு மட்டும் இவர் அக்கா இல்லையா? செய்ய அவாளுக்கும் பாத்தியதை இல்லையா? நாளைக்கு கால்கட்டை பிரிச்சதும் அவாகிட்ட போய் சில மாசங்கள் இருக்கட்டுமே...நா சொல்றதுலே தப்பு என்ன?"

"அவா கிட்ட அக்கா போக மாட்டா; அவ குணம் உனக்குத் தெரியாதா?"—

அகிலா விசும்புவது சன்னமாக கேட்டது.

"நானும்,என் குழந்தைகளும் எக்கேடு கெட்டு போனா உங்களுக்கு என்ன? இத்தனை வருஷமா செஞ்சவ இப்ப ஏண்டா இப்படி சொல்றானு யோசிச்சுப் பார்க்கணும். எனக்காகவா சொல்றேன்? பெரிய வேலை,ப்ரமோஷன்னு போனா நாளைக்கு உங்களுக்குதானே பெருமை!"

"ஷ்...ஷ். அழாதே அகிலா. யோசிச்சு ஒரு முடிவுக்கு வரலாம். எதுக்காக இப்படி பதட்டப்படறே..."

"நேத்திக்கு மாலதி இங்க வந்திருந்தா. உங்கக்கா கிடக்கிற கிடப்பை பார்த்துட்டு என்ன சொன்னா தெரியுமா? "இந்த மாதிரி கிழங்களை வைச்சுக்கனு அங்கங்க ஹோம்ஸ் நடத்தறா;பேசாம அனாதைனு சொல்லி அங்க கொண்டு விட்டுறது தானே! இல்லைனாலும் மாசம், கொஞ்சம் பணம் கொடுத்தா வைச்சிக்கறதுக்கு வேற இல்லங்கள் இருக்கு; எங்கயாவது விட்டுட ஏற்பாடு பண்ணாம, ஏன் அவஸ்தைப் படறே தலை எழுத்தானு கேட்டா...நா என்ன, அவ சொல்ற மாதிரி ஹோம்ல விடலாம்னா சொல்றேன்! எனக்கும் வயசாயிண்டு வரது. என மேல அக்கறை எடுத்துக்க நீங்க கொஞ்ச முனைஞ்சா தேவலை..."

செவி கொண்டு கேட்க முடியாதது போல அம்புலு காதுகளை மூடிக்கொண்டாள்.

சொந்தக்காரர்கள் இருக்கையிலேயே அவளுக்கு வயசாகி விட்டது தள்ளாமை வந்துவிட்டது என்ற காரணத்துக்காக, அனாதை என்று சொல்லி இல்லங்களில் விட்டு விடலாமா?

அப்படிக் கூடவா செய்கிறார்கள்?

அகிலா பேசினதை மௌனமாய் அம்பி கேட்டுக் கொண்டிருந்தானே வாயை மூடி—என்று என் ஒரு அதட்டல் போடத் துணியவில்லை?

பெற்றவளுக்கு மேலாக என்னை பேணி வளர்த்த அக் ...யா அப்படி அனாதையாக விடச் சொல்கிறாய் ...ன்று ஏன் கேட்கவில்லை?

இத்தனை வருஷங்களாய் பணத்தால், உடம்பால் ...க்கு உழைத்தவளை இன்று திடுமென்று ஒதுக்குவது ...படி நியாயமாகும் என்று பளிச்சென்று ஏன் சொல்ல ...லை?

ஐயோ—தெய்வமே—ஏன்?

என் தம்பிக்கு கூட நான் பாரமாகி விட்டேனா!

அம்பி, அவள் விருப்பப்படி செய்ய முனைந்து ...டானா?

இவர்களுடைய டெல்லி பயணத்துக்கும் சௌகர்ய ... வாழ்க்கைக்கும் நானா தடையாக இருக்கிறேன்! ...படித் தானே அகிலா நினைக்கிறாள்!

...ல்வரா...

...னைக்கு அம்பி என்னிடத்தில் வந்து "காமு ...லே சில மாசங்கள் இருந்துட்டு வாயேன்க்கா" சொல்லுவானே!



சொன்னால் நான் என்ன பண்ணுவேன்?

சில மாசங்கள் காமு வீட்டில், சில மாசங்கள் சாரதா வீட்டில் வேண்டாத விருந்தாளியாக, இருப்பேன்.

அப்புறம்?

அப்புறம்?

அகிலாவின் சிநேகிதி சொன்ன மாதிரி அனாதை பட்டத்தோடு ஏதாவது ஹோமில் சேரவேண்டியதுதானா

கடவுளே...

முருகா...

அம்புலு எழுந்து உட்கார்ந்தாள்.

சப்பையைத் தேய்த்துக் கொண்டு, நகர்ந்து மெள்ள சமையல் கட்டுக்குள் சென்றாள்.

தட்டுத் தடுமாறி பூஜை அலமாரிக் கதவைத் திறந்தாள்.

தடவித் தடவி எண்ணெய் விட்டு திரியை தூண்டி. தீக்குச்சியைக் கிழித்து விளக்கை ஏற்றினாள்.

மங்கலாக, ரொம்ப மங்கலாகத் தெரிந்த தீபத்தை வெறித்தாள்.

மனசு ஹோ ஹோ என்று ஆர்ப்பரிப்பது புரிந்தது.

இரண்டு கரங்களையும் கூப்பி தீபத்தின் சுடரை நோக்கி, "கடவுளே இத்தனைவருஷங்கள்லே எனக்குனு நா உன்கிட்ட எதுவும் பிரார்த்திச்சுண்டது இல்லே. இன்னிக்கு கேக்கறேன். சீக்கிரம் சாவை கொடுத்து, எனக்கு, நா வாழற இந்த அர்த்தமில்லாத வாழ்க்கைலேந்து விமோசனம் கொடுப்பா..." என்று வாய்விட்டு வேண்டியபோது, உள்ளுக்குளிருந்து அழுகை வெடித்துக்

மேற்கொண்டு கேட்க முடியாதது போல அம்புலு காதுகளை மூடிக்கொண்டாள்.

சொந்தக்காரர்கள் இருக்கையிலேயே ஒருவரை அவருக்கு வயசாகிவிட்டது தள்ளாமை வந்துவிட்டது என்ற காரணத்துக்காக, அனாதை என்று சொல்லி இல்லங்களில் விட்டு விடலாமா?

அப்படிக் கூடவா செய்கிறார்கள்?

அகிலா பேசினதை மௌனமாய் அம்பி கேட்டுக் கொண்டிருந்தானே வாயை மூடடி—என்று ஏன் ஒரு அதட்டல் போடத் துணியவில்லை?

பெற்றவளுக்கு மேலாக என்னை பேணி வளர்த்த அக்காவையா அப்படி அனாதையாக விடச் சொல்கிறாய் என்று ஏன் கேட்கவில்லை?

இத்தனை வருஷங்களாய் பணத்தால், உடம்பால் நமக்கு உழைத்தவளை இன்று திடுமென்று ஒதுக்குவது எப்படி நியாயமாகும் என்று பளிச்சென்று ஏன் சொல்லவில்லை?

ஐயோ—தெய்வமே—ஏன்?

என் தம்பிக்கு கூட நான் பாரமாகி விட்டேனா!

அம்பி, அவள் விருப்பப்படி செய்ய முனைந்து விடுவானா?

இவர்களுடைய டெல்லி பயணத்துக்கும் சௌகர்யமான வாழ்க்கைக்கும் நானா தடையாக இருக்கிறேன்! அப்படித் தானே அகிலா நினைக்கிறாள்!

ஈஸ்வரா...

நாளைக்கு அம்பி என்னிடத்தில் வந்து "காமு வீட்டுலே சில மாசங்கள் இருந்துட்டு வாயேன்க்கா" என்று சொல்லுவானே!



சொன்னால் நான் என்ன பண்ணுவேன்?

சில மாசங்கள் காமு வீட்டில், சில மாசங்கள் சாரதா வீட்டில் வேண்டாத விருந்தாளியாக, இருப்பேன்.

அப்புறம்?

அப்புறம்?

அகிலாவின் சிநேகிதி சொன்ன மாதிரி அனாதை பட்டத்தோடு ஏதாவது ஹோமில் சேரவேண்டியதுதானா

கடவுளே...

முருகா...

அம்புலு எழுந்து உட்கார்ந்தாள்.

சப்பையைத் தேய்த்துக் கொண்டு, நகர்ந்து மெள்ள சமையல் கட்டுக்குள் சென்றாள்.

தட்டுத் தடுமாறி பூஜை அலமாரிக் கதவைத் திறந்தாள்.

தடவித் தடவி எண்ணெய் விட்டு திரியை தூண்டி, தீக்குச்சியைக் கிழித்து விளக்கை ஏற்றினாள்.

மங்கலாக, ரொம்ப மங்கலாகத் தெரிந்த தீபத்தை வெறித்தாள்.

மனசு ஹோ ஹோ என்று ஆர்ப்பரிப்பது புரிந்தது.

இரண்டு கரங்களையும் கூப்பி தீபத்தின் சுடரை நோக்கி, "கடவுளே இத்தனைவருஷங்கள்லே எனக்குனு நா உன்கிட்ட எதுவும் பிரார்த்திச்சுண்டது இல்லே. இன்னிக்கு கேக்கறேன். சீக்கிரம் சாவை கொடுத்து, எனக்கு, நா வாழற இந்த அர்த்தமில்லாத வாழ்க்கைலேந்து விமோசனம் கொடுப்பா..." என்று வாய்விட்டு வேண்டியபோது, உள்ளுக்குளிருந்து அழுகை வெடித்து

கொண்டு வெளிப்பட, அவள் அப்படியே மடிந்து வாய்விட்டு அழ ஆரம்பித்தாள்.

பின் குறிப்பு:—

முதியோர்கள் ஆண்டு என்று அறிவிக்கப்பட்ட 1982ம் வருஷத்தின் துவக்கத்திலேயே, இப்படி கஷ்டப்படும் முதிய பெண்மணி ஒருத்தியின் கதையை வெளியிட வேண்டுமா? என்று புருவத்தை யாராவது தூக்கினால், I am sorry இந்த மாதிரி கதாபாத்திரங்கள் வாழ்வதையும் இந்த தினுசில் இதைவிட மோசமாக சம்பவங்கள் நிகழ்வதையும், பார்த்துக் கொண்டு; இதற்கெல்லாம் ஒரு விமோசனம் அல்லது வழி செய்ய முனையாமல் ஒருவித கையாலாகாதத் தனத்துடன் சும்மா இருக்க முடியவில்லையே—நான் என்ன செய்ய?

★



# கோழைகள்

## 1

"இதப்பாருங்கோ..."

"ம்?"—

"கூப்பிடறேனே காது கேக்கலியா?"

'ம்'...னு கேட்டேனே, ருக்கு!'

"ம் என்ன ம்? வாயைத்திறந்து என்னனு கேட்டா கொறைஞ்சி போயிடுவேளா?"

"என்ன?"

"கீழ, கீரைக்காரி போறா...போயி நல்லதா எட்டணாக்கு வாங்கிண்டு வாங்கோ...ஞாயித்துக் கிழமையிலாவது கொஞ்சம் உபகாரமா இருக்கக் கூடாதா? மசமசனு பேப்பரும் கையுமா இடிச்ச புளியாட்டம் உக்காந்துண்டு இருக்கணுமா?

பதில் எதும் பேசாமல் ஈஸி சேரிலிருந்து எழுந்து, பேப்பரை மடித்து வைத்து விட்டு, மாட்டியிருந்த சட்டைப் பையிலிருந்து எட்டணு காசை எடுத்துக் கொண்டு கீழே இறங்கிப் போகும் அப்பாவை பார்க்கையில் சந்துருவுக்கு பாவமாக இருந்தது.

'நா வேணு போய் வாங்கிண்டு வரட்டுமாப்பா?' என்று கேட்க நினைத்தவன் 'ஏண்டா, உங்கப்பா உருப்படியா, ஒரு காரியம் பண்ணறது உனக்குப் பிடிக்கலியா? பாடத்தைப் படிச்சு ஒழுங்கா நீ கரை ஏர்ற வழியப் பாரு என்று அம்மா பதிலுக்கு கத்துவாளோ என்ற பயத்தில், ஒருவித கையாலாகாதத் தனத்துடன் உட்கார்ந்து விட்டான்.

இன்று...நேற்று?

ஒரு நாளா? இரண்டு நாளா?

நினைவு தெரிந்த நாளாய் நித்தமும் வீட்டில் இதே கதை தான்.

வாய் இல்லாத பூச்சி அப்பா...

அவரை ஓட ஓட விரட்டும் அம்மா....

அம்மா ஒருத்தி மட்டும் போதாது என்று அவ்வப்போது அவளோடு இரட்டை நாயனம் வாசித்து, ஒத்து ஊதும் நீலா, அன்னம்...

கீழே போன சேஷன் மேலே வந்தார், கை நிறைய பச்சு பச்சென்று கீரைக் கட்டுகள்.

"இந்தா..."

"எவ்ளோ கட்டு குடுத்தா?"

"நாலணுவுக்கு நாலு...மொத்தம் எட்டு..."



"அட கஷ்ட காலமே! தக்குனூண்டு தக்குனூண்டு கட்டா இருக்கு. நாலணுக்கு ஆறு வாங்கப்படாதோ நேத்து கூட நா ஆறு மேனிக்கு பண்ணண்டு வாங்கினேனே! என்ன சாமினு அவ சிரிச்சிருப்பா, நீங்க ஈசி ஈசினு அசடு வழிஞ்சுண்டு குடுத்ததை வாங்கிண்டு வந்துட்டேளாக்கும்!"

"இல்லே ருக்கு...மூணுக்கு மேல தர மாட்டேன்னு... நாதான் விடாப்பிடியா பேரம் பண்ணி நாலு வாங்கினேன் கட்டு பெரிசு.."

ஆ...மா...பெரிசு...நீங்க வாங்கிண்டு வந்ததை வைச்சுண்டு சமாராதனை பண்ணிடலாம்...

சந்துருவுக்கு இப்போது நிஜமாகவே கோபம் நெஞ்சுக்குள் குமுகுமு என்று கொப்பளித்தது

வாங்கிக் கொண்டு வா என்று விரட்ட வேண்டியது; அப்புறம் வாங்கிக் கொண்டு வந்ததை பழிக்க வேண்டியது.

ஏன் தானே போவது தானே?

திம்மக் கட்டை, திம்மக் கட்டையாய் கண்ணாடிக் கெதிரில் ஒன்றும், ஜன்னல் விளிம்பில் கதை புத்தகமும் கையுமாய் ஒன்றுமாய் பெண்கள் உட்கார்ந்திருக்கிறார்களே! அவர்களை அனுப்பி அருமையானதாய் வாங்கிக் கொண்டு வரச் சொல்வது தானே!

ஹம்! எங்கே?

எல்லாம் சரியான வணங்கா முடிகள். வணங்கி ஒரு வேலை செய்ய லாயக்கில்லாதவர்கள்.

வாய் மட்டும்...இந்தக் காதுக்கு அந்த காது...

எதிரில் இருந்தவர்களை பார்க்கப் பிடிக்காமல் சந்துரு ஈகனுமிக்ஸ் புத்தகத்தை தூக்கி பிடித்துக்கொண்டான்.

சமையல் கட்டிலிருந்த மனைவியிடம் கீரைக் கட்டுகளை கொடுத்து விட்டு சேஷன் நாற்காலியில் உட்கார்ந்து

பேப்பரைப் பிரித்து எண்ணி ஒண்ணேகால் நிமிஷம் போவதற்குள் ருக்கு மீண்டும் "இதப் பாருங்கோ" என்று கூப்பிட்டாள்.

"என்ன?"

"அந்த ரங்கநாதனை ஒரு நடை பாத்துட்டு வரப் போறேளா இல்லையா?"

"எந்த ரங்கநாதனை?"

"அ? சீரங்கத்து ரங்கநாதனை... அடிச்சுக்க ரெண்டு கை போறலை எனக்கு... எத்தனை ரங்கநாதனைத் தெரியும் உங்களுக்கு? ம்? அந்த தரகனைச் சொல்றேன்..."

"அவனைத்தான் போன வாரமே பாத்துட்டு வந்தேனே ருக்கு! கையிலே பத்தாயிரம் கொடுத்து, வைர மூக்குத்தி, தோடு, இருவது சவரன் நகை போடறதுன்னா வா... இல்லேன்னா கிட்ட கூட வராதேனு! கராரு சொல்லிட்டானே"

"அவன் அப்படித்தான் கண்டிஷனா சொல்லுவான்... பெண்ணைப் பெத்த நாம தானே தழைஞ்சு போகணும். நாலு நடை போய் பாத்துட்டு வரணும்?..."

"பிள்ளையாத்துக்காரா சொல்லறதை தரகன் சொல்றான்! அவனுக்கு குறைக்கறத்துக்கும், கூட்டறத்துக்கும் அதிகாரம் ஏது? கையிலே பத்தாயிரம் வைர மூக்குத்தி, தோடு இருபது பவுன் எல்லாம் நம்ம ஸ்திதிக்கு அகலக்கால் இல்லையா? இவளுக்கே இருக்கறதை சுரண்டி பண்ணிட்டா, அடுத்தவ பின்னாடியே நிக்கறாளே அதை நினைச்சு பார்க்கணுமே ருக்கு!

"அதுக்குத்தான் சொல்றேன் அந்த ரங்கநாதன் கால்ல கையிலே விழுந்து கொஞ்சம் குறைக்கச் சொல்லுங்கோனு... நாலு நாளைக்கொருதரம் போய் நின்னாதானே அவனுக்கும் நம்ம நினைப்பு வரும்?"

"நாலு நாளைக்கு ஒரு தரம் குறைச்சு ஏத்த இது என்ன வெங்காய வியாபாரமா?"



முனகலாக சேஷன் பேசினது காதில் சரியாக விழாததால் ருக்கு சமையல் கட்டிலிருந்து "என்ன? என்ன சொல்றேள்?" என்று அதட்டலாய் கேட்டாள்.

"ஒண்ணுமில்லே—போய் பாத்திட்டு வரேன்னு சொன்னேன்..."

நிச்சியமாக கூடி வராத சம்பந்தம், இது தங்கள் அந்தஸ்த்துக்கு ரொம்ப எட்டா இடம் என்று தெரிந்தும் அப்பாவை அம்மா விரட்டியது சந்துருவின் கோபத்தை அதிகரித்தது. இப்போது என்றில்லை; நாலைந்து வருஷங்களாகவே இப்படித்தான், பெரிய இடமாக பார்க்க வேண்டியது, அப்புறம் அதை முடிக்க துப்பில்லை என்று அப்பாவை திட்ட வேண்டியது.

சேஷன் எழுந்து சட்டை மாட்டிக் கொண்டார். கலைந்த தலையை சீப்பால் வாரிக் கொண்டார். பர்ஸை எடுத்து பாக்கெட்டில் செருகிக் கொண்டார்.

"பத்தாயிரம் ஜாஸ்திப்பா ஐயாயிரம் கொடுக்கிறேன், பத்து பவுன் நகை போடறேன். தலை தீபாவளிக்கு வைர மூக்குத்தி போடறேன்னு சொல்லி பாருங்கோ..."

"சரி"

"ஒண்ணும் தோது படலைன்னா அந்த ஆற்காட்டு வரன் என்னாச்சுன்னு கேளுங்கோ?"

"சரி"

"வரப்போ, வழிலே சுந்தரி மாமியாத்துலேந்து இந்த மாச பொம்மை புத்தகம் வாங்கிண்டு வறேளாப்பா?" இது நாழிகை அந்த வார பத்திரிக்கை ஒன்றில் இந்த உலகத்தின் நினைப்பே இல்லாமல் அமிழ்ந்து கிடந்து விட்டு தலை நிமிர்ந்த அன்னம் சேஷனுடைய இரண்டாவது பெண் பேசினாள்.

“இரண்டு நாளா பவுடர் தீர்ந்து போச்சுனு நா சொல்லறதை அப்பா காதுலியே போட்டுக்க மாட்டேங்கறும்மா” கண்ணாடி முன் அமர்ந்து வகிட்டை மாற்றி, மாற்றி எடுத்து வாரி பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த நீலா புகார் படித்தாள்.

துண்டுடன் குளிக்க புறப்பட்ட ருக்கு கூடத்தில் வந்து நின்றாள்.

“குழந்தை கேக்கறாளே.. ஒரு பவுடர் டப்பா வாங்கிண்டு வரமுடியலையா உங்களுக்கு? ஞாபகமா இப்ப வாங்கிண்டு வாங்கோ.”

“இன்னிக்கு ஞாயித்துக் கிழமை”

“இருந்தா, என்ன? கடையே இல்லாமலா போயிடும்?”

“கடை பத்து மணிக்கு திறப்பான்; இப்ப ஏழரை தானே ஆறது!”

“தரகனைப் பார்த்துட்டு சுந்தரி மாமியாத்துக்கு போறத்துக்குள்ள கடை திறக்கற நாழி ஆயிடும்”—

“சரி அரை டம்ளர் காபி குடேன் குடிச்சுட்டுப் போறேன்...”

ருக்கு விழிகளை உருட்டி விழித்தாள்.

“கார்த்தால டம்ளர் நிறைய குடிச்சாச்சு....இன்னும் சித்த போனா, சமையல்ஆயிடும், சம்ப்ரம்மா உட்காந்து சாப்பிடவேண்டியது தானே?...அதுக்குள்ள காபி என்ன காபி? ஒரு நடை வெளிலே போயிட்டு வர்றத்துக்கு ஒரு ஆம்பிளைக்கு இத்தனை அசம்ஞ்சத்தனமா? நினைச்சு நினைச்சு காபி, காபினா, எத்தனை தரம் பாலை ஏத்தி இறக்கறது! ஏதுடா, ஞாயித்துக் கிழமை ஆச்சே, ஆத்துல இருக்கறவாளுக்கு கொஞ்சம் உபகாரமா இருப்போம்ங்கறதை விட்டுட்டு...



சந்துரு புத்தகத்தை ஓசையுடன் மூடினான் எழுந்தான். அம்மாவை ஆத்திரத்துடன் பார்த்தான்.

“அப்பாவை ஏதாவது சொல்லிண்டே இருக்காட்டா உனக்கு போது போகாதாம்மா? ம்? தெரியாமத்தான் கேக்கறேன்...உனக்கும் இந்த நீலா, அன்னத்துக்கும் இதைத் தவிர வேற வேலையே இல்லையா? நேத்து மாட்னி ஆட்டத்துக்கு போயிட்டு வந்தப்போ வழிலே பௌடர், ‘பொம்மை’ புத்தகத்தை வாங்கிண்டு வர்றது தானே! ஒரு நாள் விடாம மூணு பேரும் ஊர் சுத்தறேள்....ஆனா, உங்க காரியங்களை கவனிக்க மட்டும் அப்பாவை விரட்டணும் எக்ஸாம் வரது ..நிம்மதியா படிக்கணும்னா இந்தாத்துல முடியற காரியமா அது? ச்சே...நீங்கள்ளாம் எக்கேடு கெட்டுப் போங்கோ...”

“என்னடா! ரொம்பத்தான் வாய் நீளறது! யார் கத்துக் கொடுத்தா இந்த பேச்செல்லாம் பேச? ஆம்பிளையா லட்சண பொருப்பா, சுறுசுறுப்பா உங்கப்பா இல்லாதது உன் கண்ல படலை—நாங்க கத்தறதும் விரட்டறதும் மட்டும் பளிச்சுனு படறதோ! நானும் பார்க்கறேன்... கொஞ்ச நாள்லே நீ துளுத்துதான் போயிட்டே...எதிர்த்து எதிர்த்து பேசறே...யார்டா கத்துக் கொடுத்தா? இந்த மனுஷன் தானா? உன்னை தூண்டி விட்டுவிட்டு வேடிக்கை பார்க்கறாரா? சொல்லுடா?”

இதற்கும் அப்பாவையே காரணம் காட்டி அம்மா பாயவும், இனி உன்னோடு பேசி என்ன ப்ரயோஜனம் என்கிற தினுசில் சந்துரு நிற்க, மேற்கொண்டு எதையோ முணுமுணுத்தபடி ருக்கு குளிக்கப் போனாள். சந்துருவுக்கு ரொம்ப ஆயாஸமாக இருந்தது. புத்தகங்களை எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்குப் போகலாமா என்று நினைத்த நிமிஷத்தில் வாசக் கதவு நாதங்கியை யாரோ

டொக் டொக்கொன்று சப்திப்பது புரிய, வாசப் பக்கம் திரும்பி நடந்தான்.

கதவருகில் ஒரு பெண்மணி.

சிகப்பாய், ஒல்லியாய், லட்சணமாய்.

வாயில் புடவை, பிச்சோடா போர்த்தின தலைப்பு...

மாடிப்படி ஏறினது மூச்சை இரைக்க நின்றவளின் முகத்தில் ஏகமாய் பயம்...

"யாரு?"

"இ...இதானே சேஷன் வீடு?"

"ஆமா"

"அவர் இருக்காரா?"

அந்தப் பெண்மணிக்கு நாற்பது வயசிருந்தால் அதிகம். படபடப்பாக, ஆனால் ரொம்ப சன்னமான குரலில் பேசினார்.

"இருக்கார் நீங்க யாரு?"

"நா...நா வந்து...அவரைப் பார்க்கணும்...என் பேர் மங்களம்...மங்களம் வந்திருக்கேன்னு அவர் கிட்ட..."

மகன் யாருடனே பேசுவது புரிய கூடத்திலிருந்து வராந்தாவுக்கு வந்த சேஷன் கன்னத்தில் அறைந்து விட்ட மாதிரி திடுக்கிட்டார்.

யார்?

மங்களமா?

அந்த மங்களமா?

எங்கேயிருந்து திடுமென வந்து சேர்ந்தாள்!

அதுவும் இத்தனை வருஷங்களுக்குப் பிறகு...?



# 2

சேஷன் அவனை பெற்றவர்களுக்கு ஒத்தை பிள்ளை: ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு.

தொட்டிலில் அவனைக் கிடத்தியபோது பெரியவர்கள் அவனுக்கு வைத்த பெயர் சேஷன் இல்லை. சரியாகச் சொல்லவேணும் என்றால் அவனைத் தொட்டிலில் கிடத்தியது அப்புறம்தான். முதலில் அறை மூலையில் குப்பைகளைக் கூட்டிச் சேர்த்து, பழைய காகிதங்களைப் பிய்த்துப் போட்டு அதன் மேல் கிடத்தி குப்பை, குப்பூ, பிச்சை என்ற பெயர்களால் தான் அவனை அழைத்தார்கள்.

சேஷனுக்கு முன்னால் நாலு குழந்தைகள் முழுசாய் பிறந்து, பத்துநாள், ஒருமாசம் நாலுமாசம் ஆறு மாசம் என்று ஒவ்வொன்றையும் மண்ணுக்கே திரும்ப வாரி கொடுத்துவிட, அடுத்த முறை குழந்தை பிறந்தால் அதை நாங்களே குப்பையில் போட்டு விடுகிறோம் என்று அவன் தாய் ஜெயம்மாவும், தகப்பனார் நடேசனும் வேண்டிக் கொண்டிருந்தார்கள். அதன்படி உண்டாகி, பிள்ளை பிறந்ததும் குப்பையில் புரட்டி நீ குப்பையாகவே இரு ஊர் பிச்சையாகவே எப்படியோ வளர்ந்து விடு, என்று சொல்லி இனி உன் பேர் குப்பைபிச்சை என்றும் கூறினார்கள்.

ஏழெட்டு வயசு ஆகும் வரை பெற்றவர்க்கும் ஊருக்கும் அவன் பிச்சையாகத்தான் இருந்தான். அதற்குப் பிறகே சண்டி பண்ணத் துவங்கினான்.

'எல்லாரும் சிரிக்கிறா. என் ஸ்கூல் பசங்க எல்லா[ம்] கேலி பண்ணறா...என் பேரை மாத்து, பிச்சைனு கூப்பிட[ா] தே" என்று நித்தமும் அவன் கண்ணீரோடு மடியி[ல்]

படுத்துக் கெஞ்சியது தாளாமல் போக, அம்மாக்காரி புருஷனிடம் வக்காலத்து வாங்க அவர் குடும்ப ஜோசியரிடம் சென்று, ஜாதகத்துக்கும் பிறந்த ராசிக்கும் பொருத்தமான ஒரு பெயரைச் சொல்லும்படி வேண்ட, தீர்க்காயுசுடன் இருக்க உதவும் பெயர் என்ற ஆசிர்வாதத்தோடு ஒரு வழியாய் பிச்சை சேஷன் ஆனான்.

சேஷன் அவனை பெற்றவர்களுக்கு மஹா செல்லம் மஹா உசத்தியாக இருந்தாலும் மதமதவென்று உடம்பு வளர்ந்த அளவுக்கு புத்தி வளராமல் போனதால், நிதானமாக எனக்கென்ன அவசரம் என்று ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு ஆண்டுகள் தங்கி எஸ். எஸ். எல். ஸி. ஐ தாண்டும்போது அவனுக்கு வயசு பத்தொன்பது. உன்பாடு என்பாடு என்று முக்கி முனகி இண்டர்ஃபைனல் இயர் படித்த போது இருபத்தி இரண்டோ மூன்றோ...

அப்போதுதான் ருக்கு அவன் வாழ்க்கைக்குள் எட்டிப் பார்த்தாள்.

சின்ன வயசிலிருந்தே சேஷனுக்கு கெட்டிக்காரத்-தனம் அவ்வளவாக போதாது என்று தான் சொல்ல வேண்டும்..

அவனை சாது என்று சொன்னவர்கள் உண்டு. இரண்டாங் கெட்டான் என்றவர்கள் உண்டு, அசடு என்று சொன்னவர்களும் உண்டு.

ஏதோ ஒன்று மொத்தத்தில் யார் வழிக்கும் வலிய போகமாட்டான், எந்த வம்பிலும் அகப்பட்டுக் கொள்ள மாட்டான்.

இப்படி எதிலும் பட்டுக் கொள்ளாமல், யார் எது சொன்னாலும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்த சேஷனுக்குள் தெரிந்தோ, தெரியாமலோ இரண்டு சபலங்கள் ஆதி நாட்களிலேயே புகுந்து கொண்டு விட்டன.

ஒன்று நாக்கு சபலம்.



ஒத்தை பிள்ளை என்று ஜெயம்மா பார்த்து பார்த்து ஊட்டி வளர்த்ததாலா, இல்லை ஸ்வபாவமாகவே தானா, தெரியவில்லை, ஒரு நாளைக்கு மூன்று அல்லது நாலு வேளை கூட வக்கணையாய் சாப்பிட சேஷனுக்குப் பிடிக்கும்.

கறந்த பாலை பொங்கப் பொங்க காய்ச்சி, அப்போது தான் இறக்கின டிகாஷன், சர்க்கரை கலந்து தினமும் நாலைந்து தடவைகள் சாப்பிட பிடிக்கும்; மோர் குழம்பு, பருப்பு உசிலி, மிளகு குழம்பு, பருப்புத் துவையல், அரைத்துவிட்ட சாம்பார், பொறித்த அப்பளம், பொங்கல், கொத்ஸு, வததல் குழம்பு, சுட்ட அப்பளம். என்று இணைத்து தோதாக சமைக்கச் சொல்லி ரசித்து சாப்பிட பிடிக்கும், அரிசி உப்புமா கிண்டினால் அடியில் பிடித்திருக்கும் அடையை சர்க்கரை ஊறுகாயில் புரட்டி சாப்பிடப் பிடிக்கும் இன்னும், இன்னும்...

மொத்தத்தில் சரியான நாக்கு வேளா வேளைக்கு ருசி ருசியாய், வித விதமாய் கேட்கும் நாக்கு...

சேஷனுடைய இரண்டாவது சபலம் பெண்-பெண்மை.

விவரம் புரிந்த நாளிலிருந்தே பெண்களோடு பழகுவது அவர்கள் பேச்சைக் கேட்பது அவர்களைப் பார்ப்பது அவனுக்கு அலாதி ஆனந்தத்தைத் தந்தது.

அம்மாக்கோண்டு, சாது என்ற பெயர்கள் அவனுடைய இந்த குணத்துக்கு ஒரு அழகான போர்வையாக அமைந்ததால் யாருடைய குறுக்கீடும் இல்லாமல் தன் இரண்டாவது சபலததையும் அவனால் நன்றாக வளர்த்துக் கொள்ள முடிந்தது.

விடுமுறையில் கிராமத்துக்குப் போனால் மாமிகளோ பல்லாங்குழி, சோழி, ஐந்து கல் ஆடுவான்; அவர்க குளிக்க குளத்துக்கு கிளம்பினால் துணி மூட்டையை தூக்கும் சாக்கில் கூடவே போவான். படிக்கட்டி

உட்கார்ந்து பக்கவாட்டு பார்வையாய் குளிக்கும் பெண்களை அது சின்னப் பெண்ணானாலும் சரி கிழவியானாலும் சரி பார்த்து மகிழ்வான்.

அதிகமாக பேசாமல் ஏவும் வேலைகளைத் தெரிந்த வரைக்கும் செய்து விட்டு கூடவே இருக்கும் அவனை 'அட வாண்டுப் பயலே இத்தனை சாதுவா இருந்தா நீ எப்படிடா இந்த உலகத்துலே பிழைச்சிக்கப் போறே' என்று சொல்லி ஏதாவது மாமி அணைத்துக் கொண்டால் அந்த அணைப்பு ஏக சுகத்தைத் தர பரவசமாகி நிற்பான்.

பள்ளிகூட நாட்களிலேயே பத்திரிகைகளில் வரும் பெண்களின் படங்களை கத்தரித்து, புத்தகங்களின் நடுவில் வைத்து படிக்கும் சாக்கில் அவைகளை பார்த்துக் கொண்டிருக்கும் பழக்கம் அவனுக்கு உண்டு.

சினிமா போஸ்டர்கள் அதிகமாக காணப்படாத காலம் தான் என்றாலும், கண்ணில் தென்படும் ஓரிரண்டில் சிரிக்கும் நடிகைகளின் அழகை கிட்டத்தில் நின்று ரசிப்பான். யாரும் அருகில் இல்லாவிட்டால் தடவி கூட பார்ப்பான்.

சேஷனுடைய அப்பா கொஞ்சம் சொத்து பத்துகாரர் தான். கிராமத்தில் ஒரு வீடு, கொஞ்சம் நிலம் உண்டு. வக்கீல் குமாஸ்தாவா வரும் வருமானம் உபரி புருஷன், மனைவி, பிள்ளைக்கு அந்த காலத்தில் பவுன் பதிமூன்று ரூபாய் வித்து பிறகு ஐம்பதைத் தொட்ட காலத்தில் இது வெள்ளம் தானே.

இண்டர் இரண்டாவது வருஷம் படிக்கையில் சேஷனுடைய இருபத்தி இரண்டாவது வயசில் ஜெயம்மாவுக்கு தலை சுத்தல், மயக்கம் அடிக்கடி வரத் துவங்க பாலா மாமி சமையல் வேலையில் உத்தாசை செய்ய வந்துசேர்ந்தாள்.

பாலா மாமிக்கு ஒரு கால் யானைக்கால். மாசா மாசம் அது ஜிவு ஜிவு என்று சிவந்து கொள்ள இரண்டு நாள் ஜுரம் அடிப்பது ஒரு மாமூலான சமாசாரம்.



முதலில் இப்படி யானைக்கால் உள்ளவளை வைத்துக் கொண்டாவது அவஸ்தைப்பட வேண்டுமா என்று நினைத்த ஜெயம்மா பாலா மாமியின் கை மணத்தை ருசி பார்த்த பிறகு போனால் போகிறது என்று இருந்து விட்டாள்.

யானைக்கால் வீங்கிக் கொண்டு ஜுரம் ஜாஸ்தியாகும் போதெல்லாம் பாலா மாமி கல்யாண சமையல்காரனாக இருக்கும் பிள்ளை வீட்டுக்குப் போய் விடுவாள். இரண்டு நாளில் ஜுரம் சரியான பிறகு திரும்பவருவாள். ஒரு வருஷமாய் இதான் வழக்கம்.

அந்த முறை பாலா மாமி வந்த போது பின்னோடு ஒரு பதினேழு, பதினெட்டு வயசு பெண்ணும் வந்தாள்.

ரொம்ப உயரமும் இல்லாமல், ரொம்ப குட்டையாகவும் இல்லாமல் கறுப்பாய், லேசாக ஒட்டின தாடையும் சின்னக் கண்களுமாய் இருந்த அந்தப் பெண்ணுக்கு உடம்பு மட்டும், முக்கியமாய் மார்பு, சீமை பசு மாதிரி அலாதி வளர்த்தியாய் இருந்தது.

''யாருடீ பாலா இது?''

''என் பேத்தி மாமி... தாயில்லா பொண்ணு...தெரிஞ்ச வாளாத்துலே சுத்து காரியம் பண்ணிண்டு இருந்தா... இப்ப அவா வேற ஊருக்குப் போயிட்டா...'வீட்டுலே சும்மா இருக்கறதுக்குபதிலா உனக்கு உத்தாசையா இருக்கேன்னு கூட்டிண்டு வந்தேன். என் பிள்ளையும் கல்யாண வேலையாபோயிடறானு இவ தனியா ஆத்துல இருக்க வேண்டி வர்றது... ஆனாலும் இந்த தடவை என்னமோ ரொம்பத்தான் பலஹீனமா இருக்கு...கை, கால் எல்லாம் வெல வெலனு வர்றது - நா உக்காந்தபடி சொன்னா .. இவ செய்வோ ...கெட்டிக்காரி...இரண்டு நாள் இருக்கட்டும் என்ன மாமி?''

ஜெயம்மா சரி என்று பேசாமல் இருந்து விட்டாள்.

மனசுக்குள் இருக்கும் சபலத்தை சேஷன் ஒரு நாள் கூட வெளிக் காட்டியிராததால், பிள்ளை பெண் விஷயத்தில் பலவீனமானவன் என்பதால் ஜெயம்மாளால் சுத்தமாக புரிந்து கொள்ள முடியாததில் ஆச்சர்யம் என்ன?

இரண்டு நாட்கள் இருந்து விட்டு போன ருக்கு அடுதத வாரம் மறுபடி இரண்டு நாட்கள் வந்தாள். திரும்ப நாலு நாள் வந்தாள். மறுமாசம் பாட்டிக்கு ஜுரம் வந்தபோது தானே தனியாக சமைக்க வந்தாள்.

பாட்டியைப் போலவே பேத்தியும் மணக்க மணக்க சமைத்ததால் பாலா மாமிக்கு பர்த்தியாய் அவள் வந்து போவதை ஜெயம்மா நடேசன் இருவரும் ஆட்சேபிக்க வில்லை.

ருக்கு கை காரியத்தில் மட்டும் கெட்டி இல்லை. ஆளை எடை போடுவதில் ராட்சஸியாகவே இருந்தாள்.

வந்த மறுநாளே சேஷனின் பக்கவாட்டு பார்வையும் கீழ் கண்ணோட்டமும், திருட்டு முழியும் புரிபட்டுப் போக ஓஹோ இது சரியான கேஸ் என்று தீர்மானித்து விட்டாள்.

ருக்குவைப் பற்றி இங்கே கொஞ்சம் தனியாகச் சொல்லவேண்டும்.

அழகி என்று குறிப்பிடும்படியாக அவளிடம் எதுவும் அமையா விட்டாலும், ஆண்களை கவரும் ஏதோ ஒன்று தன்னிடம் இருப்பதை அவள் தன் பதினாலாம், பதினைந்தாம் வயசிலேயே உணர்ந்து விட்டாள்.

எப்படி நடந்தால், எப்படி நின்றால், என்ன பேசினால் ஒரு ஆணை சுலபமாக தன் பக்கம் இழுக்கலாம் என்ற வித்தையெல்லாம் புரிந்து போக, குடியிருந்த ஸ்டோர் ஆண்களிடம் அந்த வயசிலேயே சின்னச் சின்ன காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவது அவளுக்கு சுலபமாக இருந்தது.



ஆண்களிடம் நல்ல பேர் வாங்கிக் கொண்டாலும், இவள் குணத்தைப் புரிந்து கொண்டுவிட்ட சக குடித்தன பெண்களிடம் ருக்கு செமையாய் வாங்கிக் கட்டிக் கொண்டது என்னமோ நிஜம் தான்.

'இந்த வயசுலேயே என்ன தளுக்கு, என்ன மினுக்கு? இது ஆணுளும் ரொம்பத்தான் துள்ளறது' என்றார்கள்.

'ஆம்பிளைகள் நிக்கற இடத்துலே சதாசர்வகாலம் இதுக்கு என்ன வேலை மார் தாவணியை பூணலா போட்டுண்டு என்ன சிரிப்பு சிரிக்கிறது! கொஞ்சம் அடக்கி வையுங்கோ' என்றார்கள்.

'மாமா, மாமானு எங்காத்துக்காரர் கிட்ட என்ன கொஞ்சல் வேண்டி இருக்கு! அவர் கையிலே இருக்குற பத்திரிக்கையை பிடுங்கிண்டு ஓடற அளவுக்கு அது என்ன ஸ்வாதீனம்! குதிரையாட்டம் உடம்பை வைச்சிண்டு, என்ன குதி, என்ன பேச்சு! ஒரு பொண்ணுக்கு அடக்கம் வாண்டாம்? இன்னொரு தரம் அவர் கிட்ட இவ நின்னு பேசினு, நாக்கை இழுத்து அறுத்துடறேன் ஆமா" என்றார்கள்.

நாளாக ஆக அதிகமான இந்த புகார்களை காதில் வாங்காததோடு, பொறுப்பு சுத்தமாய் இல்லாமல் பிள்ளை திரிய, ஒரு வீட்டில் சுத்து வேலைக்கு பாட்டி அவளை விட்டு பார்த்தாள்.

போன இடத்திலும் வீட்டுக்கார மாமாவோடு சரி சமமாக உட்கார்ந்து கேரம் போர்ட் ஆடும் அளவுக்கு விஷயம் போய்விட சீட்டு கிழிந்து வீட்டுக்கு வந்தவளை தன்னோடு கூட்டிக் கொண்டு வந்தாள் பாலா...

ஒரு மாசம் வரைக்கும் பேத்தி ஒழுங்காக இருந்து ஜெயம்மா, நடேசனிடம் நல்லபேர் வாங்கிக் கொள்ளவே தைரியமாய் உடம்புக்கு முடியாத நாட்களில் தனியாகவே

அவளை வேலைக்கு பாலா மாமி அனுப்ப அப்புறம் தான் சேஷனுக்கு பக்குவமாய் குறிவைக்கத் துவங்கினாள் ருக்கு.

## 3

முதல் பத்து நாட்களுக்கு ஒழுங்காக இருந்து விட்டாலும், சேஷனின் பார்வையும், சபலமும் புரிபட புரிபட மெதுவாக தன் கைவரிசையை ருக்கு காட்ட ஆரம்பித்தாள்.

கிட்டத்தில் யாரும் இல்லை என்பதை ஊர்ஜிதம் செய்துக் கொண்டு, வெட்கத்துடன் முதலில் சின்னதாகப் புன்னகைத்தாள் பிறகு உதடுகளை ஈரப்படுத்தி தலையை சாய்த்து சாஹஸமாக பார்த்தாள்.

நாலாம் நாள் காபி குடித்து விட்டு சேஷன் லோட்டாவை கீழே வைக்க முனைந்த போது, ஜெயம்மா பார்க்காத கணத்தில் கையைத் தொட்டு வாங்கினாள்.

அவன் நன்றாக கவனிக்கத் துவங்கி விட்டான் என்று தெரிந்ததும், அவன் கண்ணில் விழும்படி அடிக்கடி நடந்தாள் நின்று கொண்டாள். சற்றே மார் தாவணியைத் தளர்த்திக் கொண்டு குனிந்து பெருக்கினாள்; துடைத்தாள்.

மேற்கொண்டு சில நாட்கள் போவதற்குள் சாப்பிட்டு கொல்லைப் பக்கம் கை கழுவ வந்தவனிடம் குனிந்து ரகஸியமாக ஆசை இருக்கு, ஆனா தைரியம் இல்லையே! என்று சீண்ட தைரியம் பெற்றாள்.

ஒரு நாள் வாசலில் காய்கறி காரியிடம் பேரம் பேசிக் கொண்டிருந்த ஜெயம்மா உள்ளே! மேஜை மேலே சில்லரை வைச்சிருக்கேன், எடுத்துண்டு வா'' என்று ல் கொடுக்க சில்லரை எடுக்க உள்ளே நுழைந்தவள்



படித்துக் கொண்டு ஒரு பக்கமாய் அமர்ந்திருந்த சேஷனிடம் சென்றாள். அவன் கையைப் பற்றி தன் நெஞ்சில் வைத்தாள் ஒரு நொடிதான். சில்லரையுடன் ஓடிவிட்டாள்.

அந்தத் தொடலும், சிரிப்பும், மார்பு ஸ்பரிசமும் கிடுகிடு வென்று உடம்பில் பரவ, சேஷனின் சபலம் ஹா ஹா என்று தவிக்க முற்பட்டது.

படங்களைப் பார்த்து ரசிக்க, கற்பனை பண்ண துணிவு இருந்ததே ஒழிய, நிஜத்தில் எதையும் நெருங்கக் கூட சேஷன் பயந்தது தான் உண்மை.

எங்கேயாவது, யாரிடமாவது போனால் வியாதி வந்து விடும் என்ற பயம்; கண்டபடி அலைந்தால் நாளைக்கு ஒருத்தியை கல்யாணம் பண்ணிக் கொண்டு குழந்தை குட்டி பெற்றுக் கொள்ள முடியாது என்ற பயம்.

இன்னும் என்னென்னமோ பயம் ஆனா விரட்டிய விரட்டலில் நிறைய சபலம், அதைவிட நிறைய கையாலாகாதத்தனம் என்று வாழ்ந்து கொண்டிருந்த சேஷன் வலிய ருக்கு மேலே வந்து விழ விழ தேன் குடித்த நரியானான்.

சாதாரண ருக்கு, அவன் கண்களுக்கு ரதியானாள்.

கறுப்பும் ஒரு அழகு என்று நினைத்தான்.

அந்த உடம்பும், அந்த தளதளப்பும், அந்த சீண்டலும்...

ஆஹா...

பகலும், இரவும், கனவிலும் நனவிலும் ருக்கு அவனை நினைப்புகளை ஆக்ரமிக்கத் துவங்க, அவள் கொடுத்த தூண்டுதலாலேயே துணிச்சல் பெற்று அவனும் அவளை நெருங்கினான்.

சந்தி பண்ணிவிட்டு பண்ணினேன் என்று பேர் பண்ணிவிட்டு அரக்க பரக்க கிணத்தடியிலிருந்து வருவான்.

அவள் ரேழியில், அந்த சந்தியா காலத்து அரை குறை இருளில், பதுங்கி காத்திருப்பாள்.

இரண்டு நிமிஷமோ, மூன்று நிமிஷங்களோ திருட்டுத் தனமாய் அவளோடு சல்லாபிப்பது சேஷனுக்கு பரவசமாக இருக்கும்.

அப்புறம், சாப்பிட்டு கை அலம்பும் அந்த நிமிஷம்...

பரிட்சைக்கு படிக்கிறேன் பேர்வழி என்று பதினொன்று, பன்னிரண்டு வரை முழித்துக்கொண்டிருந்து விட்டு அப்பா, அம்மா தூங்கின பிறகு உள்ளே கூடத்துக்கு அவன் வரவோ, இல்லே இவள் முன் அறைக்குப் போகவோ முயற்சித்த நாட்கள்...

ஏற்கனவே சேஷன் படிப்பில் ரொம்ப திவ்யம்... இப்போது குரங்கு புத்தியாகி விட்டதும் கேட்பானேன்?

என்னமோ எழுதினேன் சாமி என்று பரிட்சை எழுதி விட்டு, முடிவைப் பற்றி கவலேப்படாமல் இன்னும் எப்படியெல்லாம் திருட்டுத்தனமாக ருக்குவோடு சேர்ந்து இருக்கலாம், அரை நிமிஷம், ஒரு நிமிஷம் என்று இருக்காமல், சிறிது நாழியாவது எப்படி ஆனந்தமாய் இருக்கலாம். என்று திட்டம் தீட்டிக்கொண்டிருந்த ஒரு நாளில் வகையாய் அம்மாவிடம் மாட்டிக் கொண்டான்.

கொஞ்ச நாட்களாகவே ஜெயம்மாவுக்கு லேசாக சந்தேகம் தான்.

சட்டென்று திரும்பினல் பிள்ளேயும், சமையல்கார குட்டியும் பார்த்துக்கொள்ளும் பார்வை, சிரிக்கும் சிரிப்பு...

என்ன இது!



ஒருநாள் ரேழியில் என்னமோ நிழல் மாதிரி தெரிய "யாருடீ அது?" என்று கேட்டுக் கொண்டே போய் விட்டாள்.

சரசரவென்று யாரோ ஓடும் ஓசை...

வேர்க்க வேர்க்க ருக்கு...

"என்னடீ சத்தம் அது?"—

"பூனே மாமி... கொல்லே பக்கம் போயிட்டு வந்தேனு. எதிர்க்க வந்தது, பயந்துட்டேன்..."

இன்னெரு நாள். ராத்திரி பத்து மணி இருக்கும் பரிட்சை நடந்து கொண்டிருந்த சமயம்...

திடுமென்று கண்விழித்து பார்த்தால் சற்று தள்ளி படுத்திருக்கும் ருக்கு படுக்கை காலியா இருக்கிறது.

எங்கே போனுள்?

"டீ... ருக்கு..."

"வந்துட்டேன் மாமி"—

வாச பக்கத்திலிருந்து வந்தவள் கையில் டம்ளர்

"எங்கேடீ போயிட்டு வரே?"

"உங்க பிள்ளே தண்ணி கேட்டார்"

"என்னே கூப்பிட்டா, நா குடுக்க மாட்டேனு?"

"உங்களேத்தான் கூப்பிட்டார் மாமி... நீங்க எழுந்திருக்கலே... பாவம் அசந்து தூங்கறேளேனு நா கொண்டு கொடுத்தேன்."

வெகுளியாக முகத்தை வைத்துக் கொண்டு ருக்கு பேச அந்த முறையும் ஜெயம்மா அதோடு விட்டு விட்டாள்.

ஆனால், பரிட்சை முடிந்த பிறகு ஒருநாள்—

மாடியில் வடகம் காய்ந்த அந்தநாளில் வடகத்துக்கு காவலாய் ருக்குவை மாடியில் இருக்கச் சொன்ன அந்த நாளில், திடீரென்று நினைத்துக் கொண்டு மாடிக்குப் போன போது கையும்,களவுமாய் பிள்ளையையும், அவளை யும் ஜெயம்மா பிடித்துவிட்டாள்.

சிநேகிதன் வீட்டுக்குப் போறேம்மா—என்று சொல்லி வெளியே போய், அம்மா ஏதோ காரியமாய் சமையல் கட்டுக்குள் சென்றதும் நைஸாக உள்ளே வந்து மாடிக்கு போன சேஷனும், வத்தலை காகம் கொத்த விட்டுவிட்ட ருக்குவும் சுவருக்குப் பின்னால் பதுங்கி, சில்லரை சேஷ்டை யில் ஈடுபட்டிருந்ததை ஜெயம்மா கண்ணால் பார்த்த பிறகு அம்மாடி—என்று அதிர்ந்து போனாள்.

ஒரு முழி முழித்து முதலில் பிள்ளையை கீழே விரட்டினாள்.

துணியோடு வடாத்தை வாரி சுருட்டிய பின் 'போடி கீழே' என்று ருக்குவை அதட்டி கீழே போகச் சொன்னாள்.

சமையல் கட்டுக்குச் சென்றதும் 'தேவடியா நாயே—எத்தனை தைரியம் இருந்தா பட்ட பகல்லே இப்படி நடந்துப்பே' என்று அடிக்குரலில் உறுமி 'உடனே, இந்த நிமிஷமே இந்த இடத்தைவிட்டு கிளம்பு...ம், என்று அவள் துணிகளை முகத்தில் எறிந்து விரட்டினாள்.

பிள்ளையிடம் ஒரு வார்த்தை கூட பேசாமல் அவனை தவிர்த்தவள் மாலையில் கணவர் வீடு திரும்பியதும் தலைப்பை வாயில் திணித்துக் கொண்டு, பிள்ளைமேல் அதிகமாக பழி போடாமல் ஒருதலை பட்சமாக நடந்ததை விவரித்தாள்.

"அவன் ஆம்பிளை—வயசு வந்தாச்சு, அந்த சிறுக்கி மேல விழுந்தா அவன் என்ன பண்ணுவான்? நாமதான்



கண்ட கழிசடைகள் அவனை வளைச்சு போட்டுக் கறத்துக்கு முன்னால விழிப்போட இருக்கணும்...முதல்ல —சேஷனுக்கு ஒரு கால்கட்டை போடணும். நீங்க இப்பவே கிளம்பிப் போய் தரகரை பார்த்துட்டு வாங்கோ —நம்ப கௌரவம் சந்தி சிரிக்கறத்துக்கு முன்னாலே உடனடியா ஒரு நல்ல குடும்பத்து பொண்ணை பார்த்து கல்யாணத்தை நடத்திடணும்..."

ஜெயம்மா கொடுத்த சாவிக்கு நல்ல சக்தி இருந்தது.

எண்ணி பதினைந்து நாட்கள் போவதற்குள் மங்களத் தின் ஜாதகத்தை வாங்கி, பொருத்தம் பார்த்து, எல்லாம் பொருந்தி இருக்க பெண் பார்க்க திருச்சிக்குச் செல்லும் நாளைகூட நடேசன் ஜரூராய் குறித்துவிட்டார்.

## 4

"அம்மா"—

குனிந்து, மூச்சிரைக்க சமையல் கட்டை அலம்பி விட்டுக் கொண்டிருந்த ஜெயம்மாவின் காதுகளில் சேஷன் மெதுவாக அழைத்தது விழவில்லை.

பதினைந்து நாட்களாக—பிள்ளையையும் ருக்குவையும் கையும், களவுமாகப் பிடித்த நாளாக—அவள் தான் வீட்டு வேலைகளை, முடிந்ததோ, முடியவில்லையோ செய்கிறாள்.

"நாளைக்கு பாலா மாமி வந்தா வாண்டாம் மாமி, உங்க பேத்தியால எங்காத்து பேர் சீரழிய வாண்டாம், ஏதோ நல்லவரா இருக்கேளே, உடம்பு முடியாட்டாலும் இருக்குற வரைக்கும் இருந்துக்கோங்கோனு நினைச்சு பரிதாபப்பட்டதுக்கு கை மேல பலன் கிடைச்சிடுத்து. இரண்டாம் பேருக்கு விஷயம் தெரியறத்துக்கு முன்னால முதல்ல நீங்க நின்னுக்கோங்கோ...போன மாச சம்பளம்

இந்தாங்கோனு கண்ணும் காதும் வைச்சாப்பல அனுப்பிடணும்'' என்று கணவனிடம் சொல்லிவிட்டு மறுநாள் பாலா மாமியின் வரவுக்காக காத்திருந்தபோது மாமி வரவில்லை. அவள் மகன் ராமன், ருக்குவின் அப்பன் வந்தான்.

உசரமும் பருமனுமாய் வாசக் கதவை அடைத்துக் கொண்டு நின்றவனைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் ஜெயம்மா பயந்துதான் போனாள்.

இவன் எதற்கு வந்திருக்கிறான்?

என்றுமில்லாத அதிசயமாய் இவன் ஏன் வந்திருக்கிறான்?

அந்தப் பெண் போய் 'அப்பா அவாத்துப் பிள்ளை என் கையைப் பிடிச்சு இழுத்துட்டான்' என்று இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிவிட்டதோ!

ஹா—என் பெண்ணை உன் பையன் கெடுத்து விட்டான். இனி அவளுக்கு என்ன வழி—என்று கேட்க வந்திருக்கிறானோ?

அடி அம்மா?

அப்படிக் கூடவா கேட்டு விடுவான்?

நேத்து, கன்னு பின்னு என்று எதுவும் நடந்துவிட வில்லையே!

நான் பார்த்த போது அப்படியொன்றும் அலங்கோலமாய் அவர்கள் இருந்து விடவில்லையே...

என்னமோ சிறு பிள்ளைத்தனமாய், வயசு கோளாறில்...

ஒரு வேளை இதற்கு முன்னால் ஏடாகூடமாக ஏதாவது நடந்திருக்குமோ!



நான் தான் ஒன்றும் புரியாத மூடமாய் இருந்து விட்டேனோ?

இப்போது என்ன பண்ணுவது?

வீட்டு ஆம்பிளை கூட இங்கே இல்லையே!

கடன் காரன்—வந்து விட்டானே...

நான் என்ன செய்வேன்!

ஒரு நிமிஷ காலத்துக்குள் தவித்து, பறந்து பயந்து செத்தாலும், நிமிர்ந்து ருக்குவின் அப்பாவை பார்த்த போது கோபமும் ஆத்திரம் மண்டாமல், முகத்தில் வேதனையோடு ஒரு பக்கமாக ஒடுங்கி அவன் நின்றிருந்தது கொஞ்சம் தெம்பை கொடுக்க 'என்ன' என்கிற பார்வையை பார்த்தாள் ஜெயம்மா...

“விடி கார்த்தால அம்மா கிணத்தடியிலே வழுக்கி விழுந்திட்டா. கால் எலும்பு முறிஞ்சுடுத்து. அடிபட்டதுலே ஜுரம் வேற கணகணங்கறது. டாக்டர் கிட்ட காண்பிச்சேன். ஆஸ்பத்திரிலே சேர்த்துடு, வயசானவ, வீட்டுல வைச்சிக்கிறது கஷ்டம்ங்கறார்... நேத்திக்கு ருக்கு எதேச்சையாக ஆத்துக்கு வந்தது உபகாரமா இருக்கு. அம்மாவை ஆஸ்பத்திரிலே சேர்த்துட்டா அவளை பாத்துக்க, ஆத்தை பாத்துக்க, சாப்பாடு கொண்டுபோகனு எல்லாத்தையும் ருக்குதான் கவனிச்சுக்கணும். இப்ப கல்யாண ஸீஸன், நாலு காசு இப்ப சம்பாதிச்சாதான் உண்டு. வேலைய விட்டுட்டு என்னால அம்மாவை கவனிச்சுக்க முடியாது. அதனால... தயவு பண்ணி பதினஞ்சு, இருபது நாள் நீங்க பொறுத்துக்கணும். அம்மா சொஸ்தமாகி ஆத்துக்கு வந்தப்புறம் திரும்ப ருக்குவை அனுப்பறேன். அதுவரைக்கும்...”

ஜெயம்மா நிம்மதியாய் பெருமூச்சு விட்டாள்.

இதைச் சொல்லத்தான் இவன் மெனக்கட்டு வந்திருக்கிறுனு?

இதுவும் நல்லதுக்கு தான். நாம் நிறுத்திளும் என்ருல், அல்லு அசலில் ஏன் என்ன என்ற பேச்சு எழும். இப்போது அது கூட இல்லே. தங்கமாய் ஒரு காரணத்தை பகவானே கொடுத்திருக்கிருர்.

சந்தோஷத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் ஒரு மாச சம்பளத்தை கையில் கொடுத்து 'கஷ்ட நஷ்டத்துக்கு உதவாத மனுஷா, இருந்தென்ன, போய்யென்ன ..பாலா மாமி நன்னு தேற்ற வரைக்கும் ருக்குவை கிட்டக்கவே வைச்சிக்கோங்கோ. நா எப்படியோ சமாளிச்சுக்கறேன். அவசரமே இல்லே' என்று ஆறுதலாய் நாலு வார்த்தை பேசி அவளே அனுப்பி வைத்தாள்.

''அ...ம்மா...''

இந்த முறை சற்று பலமாக சேஷன் அழைக்க ஜெயம்மா நிமிர்ந்தாள்.

அறை வாசலில் பிள்ளை...முகத்தில் கலக்கம்...

என்ன விஷயம்?

ருக்குவோடு அவனேச் சேர்ந்து பார்த்து விட்ட பிறகு என்ன பிள்ளை இவன்! இப்படியா சமையல்கார குட்டியுடன் குலாவும் அளவுக்கு புத்தி இல்லாமல் இருப்பான்?' என்று கோபம் எழுந்ததால் அடுத்து வந்த சில நாட்களுக்கு பிள்ளையை நிமிர்ந்து பார்க்க, அவனேடு பேச கூட பிடிக்காமல் ஜெயம்மா இருக்கவே செய்தாள்.

ஆனுல் மங்களத்தின் ஜாதகம் பொருந்தி, பெண் பார்க்கப் போக வேண்டும் என்ற நிர்பந்தம் எழுந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக தன் கோபத்தை குறைத்துக் கொண்டாள்.



வயசுக்கு வந்த ஆண்பிள்ளை இருக்கும் விட்டில் அந்த பெண்ணே நுழைய விட்டது என் தப்புத்தானே!

இரும்பையும், காந்தத்தையும் பக்கம் பக்கமாய் வைத்தது என் தப்புத்தானே!

அந்த மேனு மினுக்கி சாஹஸம் பண்ணி மயக்கினல் இவன் என்ன செய்வான்?

சின்ன வயசிலிருந்து ஒரு வம்பு தும்புக்கும் போகாத பிள்ளை தானுக எப்படி தப்பாக நடக்க முனைந்திருப்பான்?

ம்ஹூம் இல்லே...

என் பிள்ளையை எனக்குத் தெரியாதா?

பத்து நாள் போவதற்குள் கோப தாபம் தீர்ந்து பழையபடி பாசமுள்ள அம்மாவாகி விட்டாள் ஜெயம்மா...

''அ...ம்மா...''

''என்னப்பா...அம்மா, அம்மானு கூப்பிடறயே தவிர வும் என்ன விஷயம்னு சொல்ல மாட்டேங்கறியே!''

''வந்தும்மா''

சேஷன் தயங்கினுன், வேஷ்டியின் ஓரத்தை கையில் பிடித்துத் திரித்தான்.

''என்னப்பா?''

''உங்கூட கொஞ்சம் பேசணும்மா...''

''பேசேன்.''—

''அப்பா எங்கே?''

''கடைத் தெருவுக்குப் போயிருக்கார், வெத்தலே பாக்கு, பழம், பூ, வாங்கிண்டு வர...சாயங்காலமா நாம

பெண் பாக்க ஊருக்கு கிளப்பறப்போ வெறுங்கையோட எப்படி போறது?''

''அம்மா''

''என்னடா இது! என்ன ஆச்சு உனக்கு? அம்மா அம்மானு மருகறே!''

கையிலிருந்த விளக்கமாறை ஒரு பக்கமாக ஜெயம்மா வீசி எறிந்தாள்.

பிள்ளையின் கையைப் பிடித்து அழைத்துப் போய் கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்தாள்.

''என்னப்பா என்ன சொல்ல இத்தனை தயங்கறே?''

சேஷன் கண்களைத் தாழ்த்திக் கொண்டான், சன்னமாக பேசினான்.

''இன்னிக்கு அந்தப் பெண்ணை பார்க்கப் போக வாண்டாம்மா...''

''எ...என்னது? ஏண்டா போக வாண்டாம்?''

''எனக்குப் பிடிக்கலேம்மா...''

''என்ன பிடிக்கலே?''

''......''

''என்னடா?''

அரை கணம் அம்மாவை நிமிர்ந்து பார்த்துவிட்டு குனிந்தவனின் கண்கள் கண்ணீரால் நிறைந்து போயின.

''டேய், என்னாச்சுடா, உனக்கு?''

''அவளுக்கு துரோகம் பண்ணிட்டு இன்னொருத்தியை கல்யாணம் பண்ணிக்க எனக்கு இஷ்டம் இல்லேம்மா,''



பிள்ளை என்ன சொல்ல வருகிறான் என்பது புரிய ஜெயம்மாவுக்கு 'பொக்' கென்றது.

''எவளேடா? அந்த தறுதலேயையா?''

''......''

ஜெயம்மா குரலை தழைய விட்டாள்.

''ஒண்ணு கேட்பேன். நிஜத்தைச் சொல்லனும்; உனக்கும் அவளுக்கும் நடுவுலே ஏடா கூடமா ஏதாவது ஆயிடுத்தாடா?''

''ஐய்யய்யோ அதெல்லாம் ஒண்ணும் இல்லேம்மா...''

''சாதாரண பழக்கம் தானா?''

''ம்ம்''—

''அப்புறம் துரோகம், அது இதுனு இது என்ன வெட்டி பேச்சு?''

''அதுக்கில்லெம்மா...ருக்கு பாவம்மா...எ ன க் கு அவளை பிடிக்கறது. அவளுக்கும் என்னைப் பிடிக்கறது... பேசாம எங்க இரண்டு பேருக்குமே...''

அவனை முடிக்கவிடாமல் ஜெயம்மா குறுக்கிட்டாள்.

''நன்னா இருக்குடா நீ பேசறது... நீ எங்கே, அந்த குட்டி எங்கே? நிலம் நீச்சுனு இருக்கற பிள்ளை நீனு திட்டம் போட்டு அவ உன்னை மயக்கப் பாத்திருக்கா...என்னடா அவகிட்ட இருக்கு? அழகா, பணமா, அந்தஸ்தா, என்ன இருக்கு, கரிய அப்பின மாதிரி ஒரு நிறம், ஒட்டின தாவாங்கட்டை? மை இட கூட தோது படாம கோடு மாதிரி கண்... என்னடா இருக்கு அவ கிட்ட? ம்?''

உடம்பு இருக்கிறது அம்மா. கையை பிடித்து அணைத் தால் கணகண வென்று சூட்டை உண்டாக்கும் அளவுக்கு என்னமோ இருக்கிறது அம்மா என்று மனசில்

நினைத்தாலும் சேஷன் பேசாமல் இருக்க, ஜெயம்மா தொடர்ந்தாள்.

"அவளுக்கு கிட்டத்தட்ட பத்தொம்பது இருபது வயசாறது, தெரியுமோன்னோ? இப்பவே உன்னைவிட பெரியவ மாதிரி இருக்கா! இன்னும் கொஞ்சம் வருஷம் போனா உனக்கு அக்கா மாதிரி தான் இருப்போ... பெண்டாட்டிங்கறவ, ஆம்படையானைவிட ஏழெட்டு வயசு சின்னவளா இருந்தாதான் அழகு. நாளைக்கு உனக்கு முடியாதப்போ அவ சின்ன வயசா இருந்து உன்னை ஓடி ஓடி கவனிச்சுப்போ...இளமையா, கட்டு விடாம இருப்போ...நாங்க பாத்திருக்கமே மங்களம், இவளுக்கு பதினாறு வயசுதாண்டா — இளசா, இப்ப பறிச்ச வெண்டைக்கா மாதிரி தளதளனு சேப்பா, லட்சணமா இருப்பாளாம் தரகர் சொல்றார். ஒஹோனு பெரிய இடமா இல்லாட்டாலும் ஓரளவுக்கு நன்னா சீர் பண்ணுவா. கை காரியத்துலே மஹா கெட்டியாம். எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுதியிருக்கா...நினைச்சு பாரு அவ பக்கத்துலே இந்த தேவாங்கு நிக்கக் கூட யோக்யதை இல்லையடா.. டேய்...நா உன்னை பெத்தவடா...உனக்கு நல்லது தாண்டா சொல்வேன்...அந்த பீடை மூஞ்சியும், முகரக் கட்டையும் குடித்தனம் பண்ணற முகமா தெரியலே. இல்லேன்னு வந்த இடத்துலே தேவடியாத்தனம் பண்ணி உன்னை மயக்க பாப்பாளா? அவ பேச்சை விடு...நாங்க சொல்றதைக் கேளு...நீ ஆம்பளை ராஜா' உனக்கு அந்த மாதிரி ஒருத்தியோட லோல் படணும்னு என்னடா தலை எழுத்து? நா சொல்றதைக் கேளுடா..."

சேஷன் ஆயிரம் சொன்னாலும் அம்மா பிள்ளைதான். கேட்டான். மறுபேச்சில்லாமல் திருச்சிக்குப் போய் மங்களத்தைப் பார்த்தான். அவளுடைய சிகப்பு நிறத்தில் மயங்கி சரி என்று தலை ஆட்ட, மறு மாசமே முகூர்த்த நாளைக் குறித்து பத்திரிக்கை அடித்தார்கள்.



# 5

நடேசன் யார் காலை பிடித்தாரோ, எவரிடம் என்ன கெஞ்சு கெஞ்சினாரோ, இல்லை அவருடைய வக்கீல் தான் பலமாக சிபாரிசு செய்தாரோ—மொத்தத்தில் எதனாலோ தெரியவில்லை, இண்டரில் பெயிலாகி விட்டாலும் கூட அரசாங்கத்தில் ஒரு கிளார்க் உத்தியோகம் சேஷனுக்குக் கிடைத்து விட்டது.

முகூர்த்தத்துக்கு பதினைந்து நாள் இருக்கையில் அப்பாய்ண்மெண்ட் ஆர்டர் வந்து விட ஆஹா பெண்ணின் அதிருஷ்டம் தான் என்று அனைவரும் சொல்ல, ருக்குவை ஒரு பக்கமாக தள்ளிவிட்டு மங்களத்தை ஏற்றுக் கொள்ளத் துவங்கியிருந்த சேஷனின் மனம் இன்னும் வேகமாக மங்களத்தின் நினைவால் நிறைந்து போனது.

மங்களம்...

எத்தனை அழகாக இருக்கிறாள் அவள்!

சரோஜாதேவி மாதிரி பெரிய கண்கள்...

சாவித்திரி மாதிரி குமிழ் வாய்...

அப்புறம்?

அந்த சிகப்பு நிறம்?

அது யார் மாதிரி?

எந்த ஸினிமா ஸ்டாரையும் மேக்கப் இல்லாமல் பார்த்ததில்லையாதலால் சேஷனுக்கு அவளை யாரோடு ஒப்பிடுவது என்று புரியவில்லை.

சாயங்காலம் ஆனால் உடம்பெல்லாம் மங்களத்தின் நினைப்பில் குறுகுறுக்க வீட்டில் இருக்கப் பிடிக்காமல்

பீச்சுக்குப் போனான். அங்கு உலாத்தும் ஜோடிகளை பார்த்து இன்னும் பதினைந்து நாளில் நானும் என் மங்களத்தோடு இப்படி வருவேனே; தோளோடு தோள் இடித்துக் கொண்டு அவள் கையைப் பற்றினபடி நடப்பேனே... என்று கற்பனை செய்து பூரித்துப் போனான்.

மவுண்ட் ரோடு கடைகளின் முன்னால் நின்று ஷோ கேஸ் பொம்மைகளை வேடிக்கை பார்த்தான்.

என் மங்களம் இந்த நிறம் தானே, அவளுக்கு இந்த புடவையை உடுத்தினால் எப்படி இருக்கும்?

ஐயோ, ஐயோ...நினைப்புகள் இனிப்பாய் இனித்தன.

இப்படி மங்களத்தின் ஞாபகத்தில் நாட்களை அவன் கடத்திக் கொண்டிருக்கையில். கல்யாணத்துக்கு எண்ணி நாலுநாட்கள் இருக்கையில், சாந்தோம், லஸ் சர்ச் ரோடு வழியாக நடந்து ஒரு நாள் மாலைப் பொழுது வீடு திரும்புகையில், ருக்கு அவனை சந்தித்தாள்.

ரோடு என்பதை லட்சியம் பண்ணாமல் மளமளவென்று அவள் அழ ஆரம்பித்தாள்.

"என்னை மறந்துட்டேளோ?"

"ஷ்...ஷ்...ருக்கு...என்ன இது..."

நீங்களே உலகம்னு இருந்தேனே, நீங்க என்ன பண்ணாலும் பேசாம இருந்தேனே, உங்களுக்கு சந்தோஷம் தர்றது ஒண்ணுதான் என் கடமைனு இருந்தேனே, என்னை ஏமாத்திட்டேளே...''

சேஷனுக்கு ரொம்ப சங்கடமாய் இருந்தது.

நடு ரோடில் என்ன கஷ்ட காலம் இது!

அவன் அவஸ்தை புரிந்த மாதிரி சட்டென்று ருக்கு அவன் கைகளைப் பற்றினாள்.



'ரோடுலே பேச வேண்டாம் எங்காம் கிட்டத்தான் இருக்கு...வாங்கோ, அங்க போய் பேசலாம்...''

ருக்குவின் கை வெத வெத வென்று இருந்தது. தொட்ட சணமே மின்சாரம் பாய்ந்து விட்ட மாதிரி உடம்பு பூராவும் திகு திகு வென்று சுட்டது.

"வே...வேணாம் ருக்கு...கைய எடு—"

"நா எடுக்க மாட்டேன்...நீங்க வந்தா தான்...''

ஏழு மணி இருட்டு சுற்றி பரவி இருந்ததில் ருக்கு தைரியமாகப் பேசினாள்.

''வரேன்...நீ கைய எடு''

எதிரிலிருந்து வந்த காரின் விளக்கில் ருக்குவின் முகம் பளபளவென்று தெரிந்தது.

அழுத கண்கள், ஈரம் பாய்ந்த உதடுகள். சாஹஸ பார்வை...

இருவரும் நடந்தார்கள்.

பக்கத்து தெருவில் திரும்பியதும் முனையில் சேஷன் நின்றான்.

"இதுலே தான் உங்க வீடு இருக்கா?"—

"ம்...மூணாவது வீடு, அதோ அந்த மஞ்சள் கட்டடம் தான்...''

"உங்க பாட்டிக்கு உடம்பு எப்படி இருக்கு? ஆத்துக்கு வந்துட்டாளா?"

"இன்னும் ஆஸ்பத்திரிலேதான் இருக்கா,நீங்க வாங்கோ...''

"வாண்டாம்...யாராவது பார்த்தா வம்பு ருக்கு...''

"யாரும் பார்க்க மாட்டா. எங்களுது முதல் போர்ஷன்... அப்பா வேலைக்குப் போயிருக்கார்... நா முன்னால போய் கதவைத் திறந்திட்டு யாரும் வராம இருக்காளானு பார்க்கிறேன். நீங்க சட்டுனு உள்ளே வந்துடுங்கோ. யாரும் பாக்க மாட்டா...."

"வா...வாண்டாம் ருக்கு..."

"பயப்படாதீங்கோ...சித்த நாழி பேசிண்டிருந்துட்டு போயிடலாம்...வாங்கோ..."

போகலாமா என்று சேஷன் யோசித்த கணத்தில் வீட்டின் உள்ளே இருந்து ஒரு பெரியவர் படிகளில் இறங்கி தெருவில் நடந்தார்.

திடுமென்று மங்களத்தின் முகமும், அந்த நிறமும் சேஷனுக்கு ஞாபகம் வந்தன.

அம்மா ஞாபகம் வந்தது.

கல்யாணத்துக்கு நாலு நாள் கூட இல்லை, என்ன செய்து கொண்டிருக்கிறேன் இங்கு, அசட்டுத்தனமாய் என்ற பயம் ஆளை விரட்டியது.

பையிலிருந்து பத்து ரூபாயை எடுத்து ருக்குவிடம் கொடுத்தான்.

"நா வரேன். ருக்கு. இன்னொரு நாள் வரேன்... இப்ப வேலை இருக்கு...அம்மா தேடுவா..."படபடவென்று பேசிவிட்டு, அவள் பதில் கூறுமுன் வேகமாய் திரும்பி நடந்தான்.

ராத்திரியும், மறுநாளும், அதற்கு அடுத்த நாளும் ஏதோ ஒரு கண்டத்திலிருந்து தப்பி வந்த மாதிரி மனசு சந்தோஷப்பட்டது.



கல்யாணத்துக்கு முதல் நாள் எல்லோருமாக திருச்சிக்குப் போனார்கள்.

சாயங்காலம் மாப்பிள்ளை அழைப்பும், நிச்சயதார்த்தமும் நடந்தன.

பெண்ணையும், பிள்ளையையும் ஒன்றாக உட்கார வைக்கும் வழக்கம் எங்கள் வீட்டில் இல்லை என்று ஜெயம்மா சொல்லிவிட, சேஷனை எழுப்பி மாடிக்கு அனுப்பிவிட்டு பெண்ணை மாத்திரம் உட்கார வைத்து நிச்சயதார்த்தம் செய்தார்கள்.

மாடியிலிருந்து யாரும் பார்க்காத போது எட்டி மங்களத்தைப் பார்க்க முயற்சித்து, முயற்சித்து சேஷன் தோற்றுப் போனான்.

மறுநாள் காசி யாத்திரை. மாலை மாற்றல், ஊஞ்சல் முடிந்து மங்களத்தின் கையைப் பற்றியபடி சாஸ்திரிகள் அவனை உள்ளே வரச் சொன்னார்.

பிடித்தான்.

கை சில்லென்று இருந்தது.

ருக்குவின் கையைப் பற்றினால் வெதவெதவென்று ஒரு சூடு பரவுமே, இவள் ஸ்பரிசம் ஏன் அப்படி இல்லை என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே அவன் உள்ளே போனான்.

கல்யாணம் முடிந்தது.

'எங்கள் வீட்டில் கிருஹப்ரவேசம் ஆனதும்தான் சாந்தி முகூர்த்தம் வைக்கவேண்டும்' என்று நடேசன் சொல்ல, மறுநாள் கட்டுசாத கூடையுடன் சென்னைக்கு வந்தார்கள்.

கிருஹப்ரவேசம் ஆயிற்று.

அந்த வெள்ளிக்கிழமை நாள் நன்றாக இருந்ததால் சாந்தி முகூர்த்தத்தை அன்றே நடத்த ஏற்பாடு ஆனது.

சேஷனுக்கு நிலை கொள்ளவில்லை.

நெஞ்சு துடுக்கென்று சதா அடித்துக் கொண்டது.

மனசில் ஆயிரம் கற்பனைகள்.

வியாழன் காலை தூங்கி எழுந்ததும் மங்களம் தலைவலி என்றாள்.

அப்புறம் ஜுரம் என்று சுருண்டு படுத்தாள்.

மாலைக்குள் கொஞ்சமும் எதிர்பாராமல் தீட்டு வந்து விட, போட்ட திட்டங்கள் அனைத்தையும் மாற்றும்படி ஆனது.

''இவ குளிச்ச மறுநாள் ஆடி பொறந்துடறது... அதனாலே தேமேனு நாளைக்கு இவளையும் கூட்டிண்டு ஊருக்குப் போயிடுங்கோ. ஜுரம் தேவலையாகி, ஆடி மாசம் போகட்டும், அப்புறமா ஒரு நல்ல நாள்ல சாந்தி முகூர்த்தத்தை வைச்சுக்கலாம்...''

சம்பந்தி சொன்ன வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசாமல் பெற்றவர் பெண்ணோடு கிளம்பினார்.

ஊருக்குப் போன மறு வாரம் 'ஜுரம் நிற்காமல் அடிக்கறது. டாக்டர் டைபாயிட் என்கிறார்' என்று அவர் லெட்டர் போட—ஆடி மாசமும், டைபாயிட் ஜுரமும் சேர்ந்து மங்களத்தை படுத்தியதோ, இல்லையோ ஆனால் சேஷனை திருகிய திருகில் அவன் ஏமாந்து சோர்ந்து போனான்.

அந்த ஏமாற்றத்தை சரியாக இனம் கண்டு கொள்ள முடிய, அந்த இடைவெளியை கச்சிதமாகப் பயன் படுத்திக் கொண்டு ருக்கு மீண்டும் அவன் வாழ்க்கையில்



புகுந்தாள். ஆனால் இந்த முறை தற்காலிகமாக அல்ல ஸ்திரமாக...நிரந்தரமாக...

## 6

அன்றைக்கு சேஷன் ஆபீஸிலிருந்து திரும்பியபோது வழியில் அவனை ருக்கு மடக்கினாள்.

பஸ்ஸிலிருந்து இறங்கி நிமிர்ந்தால் எதிரில் ருக்கு.

''எப்படி இருக்கேள்?''—

யாராவது தெரிந்தவர்கள் இருக்கப் போகிறார்களே என்று சேஷன் அவசரமாக இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் பார்த்தான்.

நல்ல வேளையாக ஒருத்தரும் இல்லை. அப்பாடி உப்பாடி என்று ஆபீஸிலிருந்து வீட்டுக்கு திரும்பும் களைப்பில் இருந்தவர்களில் தெரிந்தவர் யாரும் இல்லை.

''மங்களம் ஊருக்குப் போயிட்டாளாமே! நடக்க வேண்டிய விசேஷத்தை நடத்த விடாம ஜுரம், ஆடி மாசம், இன்னும் வேறென்னவோ வந்துடுத்தாமே... பாவம் நீங்க...''

சீண்டலா?

என்னடா டேய், எப்படி இருக்கிறாய் என்று சீண்டுகிறாளா?

சட்டென்று சேஷன் தலையை நிமிர்த்தி பார்த்தான். மனசுக்குள் கிண்டலும், சீண்டலும் இருந்ததோ என்னவோ, ஆனால் வெளியில் ஒன்றும் இல்லை. நிஜமான கரிசனம் தெரிந்தது. ஐயோ பாவமே என்ற பரிதாபம் தெரிந்தது.

"எனக்கு எப்படி எல்லா விபரமும் தெரியும்னு நினைக்கிறேளே? விசாரிச்சு தெரிஞ்சுண்டதுலே! தெரிஞ்சவாகிட்ட விசாரிச்சேன். விஷயம் இப்படினு கேட்டதுலேந்து ரொம்ப வேதனையா போச்சு...என்னடா இது அச்சான்யமாட்டம்னு தனிப்பா இருந்தது. உங்களை பார்த்து இரண்டு வார்த்தை ஆறுதலா பேசினா தேவலேனு தோணித்து. நீங்க இந்த பஸ் ஸ்டாப்லேதான் இறங்குவேள்னு தெரியும்; அரைமணியா மரத்தடிலே யார் கண்ணுலேயும் படாம காத்துண்டிருக்கேன்..."

சேஷன் நெகிழ்ந்து போனான்.

எத்தனை பிரியம் இவளுக்கு என்மேல்!

எத்தனை கரிசனம் இவளுக்கு என் மேல்!

"என்ன பண்ணறது ருக்கு? திடும்னு அவளுக்கு உடம்புக்கு வந்துடுத்து. அதுவும் டைபாய்ட்...இரண்டு மாசமாகும் உடம்பை தேத்திண்டு வர..."

"டைபாய்டா...அட நாராயணா! டைபாய்டும், அதுவும், இதுவும் வர்ற அளவுக்கு பூஞ்சை உடம்பா அவளுக்கு! உங்க எதிராத்து மாமி சொன்னா, மங்களம் நோஞ்சானா இருக்கானு, நா நம்பலே..."

"நா வரேன் ருக்கு...நாழி ஆச்சு."

இரண்டடி நடந்தவனை "கொஞ்சம் இருங்கோ" என்று தடுத்து நிறுத்தினாள் ருக்கு.

"பாட்டி செத்துப் போயிட்டா, தெரியுமோன்னோ!"

விஷயம் அதிர்ச்சியைத்தர சேஷன் திடுக்கிட்டான்.

"எப்போ?"—



அது ஆச்சு இன்னிக்கு பதினாறு நாள்... அதான் வெளிலே வாசல்லே வர முடியாம விட்டோட கிடந்தேன்...இல்லேன்னா கல்யாணம் விசாரிக்க, எங்கே இருந்தாலும் நன்னா இருங்கோனு சொல்ல நா வராமயா இருந்திருப்பேன்...நீங்களென்ன மறந்துட்டாலும் என்னாலே உங்களை மறக்க முடியலையே..."

ருக்குவின் குரல் செம்மிப் போயிற்று. குமுறும் அழுகையை அடக்க முயற்சிப்பது போல தலையை குனிந்து கொண்டாள்.

"தேத்திக்கோ ருக்கு...ஷ்...இத பாரு."

"தேத்திக்காம என்ன பண்ணறது. சொல்லுங்கோ... உங்களுக்கு ஒரு விதத்துலே வேதனை, எனக்கு ஒரு விதத்துலே வேதனை.. சித்த நாழி உங்ககிட்ட பேசிண்டு இருந்தா ஆறுதலா இருக்கும்போல இருக்கு...ஒரு நிமிஷம் ஆத்து பக்கம் வர முடியுமா?"—

"அ?...வாண்டாம் ருக்கு...யாராவது பாத்தா வம்பு..."

"என்ன வம்பு? இப்ப இங்க நின்னு அஞ்சு நிமிஷம் பேசலியா, அந்த மாதிரி ஆத்துக்கு வந்து ரெண்டு நிமிஷம் உக்காந்து நா போட்டுத் தர காப்பிய குடிச்சுட்டுப் போங்கோ. என்னை மதிச்சு வந்தேள்ங்கற சந்தோஷமே எனக்குப் போதும். வேற ஒண்ணும் வாண்டாம்..."

"இல்லே...வந்து ருக்கு...வந்து"—

"ஏழு மணிக்கு மேல வாங்கோ; நா வாச கதவை வெறும்மன சாத்திட்டு உள்கட்டுகாராளோட பேச்சு கொடுத்துண்டு இருக்கேன். நீங்க உள்ளபோய் கதவை சாத்திண்டுடுங்கோ...நா வந்துடறேன். பயப்-படாதீங்கோ...யாரும் பாக்கமாட்டா...உங்களை மாட்டி விட்டுட்டு நா மட்டும் நிம்மதியா இருப்பேன்னு நினைக்கறேளா?'—

அந்த கெஞ்சலும், பார்வையும் சலபத்தை விசிறிவிட "பாக்கறேன், முடிஞ்சா வரேன்" என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி நடையை கட்டினான்.

யாரும் பார்க்காத தெம்பு, வீட்டில் ஆளை அமுக்கிய தனிமை ருக்குவின் வேண்டல் எல்லாமாக ஒன்று சேர்ந்து வா...வா என்று தைரியம் கொடுக்க, ஏழு அடித்த பிறகு சேஷன் கச்சேரி ரோடு பக்கமாய் நடந்தான்.

மூலையிலிருந்தே பார்க்கலாம். யாராவது வாசலில் தென்பட்டால் திரும்பிவிடலாம் என்று எண்ணிக் கொண்டு போனவனுக்கு அதிருஷ்டம் இருந்தது. வாசலில் யாரும் இல்லை.

எதிர், பக்கத்து திண்ணைகளில் இருந்தவர்கள் கவனமும் இவன் பக்கம் இல்லை.

சட்டென்று படிகளில் ஏறி முதல் போர்ஷன் கதவைத் தள்ளினான். திறந்துகொண்டது. நுழைந்து திரும்ப கதவை சாத்தினான்.

அறைக்குள் ஊதுபத்தி வாசனை!

இவன் வந்ததை மோப்பம் பிடித்துவிட்ட தினுசில் இரண்டாம் நிமிஷம் ருக்கு உள்ளே வந்தாள், கதவை தாளிட்டாள்.

இவனை சந்தித்து வந்தபிறகு ருக்கு குளித்திருக்க வேண்டும். பளிச்சென்று தலைவாரி, பொட்டு, மை இட்டு புதுசாய் சின்னாளம் பட்டு புடவை ஒன்றை உடுத்தி இருந்தாள்.

"உட்காருங்கோ...." சின்ன குரலில் பேசிவிட்டு. உள் அறைக்குச் சென்று தயாராக அடுப்பில் வைத்திருந்த பாலில் டிகாஷனை விட்டு காபி கலந்து வந்து கையில் கொடுத்தாள்.



ஈரத்துணியில் சுற்றிவைத்திருந்த கதம்பத்தை தலையில் வைத்துக்கொண்டு கிட்ட வந்து உட்கார்ந்த போது கம்மென்று பவுடர் வாசனை, பூ வாசனை எல்லாமாக சேஷனை மயக்கின.

அன்றைக்கு சேஷன் அங்கு கிட்டத்தட்ட இரண்டு மணிநேரங்கள் இருந்தான். ருக்கு அவனை சிலிர்க்க வைத்தாள், நெகிழச் செய்தாள், வானில் மிதக்கப் பண்ணினாள். இன்னும் என்னென்னமோ சொல்லி,செய்து அவனை சொர்க்கத்துக்கு அழைத்துப் போய் வந்தாள்.

ஒன்பது மணி அளவில் வாசலுக்கு போய் வந்து 'ஒருத்தரும் இல்லே, கிளம்புங்கோ' என்றவளிடம் கையோடு இருக்கட்டும் என்று கொணர்ந்திருந்த ஐம்பது ரூபாயை நீட்டினான்.

"பணம் காசெல்லாம் எனக்கு பிரதானமில்லே...நீங்க முக்கியம். உங்க சந்தோஷம் முக்கியம்...அடிக்கடி வாங்கோ இனிமே தினம் ஏழு மணியானா நா வாசல்லே தான் உங்களுக்காக காத்துண்டு இருப்பேன். அப்பாவோ இல்ல, வேற யாருமோ இருந்தா சமிக்கை காட்டறேன், உள்ளே வராம என்னைத் தெரியாத மாதிரிதெருலே நீளக்க போயிடுங்கோ" என்று சொல்லி பணத்தை மறக்காமல் வாங்கிக் கொண்டு ருக்கு அவனுக்கு விடை கொடுத்தாள்.

அதன் பிறகு சேஷன் ருசி கண்ட பூனையானான்.

கல்யாண வேலை இல்லாவிட்டாலும் அன்றாடம் மாலை வேளையில் பீச்சிலோ, கோவிலிலோ பத்து மணி வரை உட்கார்ந்து சீட்டு ஆடிவிட்டு வரும் பழக்கம் ருக்குவின் தகப்பனுக்கு இருந்ததால் நிறைய நாட்கள் ஒருமணி நேரம், போல அவர்களால் சேர்ந்து இருக்க முடிந்தது

அப்பாவுக்கு விவரம் தெரிந்தால் கூட அவரை பணத்தைக் கொண்டு சமாளித்து விடலாம் என்ற தைரியம் ருக்குவுக்கு இருந்ததால் அவள் எதற்கும் பயப்படவில்லை

ஆடி போய் ஆவணி வந்தது.

இனி ருக்கு இல்லாமல் தன்னால் இருக்க முடியாது என்ற நிலைக்கு சேஷன் வந்துவிட்டான்.

ஆவணி இறுதியில் மங்களத்தின் அப்பா பெண்ணுக்கு உடம்பு தேறிவிட்டது அழைத்து வரலாமா என்று லெட்டர் போட்டு கேட்டதற்கு, சம்மதம் தெரிவித்து நடேசன் பதில் கடிதம் போட்டு விட்டார்.

மறுநாள் மங்களம் வரப்போகிறாள், முதல் நாள் மாலைகூட சேஷன் ருக்கு வீட்டில் பொழுதைக் கழித்தான்.

"அவளை அழைச்சுண்டு நாளைக்கு அவ அப்பா வரப் போறார் ருக்கு...எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலே"

ருக்கு அவனை மார்பில் சாய்த்துக் கொண்டாள், விரல்களால் இதமாக தடவினாள்.

"இனிமே என்னை மறந்துடுவேள், அப்படித்தானே?"

"அது எப்படி முடியும் ருக்கு? உன்னோட இத்தனை பழகிட்டு 'தொபுக்'குனு எப்படி விட்டுட முடியும்?"

"ம்ம்...இப்பச் சொல்லுவேள். நாளைக்கு அம்மா முன்னாலே பெட்டிப் பாம்பா அடங்கிப் போயிடுவேள். முன்னே இருக்கலியா?"

"இல்லே ருக்கு, இப்ப நிலைமை அப்படி இல்லே...நீ இல்லாம நிச்சயமா என்னாலே இருக்க முடியாது...சமயம் வரப்ப அம்மா கிட்ட பக்குவமா சொல்லிடப் போறேன். எப்படியானாலும் என் சம்பளத்துலே பாதி உங்கிட்ட கொடுத்திட்டு நா இங்க வந்துண்டு போயிண்டு இருக்கறதாதான் இருக்கேன்."

"ஐயே என் துரப்புளியே — அவ்வளவு தைரியம் ஏது உங்களுக்கு!" ருக்கு சிணுங்கினாள். அப்புறம் முகத்தை



தீவிரமாக வைத்துக் கொண்டு எதிர்போர்ஷன் மாமி நேத்து கூட கேட்டா, அடிக்கடி வராளே அவன் யாரு?னு எங்க ஒண்ணுவிட்ட மாமானு சொல்லி சமாளிச்சேன்."

"உங்க அப்பாக்கு விஷயம் தெரிஞ்சுடுத்துன்னு வம்பாச்சே ருக்கு..."

'அதப்பத்தி நீங்க கவலைப்படாதீங்கோ...அவருக்கு ரேஸ், சீட்டாட பணம் கொடுத்திட்டா போதும்...கம்முனு போயிடுவார். 'இவர் தாம்ப்பா என் ஆம்படையான்'னு நா அடிச்சு சொன்னா அவர் என்ன பண்ணிடுவாராம்!"

சேஷன் ருக்குவை அணைத்துக் கொண்டான்.

"என் மேலத்தான் உனக்கு எத்தனை ஆசை ருக்கு...',

"ஆசை இல்லாமலா பிள்ளைய வயத்துலே சுமந்துண்டு இருக்கேன்?"

சேஷன் அலறிக் கொண்டு நிமிர்ந்தான்.

"எ...எ...என்னது?"

"ஏன் இப்படி இடி விழுந்த மாதிரி நடுங்கறேள்... எதிர் பார்த்த சமாசாரம் தானே இது!"

"ரு...ருக்கு... நீ விளையாடலையே"

"இதுலே என்ன விளையாட்டு...பொம்மனாட்டி நா தைரியமா இருக்கேன்...நீங்க இப்படி பயப்படறேளே!"

"இப்ப எத்தனை நாள்?"

"நாற்பது முடிஞ்சி போச்சு."

"நி...நிச்சயமா தானா..."

"எனக்கு முப்பதைத் தாண்டவே தாண்டாது."

"என்ன ருக்கு, இப்படி நிதானமா பேசறே?"

"பின்னே என்ன பண்ணணும், சொல்லுங்கோ? தாலி கட்டி என்னை பெண்டாட்டினு நீங்க சொல்லாதப்போ, இதபத்தி சந்தோஷமா நா நாலு பேர்கிட்ட பேச முடியுமா?"

சேஷன் தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான். இப்படி ஒரு திருப்பத்தை கற்பனை பண்ணாமல் அசடாய் இருந்து விட்டதை நினைக்கும் போது கோபம் வந்தது.

"எதுக்காக தலேலே கை வச்சுண்டு உட்கார்ந்துட்டேள்? சித்த நாழி முன்னாலே நீங்க தானே, பாதி சம்பளத்தை என்கிட்ட கொடுத்திட்டு என்னோடயும் குடும்பம் நடத்தப் போறேன்னு சொன்னேள்?"

"ஆமா... ஆமா.. சொன்னேன்..."

"அப்ப, இப்ப மட்டும் ஏன் இத்தனை கலங்கி போகணும்? பஞ்சாங்கத்தை பார்த்து ஒரு நல்ல நாள்லே என் கழுத்துலே மஞ்சகயிறை கட்டிடுங்கோ... அப்புறம் பல்லு மேல நாக்கு போட்டு யார் என்னை ஒரு வார்த்தை பேச முடியும்?"

"உங்கப்பா?.. எங்கம்மா, அப்பா, மங்களம்?"

"எங்கப்பாவை சமாளிக்கறது என் பொறுப்பு... உங்க விட்டு மனுஷாளை சமாளிக்கறது உங்கபொறுப்புதானே?"

"அ? ஆமா... ஆமா... என் பொறுப்புதான்."

"உடனே ஏதாவது செய்யணுமேனு குழம்பாதீங்கோ... எல்லாத்தையும் விட்டுப் பிடிக்கறதுதான் நல்லது. நாளைக்கு அவவரட்டும்... கொஞ்ச நாள் போகட்டும் அப்புறமா பாத்துக்கலாம் — என்ன நா சொல்றது?"—

"சரி ருக்கு"—

"மணி ஏழரைதான் ஆறது, இப்படி உட்காருங்கோ, காலைப் பிடிச்சு விடறேன்... விசிறி விடட்டுமா? எம் மடிலே தலை வைச்சு படுத்துக்கறேளா?"



ருக்கு பேசிய பேச்சில், கொடுத்த இன்பத்தில் வீட்டுக்குப் புறப்பட்ட போது ருக்கு தான் எனக்கு வேண்டும். அந்த மங்களம் அவள் என்ன ரதியாக இருந்தாலும் வேண்டாம் என்று தீர்மானம் சேஷனுள் பூசமாய் படர்ந்திருந்தது.

என்ன செய்வோம், ஏது செய்வோம் என்று அவன் அரண்டு கொண்டிருந்ததற்கு மங்களத்தின் போதாத காலம் மறுநாளே, அவள் வந்து இறங்கின அன்றே, ஒரு வழி செய்தது.

மாலை மணி ஆறு இருக்கும், ஜோஸியர் வந்திருக்கிறார். சாந்தி முகூர்த்தத்துக்கு நல்ல நாள் குறித்துக் கொடுக்க—

காபி கொண்டு வந்து ஊஞ்சலில் வைத்து விட்டு திரும்பிய மங்களம் யாரும் எதிர்பார்க்காத தினுசில் சறுக்கின மாதிரி கீழே விழுந்தாள்.

கை கால்கள் துடித்தன. விலுக் விலுக்கென்று இழுத்தன. கண்கள் செறுகிக் கொள்ள, வாயில் நுரை தட்டியது...

அத்தனை பேரும் திகைத்து நிற்க, அவள் அப்பா மாத்திரம் 'மங்களம், அம்மாடி மங்களம்,... என்னாச்சு குழந்தே உனக்கு?' என்று அலறிக்கொண்டு மகளிடம் ஓடினார்.

## 7

வலிப்பா?

வலிப்புடைய பெண்ணா?

மங்களம் ஒரு வியாதிக்காரியா?

வியாதியை மறைத்து வைத்து நம் தலையில் கட்டி விட்டார்களா?

ஜெயம்மாவும், நடேசனும், முக்கியமாய் சேஷனும் கொதித்து ஆர்ப்பரித்தார்கள்.

"என்னய்யா! எந்த ஏமாந்த சோணகிரி அகப்படுவான் இந்த வலிப்புக்கார பெண்ணை தலையிலே கட்டலாம்னு நினைச்சிரோ! என்ன பித்தலாட்டம் இது! எவனை ஏமாந்தவன்னு நினைச்சீர்? நாங்க ஏமாந்த கூட்டம் இல்லேங்காணும்... அத புரிஞ்சுண்டு முதல்ல மூட்டைய கட்டும்— இப்பவே இந்த க்ஷணமே உம்ம பெண்ணை கூட்டிண்டு அடுத்த ரயிலை பிடிச்சுண்டு ஊரை பார்க்க போய்ச் சேரும்...ம்ம்...புறப்படும்..."

நடேசன் கத்தலாய் கத்த ஜெயம்மா தன் பங்குக்கு இடுக்கில் அவளும் குரலெடுத்து கூப்பாடு போட்டாள்.

"ஒண்ணே ஒண்ணு கண்ணேன்னுகண்ணு எங்க பிள்ளைய வளர்த்தோமே... கறுவேப்பில்லை கன்னுட்டம் பார்த்து பாத்து எல்லாம் செஞ்சமே, நல்ல குடும்பம், நல்ல பொண்ணுங்கறத்துக்காக, எங்க அந்தஸ்து இல்லாட்டா கூட பரவாயில்லே, சுமாரா சீர் செலுத்தி செஞ்சா கூட பரவாயில்லே, குணமான பொண்ணு வேணும், கண்ணுக்கு லட்சணமான பொண்ணு வேணும்னு ஆசைப்பட்டமே... கடவுளே இப்படி கல்லை தூக்கிப் போட்டுட்டுயே... இது நியாயமா? நீங்கள்ளாம் நன்னு இருப்பேளா? வியாதிக்கார பொண்ணை எங்க பிள்ளை தலைல கட்டி அவனை ஆயுசு பூரா வியாதிக்காரி-யோட அவஸ்தை பட வைச்சுட்டேளே... நீங்க நன்னு இருப்பேளா? உங்க குடும்பம் நன்னு இருக்குமா?"—

அடித்துக் கொண்டு ஜெயம்மா அழ நடேசன் சீறினார்.

"நம்மளுக்கு இந்த வியாதிக்காரியோட லோல் படணும்னு தலையெழுத்தா? இல்லை சேஷனுக்குதான்



தலையெழுத்தா? அவன் ஏண்டி இவளோட ஆயுசுக்கும் லோல் படணும்? அவன் ராஜாடீ. அவனுக்கு என்ன குறை? இவளை அடிச்சு துரத்திட்டு இன்னொருத்திய ஜாம் ஜாம்னு அவனுக்கு பண்ணி வைப்பேண்டீ...எம் புள்ளைக்கு என்ன, அவன் சிங்கக் குட்டி... ஓஹோன்னுனும்..."

நடேசனும், ஜெயம்மாவும் மாறி மாறி கத்தி குமுறினதில் மங்களத்தின் அப்பா நடுங்கி போனார்.

"இங்க பாருங்கோ... நா சொல்லறதைக் கேளுங்கோ சத்தியமா மங்களத்துக்கு ஒரு வியாதியும் கிடையாது. அவபொறந்ததுலேந்து இன்னிக்குதான் மொத தடவையா இப்படி வந்திருக்கு...இதுக்கு என்ன காரணம்னே எனக்குப் புரியலை...தெய்வ குத்தமா, கண் திருஷ்டியானு எனக்குப் புரியலை...கொஞ்சம் நிதானிங்கோ...சம்பந்தி... நா சொல்லறதை சித்த காது கொடுத்து கேளுங்கோ"

நடேசன் காதிலும் வாங்க வில்லை, மூக்கிலும் வாங்கவில்லை.

"பிறந்தப்பவே எனக்கு காது குத்திட்டாங்காணும். நீங்க வேற இப்ப புதுசா குத்த வாண்டாம். பதினேழு வயசு பொண்ணுக்கு திடும்னு வலிப்பு வருமா? என்னை என்ன ஒண்ணும் தெரியாத பாப்பானு நினைச்சீரா? வாண்டாம், மேல ஒரு வார்த்தை பேச வாண்டாம்... முதல்ல பொண்ணோட கிளம்பும்...ம்ம்..."

சம்பந்தி கெஞ்சினார், அழுதார், சமாதானம் சொன்னார். 'இப்பவே ஊர் பெரிய டாக்டர் கிட்ட அழைச்சுண்டு போய் நா பொய் சொல்லலைனு நிரூபிக்கிறேன்' என்று சொன்னார். இன்னும் என்னென்னவோ சொன்னார்.

மங்களம் ஓரமாய் நின்று பொங்கிப் பொங்கி அழுதாள்.

''எனக்கு என்ன ஆச்சு? ஒண்ணுமே புரியலையே... வலிப்பா? அதெல்லாம் எனக்கு வந்ததில்லையே?'' என்று முணுமுணுத்து புலம்பினாள்.

''இனிமே சாதாரணமா இருக்கேம்மா... உங்க கால்ல விழறேன்....எனக்கு எந்த வியாதியும் இல்லேம்மா'' என்று ஜெயம்மாவின் காலில் விழுந்து கதறினாள்.

ம்ஹூம், எதற்கும் கடுகத்தனை பலன் கூட இல்லை.

வியாதியை மறைத்து வைத்து ஏமாற்றி விட்டார்கள் என்ற நினைப்பு மட்டும் கண்ணை கட்டி விட்ட குதிரையாய் ஓட வைக்க, மங்களமும், அவள் தந்தையும் சத்தியம் பண்ணி இதுதான் முதல் தடவை, ஏன் என்று தெரியவில்லை, டாக்டரை உடனே பார்க்கலாம் என்று புலம்பியதை யாரும் நம்ப மறுக்க வந்து சரியாக இருபத்தி நாலு மணி நேரம் ஆவதற்குள் மங்களம் அப்பாவோடு திருச்சிக்கு மீண்டும் பயணமானாள்.

தெருவே கூடி ஜெயம்மாவிடம் ஒப்பாரி வைத்தது.

''அந்தப் பெண் ராசி இல்லாதது மாமி. முத தடவை வந்தப்ப தூரம் ஆயி, ஜுரத்துல படுத்துண்டு, சாந்தி முகூர்த்தம் நடக்க ஒட்டாம பண்ணப்பவே என்னடா இதுனு நா நினைச்சேன்''—என்றாள் ஒருத்தி.

''சோகை பிடிச்ச மாதிரி வெளுப்பா இருக்கறப்பவே எனக்குத் தெரியும். இவளுக்கு ஏதோ ரத்த வியாதி இருக்குன்னு''—என்றாள் இன்னொருத்தி.

''இந்தாத்துலே வாழ அதுக்கு கொடுப்பினை இல்லே பிடுங்கோ...என்ன துணிச்சல் இருந்தா பொய் சொல்லி ல்யாணத்தை நடத்தி இருப்பா?'' என்றாள் இன்னும் ருத்தி.

''மாமா செஞ்சதுதான் சரி, மூட்டை கட்டி போடிம் னு அனுப்பினதுதான் சரி. இந்த மாதிரி செஞ்சாதான்,



நாளைக்கு திரும்ப இன்னொருதரம் திருட்டு புத்திய காட்ட மாட்டா...'' என்றாள் எதிர்வீட்டுக்காரி.

ஆக, தலைக்குத்தலை என்னென்னமோ சொன்னார்களே தவிரவும், ஒருத்திகூட, ''என்ன மாமி இது'—இப்ப என்ன நடந்துடுத்துனு இப்படி அவசரப்பட்டு அவளை அனுப்பிச் சேள்? அவ அப்பாதான் சத்தியம் பண்ணுறரே'. நாளைக்கு ஒரு டாக்டர்கிட்ட கூட்டுண்டு போறது, என்ன விஷயம்னு விசாரிக்கறது. உண்மை தெரிஞ்சப்புறம் அனுப்பறது, இதானே நியாயம்! என்று ஒரு வார்த்தை ஒரே ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை.

சேஷன் முதலில் அடிபட்டுப் போனான்.

எனக்கா இப்படி?

என் கைகூட படாத என்புது மனைவிக்கா இப்படி?—என்று ஆடித்தான் போனான்.

ஆனால், கடவுளாய் பார்த்து தன்னை இக்கட்டிலிருந்து மீட்க இப்படியொரு வழி பண்ணியிருக்கிறார் என்ற நினைப்பு வளர வளர எல்லாம் நல்லதுக்குதான் என்று தன்னைத் தானே சமாதானம் பண்ணிக்கொண்டான்.

மறுநாள் ருக்குவிடம் விஷயத்தைச் சொன்னதும் அவளும் ''அடிப்பாவி—உங்களை ஏமாத்த பாத்தாளே அவ நன்னா இருப்பாளா?'' என்று சபித்த கையோடு 'கடவுள் நம்ம பக்கம் கவலைப்படாதீங்கோ' என்று சொல்லி, 'கையை பிடிக்கவா, காலை பிடிக்கவா, பாவம் சோர்ந்து போயிட்டேளே' என்று பல்லவியை நேர்த்தியாகப் பாடி சேஷன் மனதில் கொஞ்சம் நஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்த மங்களத்தின் ஆசையை சுத்தமாக துடைத்துப்போட்டாள்.

அம்மாவும், அப்பாவும், ஒரு தினுசாய் குமுறி, ருக்கு வேறு வகையால்ஆறுதல் அளித்ததில் நிலைமையை எடை

போட்டு சரியாக ஆராயும் புத்தி கொஞ்சம்கூட சேஷனுக்கு இல்லாமல் போனதுதான் நிஜம்.

இதனாலேயே, ஊருக்குப்போன நாளாம் நாள் 'மங்களத்தை இங்கே பெரிய டாக்டர்கிட்ட காட்டினேன். பயப்பட ஒண்ணுமில்லே. பலஹீனம் சில சமயம் சிலருக்கு வலிப்பை தந்திடும். ஊருக்குப் புறப்படறதுக்கு இரண்டு நாள் முன்னாலிருந்து புகையில் நின்று பட்சணம் செய்ததும் டைபாய்ட் ஜுரத்தினால் உடம்பு பலஹீன-மானதும், பயணம் செய்ததும் சேர்ந்து இப்படி ஒரு வலிப்பை உண்டாக்கி இருக்கும். இது வெறும் பலஹீனம் தான். ஊசி போட்டுண்டு, ஓய்வா இருந்தா நிச்சயம் மறுபடி வராதுனு சொன்னார், நீங்க இதை நம்பணும். வேணா மெட்ராஸ்லே நீங்க எந்த டாக்டரைப் பார்க்கச் சொன்னாலும் நாங்க வர்றோம். ஒருவரி பதில் எழுதுங்கோ... உங்க பதிலை மலையா நம்பிண்டு இருக்கேன்' என்று போட்ட லெட்டரையோ, அடுத்தடுத்து இந்த ரீதியில் வந்த கடிதங்களையோ, பிற்பாடு நேரிலேயே பெற்றவர் வந்து கண்ணீர்விட்டு கதறியதையோ அவன் லட்சியமே செய்யவில்லை.

ஒருமாசம் முழுசாய் போவதற்குள் இதுதான் சரியான சமயம் என்று கணக்குப் போட்டுப் பார்த்துவிட்டு ருக்கு தன் பக்கத்து வேலையைத் துவக்கினாள்.

"வயத்து பிள்ளைக்கு இரண்டரை மாசம் ஆயிடுத்து; இனியும் சும்மா இருக்கமுடியாது" என்றாள்.

"எல்லாரும் பக்கம் பக்கமா பேச ஆரம்பிச்சுட்டா; நீங்க ஒரு வழி பண்ணனும்" என்றாள்.

"நீங்கதான் என் உலகம், உங்க சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். உங்கபிள்ளை என்வயத்துலே வளர்றது. எங்களை அனாதையா விட்டுடாதீங்கோ..." என்றாள்.

கண்ணால் ஜலத்தை விட்டாள். சேஷனின் காலை பற்றிக் கொண்டு இல்லாத சாகஸங்களைச் செய்தாள்.



பெற்றவரிடம் பேசும் தைரியம் இல்லாமல் "பண்ணிடறேன், ஒரு வழி பண்ணிடறேன்" என்று மட்டும் சேஷன் சதா முனக, சரி, இனி இவனை நம்பி பயன் இல்லை, நாமே தான் ஹோதாவில் இறங்க வேண்டும் என்று தீர்மானித்து, அன்று இரவு ஏற்கனவே விஷயம் அறிந்து, தனக்கு அனுசரணையாக இருக்கும் அப்பாவை அழைத்து "இந்த மனுஷன் துணிச்சலா பெத்தவா கிட்ட பேச மாட்டார்ப்பா... நீங்க நாளைக்கு அவாளைபோய் பாத்து பேசிட்டு வரதுதான் சரி. இனியும் நாளை கடத்தறதுலே அர்த்தம் இல்லே... சூட்டோட காரியத்தை முடிக்கறதுதான் புத்திசாலித்தனம்" என்று கூற, அதன்படி மறுநாள் ராமன் நடேசனின் வீட்டைப் பார்க்கப்போனான்.

## 8

மாலை மணி நாலு,

சேஷன் ஆபீஸிலிருந்தும், நடேசன் வக்கீல் வீட்டிலிருந்தும் இன்னும் வீடு திரும்பாத சமயம்.

ஜெயம்மா தனித்து இருந்தாள்.

வாசலில் நிழலாடியது.

"மாமி"—

"யாரு?"—

"நா தான் மாமி"

"நா தான்னா?"—

"ராமன்..."பாலா மாமி பிள்ளை, ருக்குவோட அப்பா..."

"தீபா! வா...வா...சௌக்கியமா? அம்மா போயிட்டா சாமீ... கேள்விப்பட்டேன். நல்லவ பாவம்..."

ராமன் அரை நிமிஷம் அப்படியே நின்று விட்டு கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டான்.

இந்த செய்கை புதுசாய் இருக்க ஜெயம்மா முகம் சுளித்தாள்.

"எங்க வந்தே! டபக்குனு ஊஞ்சல்லே உட்கார்ந்துட்டியே! என்ன விஷயம்?"

"எல்லாம் நல்ல விஷயம் தான். கொஞ்சம் தீர்த்தம் தாங்கோ..."

ஜெயம்மா அசையவில்லை. பேச்சும், நடத்தையும் அதிகாரத்தோடு இருக்க என்னயிற்று இவனுக்கு என்று கோபம் கலந்து வியப்புடன் நின்றாள்.

"என்ன ராமா, பேச்சு ஒரு மாதிரியா இருக்கு?"—

"நன்னாதானே இருக்கு! ஒரு மாதிரியும் இல்லையே!"

"சரி சரி...வந்த விஷயத்தைச் சொல்லு..."—

"வேறு என்ன, ருக்கு கல்யாணத்தைப் பத்தி தான் பேச வந்தேன்"—

"அதுக்கு நா என்ன பண்ணனும்?"—

"என்ன பண்ணனுமா? ஒரு மாமியார் இப்படி பேசறது நன்னா இல்லே மாமி"—

"ஏய்! மாமியாரா? யாரு? யாருக்கு? என்னாச்சு உனக்கு?"—

ராமன் வேண்டுமென்றே கண்களை அகல விரித்து இப்ப விஷயம் தெரியாதா உங்களுக்கு? உங்க பிள்ளை



ஒண்ணுமே சொல்லலியா?" எனவும் ஜெயம்மாவுக்கு அடிவயிற்றில் வெட்டுக்கிளிகள் தாவத் தொடங்கின.

"என்ன? சேஷன் என்ன சொல்லணும்?"

"இப்ப ருக்குக்கு மூணும் மாசம் நடக்கிறது மாமி... உங்க பிள்ளை தினமும் எங்காத்துக்கு வந்துண்டு போயிண்டு இருக்காரே, தெரியாதா உங்களுக்கு?"—

"எ...என்னது?"

"நா தெரியும்னு நினைச்சேன் மாமி... 'எங்கம்மாவுக்கு என்னோட இந்த தொடர்பு தெரியும், நா சந்தோஷமா இருக்கறது எங்கம்மாக்கு முக்கியம்'னு உங்க பிள்ளை சொன்னதை நம்பிட்டேனே!"

ஜெயம்மாவுக்கு தலையைச் சுற்றியது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.சேஷனா?

ருக்குவோடு பழகுகிறனா?

இப்போது அவளுக்கு மூன்று மாசமா!

என் சந்தோஷம் எங்கம்மாவுக்கு முக்கியம் என்றானா?

தாயே; லோகமாதா—என்ன கூத்து இதெல்லாம்?

ஒரு மாசமாய் அந்தப் பெண் மங்களத்தோடு படுவது போதாது என்று இது வேறு என்ன புதுசாய்?

எதுவும் பேசாமல் கண்களை மூடிக் கொண்டு, சரம் சரமாகக் கண்ணீர் வழிய சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்தவள்; ஆபீஸிலிருந்து சேஷன் வந்த பிறகே கண்களைத் திறந்தாள்.

ராமனைக் கூடத்தில் பார்த்ததும் சேஷனுக்கு விவரம் புரிந்து போனது.

"என்னடா இது" என்ற அம்மாவுக்கு பதில் கூறாமல் ரொம்ப நேரத்துக்கு தலையை குனிந்து கொண்டு உட்கார்ந்திருந்தான். அப்புறம் தொண்டை அடைக்கப் பேசினான்.

"மனசு ரொம்ப வேதனைப்பட்டுதும்மா. ருக்குகிட்ட தான் நிம்மதி கிடைச்சுதும்மா. என் நிலைமையப் புரிஞ்சுக்கோ... அப்பா கிட்டே பக்குவமா எடுத்துச் சொல்லி ஆகிற காரியத்தைப் பாரும்மா" என்று எப்படியோ திக்கித் திணறி கூறிவிட்டு விசித்து விசித்து அழுதான்.

"அவர் வரட்டும்... கலந்து பேசிட்டு, மேற்கொண்டு என்ன செய்யலாம்னு யோசிக்கலாம்" என்று சொல்லி முதலில் ராமனை அனுப்பிவிட்டு தனியாய் உட்கார்ந்து ஜெயம்மா யோசித்தாள். இனி பண்ணுவதற்கு எதுவும் இல்லை, சந்தி சிரிக்காமல் இருக்க வேண்டுமானால் செய்ய வேண்டுமானால் செய்ய வேண்டியது ஒன்றுதான் என்பது புரிய, இரவு கணவர் வீடு திரும்பியதும் பக்குவமாய் நிலைமையை எடுத்துச் சொன்னாள். ஆ, ஊ என்று கத்த விடாமல் நல்லவிதமாக சமாதானம் பண்ணினாள். "கத்தறதாலே ஆகப் போறது ஒண்ணும் இல்லே, ருக்குவுக்கு இப்போ மூணு மாசம், அதை ஞாபகம் வைச்சிக்கோங்கோ... இவன் அங்க போயிண்டு வந்துண்டு இருக்கறதுக்கு சாட்சி நிறையபேர் இருக்கா... தெய்வாதீனமாக மங்களத்துக்கு வலிப்பு வந்து அவளை அனுப்பிச்சாச்சு, இனிமே இரண்டாம் பேர் அறியாம ஒரு தாலிய கோவில்ல வைச்சி இவளுக்கு கட்டி, மாட்டுப் பெண்ணா ஏத்துக்கறதைத் தவிர நமக்கு வேறுவழி இல்லே... நடேசன் வாய் திறக்காமல் ஒப்புக்கொண்டார்.

அடுத்த முகூர்த்தத்திலேயே சேஷன் திருநீர்மலைக் கோவிலில் ருக்குவுக்கு தாலியை கட்டி அவளை தன் மனைவியாக்கிக் கொண்டான்.



'என்னடிம்மா இது! மூணு மாச பிள்ளைத்தாச்சிக்கு கல்யாணமா! கலி முத்திடுத்து'—என்று தெருக்காரர்கள் விவரம் அறிந்து கேலி பண்ணுவதற்கு முன் உடனடியாக பழைய மாம்பலத்துக்கு ஜாகையை நடேசன் மாற்றினார்.

சேஷனுக்கு இரண்டாவது கல்யாணம் ஆகிவிட்ட சேதி யார் மூலமாகவோ தெரிய வர 'இனிமே அவரைத் தொந்தரவு பண்ணறது நியாயம் இல்லே, நாம சொன்னதை அவா நம்பலை... அவா கண் முன்னாடி எனக்கு வலிப்பு வருவானேன், இத்தனை அவஸ்தைப் படுவானேன். எல்லாம் என் தலையெழுத்து, என் போறாத காலம்... இதோட எல்லாத்தையும் விட்டுடுங்கோ... நா பி.டி. படிக்கிறேன். டீச்சர் வேலைக்குப் போறேன். என் அளவுக்கு உங்களுக்கு பாரமா இல்லாம இருக்கேன்' என்று மங்களம் சொல்லிவிட புலம்பிக் கொண்டே பெற்றவர் அடங்கினார்.

கல்யாணமான எட்டாம் மாசம் ருக்குவுக்கு நீலா பிறந்தாள், மறு வருஷம் அன்னபூரணி. மூன்றும் வருஷம் சந்துரு.

சேஷனின் பலவீனங்களை நன்கு புரிந்து கொண்டு விதவிதமாக ருசியாய் சமைத்துப் போட்டு, அவனுடைய நாக்கு சபலத்தையும், இரவு இல்லை, பகல் இல்லை என்று எப்போது நினைத்து ஏங்கினாலும் அவன் உடம்பு சபலத்துக்கும் வெட்கமில்லாமல் தீனி போட்டு ருக்கு சமாளித்ததில் முதல் சில வருஷங்கள் போல தேன் குடித்த நரியாக போதையில் இருந்த சேஷன், மெதுவாக சுய உணர்வு அடைந்து, நிலைமையை புரிந்து கொள்ள முயற்சிப்பதற்குள்,

ருக்கு நன்றாக வேர் விட்டுக் கொண்டு, தன் கை ஓங்க ஸ்திரமாகி விட்டாள்.

# 9

‘ஆடுகிற மாட்டை ஆடி கற. பாடுகிற மாட்டைப் பாடி கற’ என்ற பழமொழியை நிருபிக்கும் தினுசில் முதல் ஐந்து வருஷங்களுக்கு சேஷனிடம் ரொம்ப பக்குவமாக பழகி அவனை வசமாய் தன் பிடிக்குள் ருக்கு இறுக்கிக்கொண்டது நிஜம்.

வார்த்தைக்கு வார்த்தை என்னன்னா என்னன்னா, என்றாள். ஈர உதடுகளுடன் சதா கவர்ச்சி பார்வை பார்த்தாள், குழைந்தாள், நெளிந்தாள், விவஸ்தை இல்லாமல் எந்த நேரத்தில் சேஷன் ‘வாடி’ என்றாலும் அதுவே தன் தலையாய கடமை என்பது போல போனாள்.

சேஷன் எதிரில் மாமியார், மாமனாரிடம் பட்டுக் கொள்ளாமல் இருந்தவள், அவன் தலை மறைந்ததும் ராட்சஸ சொருபத்தை எடுத்தாள். அதுவும் ஒரு சமயம் தன்னை சமையல்கார குட்டி என்று அலட்சியப்படுத்திய ஜெயம்மாவின் கண்ணில் விரலை விட்டு ஆட்டுவது தான் தன் இலட்சியம் என்பது போல நடந்து கொண்டாள்.

சேஷன் ஆபிஸுக்குப் போனதும், தன் இஷ்டத்துக்கு அப்பாவோடு வெளியில் திரிந்தாள். ஏன் என்று கேட்ட மாமியாரை எதிர்த்து வாயாடினாள். வீட்டில் குந்து மணி வேலை செய்யாமல் அத்தனையும் ஜெயம்மா தலையில் கட்டினாள்.

‘‘ஏண்டி இப்படி என் வயித்தெரிச்சலை கொட்டிக்கறே’’ என்று ஜெயம்மா ஆரம்பத்தில் கேட்ட போதெல்லாம், அலட்சியமாக பார்வை பார்த்து மௌனமாக நகர்ந்தாள். இல்லாவிட்டால் ‘உங்களுக்கு என்னைக் கண்டா பிடிக்கலை’’ நா எங்காத்துக்குப்



போறேன்’ என்று கண்ணீர் விட்டு மாமாலம் பண்ணினாள்.

ஏற்கனவே ஒரு மாட்டுப்பெண் வந்து பிறந்தகத்துக்கு போய்விட்டதால், இவளையும் அனுப்பினால் குத்தம் தங்கள்மேல் தான் விடியும் என்று இவள் இந்த வார்த்தையை சொன்னாலே ஜெயம்மா ‘நா இப்ப என்ன சொல்லிட்டேன்னு நீ கிளம்பறே?’ என்று அரண்டு சமாதானம் செய்யச்செய்ய ருக்கு உச்சாணிக்கு ஏறினாள்.

புருஷனோடு தனியாக இருக்கும் போது பல இரவுகள் புஸ் புஸ்ஸென்று மூச்சு விடுவாள், நீலி கண்ணீர் வடிப்பாள் தொட வரும் சேஷனிடமிருந்து ஒதுங்கிப் போவாள்.

‘‘என்ன ருக்கு?’’ என்று அவன் பத்துதடவை கேட்ட பிறகு ‘‘சொல்ல வேண்டாம், சொல்ல வேண்டாம்னு தான் பார்க்கறேன் முடியலையே ..ஏதுடா பிள்ளைத்தாச்சி பெண்ணைச்சேங்கற அக்கறை இல்லாம மங்கு மங்குனு உங்கம்மா வேலைவாங்கறா...இடுப்பை வலிக்கறது. வயித்தப் புடிச்சு இழுத்துக்கறது...ஸ்... அப்பாடி’’ – என்று புலம்புவாள்.

சேஷன் உருகிப் போவான். அம்மா மேல் ஆத்திரமாக வரும். இப்போது மனைவி நெருங்க விட மாட்டேன் என்கிறாளே என்ற ஆத்தாமையும் சேர்ந்து கொள்ள அம்மா மேல் கசப்பான கசப்பு எழும். அம்மாளிடம் கத்தும் அளவுக்கு துணிச்சல் இல்லையாதலால் நாலு நாளைக்கு அம்மாவோடு ஒரு வார்த்தை கூட பேசாமல் மௌனமாக இருந்து தன் கோபத்தை தீர்த்துக் கொள்வான்.

நடக்கும் நாடகத்தை ஜெயம்மாவால் நன்றாக புரிந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் பிள்ளைக்கும், ஊர் வாய்க்கும் பயந்து கடைசியில் எதற்கும் முதலில் தணிந்து போய் அவளாகவே விட்டுக் கொடுக்க ஆரம்பித்தாள்.

மூத்தவள் நீலா பிறந்த எட்டாம் மாசம் ருக்குவுக்கு அபார்ஷன் ஆனது. சொன்னாள் வெட்கம், இது நடந்து சரியாக பத்தாம் மாசம் அன்னம் ஜனித்தாள். சந்துருவுக்கும் அன்னத்துக்கும் இடையில் இரண்டு அபார்ஷன்கள். சந்துருவுக்குப் பிறகு முழுசாய் ஒன்று பிறந்து மூன்றாம் நாள் மண்டையைப் போட்டது. அப்புறம் மூன்று அரை குறைகள்... கணக்குப் போட்டுப் பார்த்தால், பிறந்தது அத்தனையும் இன்று உசிரோடு இருந்தால் பத்து தேறும்: இத்தனையும் வளர்க்க முடியாமல் சேஷன் விழி பிதுங்குவது நிச்சயம்.

கல்யாணமான மூன்றாம் வருஷம் மதியம் மூன்று மணி சுமாருக்கு நடேசன் ஒருநாள் மாரைப் பிடித்துக் கொண்டு வந்தார். டாக்டர் வந்து பார்த்து டாக்ஸியில் ஏற்றி ஜி. எச்சுக்குக் கொண்டு போவதற்குள் உசிர் பிரிந்துவிட்டது.

அதற்கு பிறகு ருக்குவின் நாட்டாண்மை இன்னும் அந்த வீட்டில் கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்தது.

“நாம எல்லாரும் இங்க இருக்கறப்போ கிராமத்துலே வீடு எதுக்கு?” என்று சதா நச்சரித்து வீட்டை விற்கப் பண்ணி, அந்த பணத்தை ஹோட்டல் வைத்து நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்ட அப்பாவிடம் லட்டு போலத் தூக்கிக் கொடுத்தான்.

ஹோட்டல் காபி க்ளப் ஆகி, மூணு நாலு வருஷத்தில் ஒன்றுமே இல்லாமல் தேய்ந்ததும், அது சேர்த்துவிட்ட கடனை அடைக்க நிலத்தை விற்க வேண்டி வந்தது.

மாப்பிள்ளையை ஒட்ட சுரண்டிய பிறகு யார் செய்த புண்ணியமோ, ஞானம் பிறக்க 'நா காசிக்குப் போறேன், அங்கே மடத்துக்கு வரவாளை கவனிச்சுண்டே என் கடைசி காலத்தை கழிச்சுடறேன்' என்று ஒரு வழியாய் ராமன் புறப்பட்டுப் போனான்.



பெண்டாட்டியும், மாமனாரும் இப்படி சேஷனைப் படுத்தினார்கள் என்றால் பெண்கள் இரண்டும் இன்னொரு ரகம்.

மூத்தவள் நீலா ஒன்பதாவதைத் தாண்டவில்லை. படிக்கமாட்டேன் என்று சண்டி பண்ணிக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். குதிர் மாதிரி வளர்ந்து விட்ட உடம்பையும், பார்க்க சகிக்காத முகத்தையும் கண்ணாடியில் பார்த்து பார்த்து மகிழ்வதோடு அம்மாவுக்குச் சரியாக அப்பாவை விரட்டுவது அவளுடைய தலையாய வேலைகளில் ஒன்று.

மூத்தவளுக்கு சற்றும் சளைத்தவளில்லை இரண்டாமவள். இவள் எட்டாவதை எட்டினாள். அவ்வளவுதான். அதற்குள் சினிமா, பத்திரிக்கைகள் மோகம் ஆளை ஆட்கொள்ள படிப்பை விட்டு விட்டாள்.

எந்தப் படம் ரிலீஸானாலும் முதல் இரண்டு நாட்களுக்குள் பார்த்து விட வேண்டும். இல்லாவிட்டால் தலை வெடித்துவிடும். பார்க்க மூத்தவளை விட இவள் கொஞ்சம் தேவலை. இதனால் என்றாவது ஒருநாள் பாரதிராஜா மூலம் தனக்கு நடிக்க சான்ஸ் கிடைக்கப் போகிறது என்ற கனவு காணும் அன்னம். சரியான வணங்கா முடி. குனிந்து நிமிர ஆகாது. அப்பாவை விரட்டுவதும் அம்மாவுக்காக பரிவதும் இவள் ரொம்ப ப்ரயத்தனப்பட்டு செய்யும் சில காரியங்களில் ஒன்று.

சந்துரு...

இவன் ஒருத்தன் மட்டும் இந்த குடும்பத்தில் எப்படியோ தப்பி பிறந்து விட்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

அடக்கமான குணம், சராசரிக்கு அதிகமான புத்தி. ஈவு இரக்கமுள்ள ஜீவன், மொத்தத்தில் நல்ல பிள்ளை.

ஜெயம்மா இருந்தவரைக்கும் அவளோடு அதிகம் அவன் ஒண்டுவது ருக்குவுக்குப் பிடிக்காது. 'அந்த

கிழத்துகிட்ட என்னடா பேச்சு? வா இங்க' என்று அவள் பிரிக்கப் பிரிக்க சந்துரு பாட்டி பக்கம் அதிகம் சாய்ந்தான்.

பாட்டியை சந்துருவுக்கு ரொம்ப பிடிக்கும். அன்பாக பேசுவாள், பரிவோடு பழகுவாள், பழங்கதையெல்லாம் சன்ன குரலில் கூறுவாள்.

அம்மாவும், அக்காக்களும் சினிமா, எக்ஸிபிஷன் என்று ஊர் சுற்றப் போய்விட்டால் இவன் சமையல் கட்டில் பாட்டியிடம் வந்து உட்கார்ந்துகொள்வான்.

பாட்டி தாத்தாவைப்பற்றிச் சொல்லுவாள்.

கிராமத்து நிலத்தில் வண்டி வண்டியாய் நெல் விளைந்ததை, கிராமத்து வீட்டுக் கொல்லையில் இருந்த தென்னைமரம், மாமரம் சாக்கு சாக்கா காய்த்ததை; ஊர் ஜனங்கள் தாத்தாவுக்கு கொடுத்த மரியாதையை, வக்கீலிடம் அடிக்கடி தாத்தா பாராட்டு பெற்றதை நீளமாக கதைப் போலச் சொல்லுவாள்.

எப்பவாவது 'அந்த பொண் வயித்தெரிச்சலை கொட்டிண்டோம் இல்லையா, அதான் இப்படி சீரழியறோம்'—என்பாள்,

'லட்சுமியாட்டம் வீடு தேடி வந்தவளை விரட்டி அடிச்சோம்—இப்ப பிரும்மராட்சஸிகிட்ட படறோம்'—என்பாள்.

'எந்த பெண் பாட்டி? எந்த லட்சுமி?'—என்றால் விவரம் எதுவும் சொல்லமாட்டாள்.

பேரனை தழுவிக்கொண்டு அழுவாள். ஆனால் நாட்கள் செல்லச்செல்ல மஹாலட்சுமி யார், பிரும்மராட்சஸி என்று யாரை பாட்டி குறிப்பிடுகிறாள் என்ற விவரங்களெல்லாம் நன்றாக புரியத்தொடங்கியதும் தலை குனிந்து அழும் பாட்டியை செல்லமாகக் கட்டி சமாதானப்படுத்தி 'எதுக்கும் நீ கவலைப்படாதே பாட்டி...



நா பெரியவனானதும் நாம இரண்டுபேரும் தனியா போயிடலாம். ஆள் போட்டு உன்னை ஜம்முனு கவனிச்சுக்கறேன்' என்பான்.

அந்த பாட்டியும் போனவருஷம் போய்விட்டாள்.

இப்போது சேஷன், ருக்கு, இவர்கள் மூவர் அவ்வளவு தான்.

அரசாங்க வேலை, திறமை இருக்கிறதோ இல்லையோ வேலையில் சேர்ந்துவிட்டவனை லேசில் விலக்கமுடியாது என்பதோடு சீனியாரிடியை வைத்து வயசு ஏற ஏற ஆமை வேகத்தில் பதவி உயர்வும் தானே வந்து விடும் அதன்படி சேஷன் இப்போது ஹெட் கிளார்க் கிட்டத்தட்ட எட்டு நூறு சம்பளம்... ஆயிரம் குறைகளோடு எப்படியோ உன்பாடு என்பாடு என்று வாழ்க்கை ஓடுகிறது.

இந்த சமயத்தில் தான் மங்களம் வந்திருக்கிறாள்.

இருபது வருஷங்களுக்கும் மேலாக இருக்கிறாளா செத்தாளா என்று கவலைப்படாத மங்களம்.

அவளா?

அந்த மங்களமா?

எதற்கு வந்திருக்கிறாள்?

நிமிர்ந்து எதிரில் நின்றவளை பார்க்கமுடியாதபடி சிறுகுடல் முடிச்சு போட்டுக்கொள்ள சேஷன் ரொம்ப... பயந்து போனார்.

## 10

"யா...யாரு?" —சேஷனின் குரல் கிசுகிசுப்பாக இருந்தது.

"நா... நாதான் மங்களம் என்னைத் தெரியலையா?" கொட்டி விடட்டுமா என்று கேட்ட கண்ணீரை மிகுந்த சிரமத்துடன் அடக்கிக்கொண்டு அவள் பேசுவது புரிந்தது.

எதுவும் பேசாமல் சேஷன் பிரமை பிடித்தமாதிரி நின்ருர்.

தலையைத் திருப்பி கூடத்தைப் பார்த்தார்.

பார்வை தேடினவரைக்கும் ருக்குவை காணவில்லை.

குளிக்கப் போய்விட்டாளா!

அப்பாடி, இப்போதைக்குப் பிழைத்தேன்... அவள் வருவதற்குள் இவளை அனுப்பிவிடலாம்.

ஜன்னல் விளிம்பில் அன்னம், கையில் புத்தகம், அந்த ஓரமாய் கண்ணடிக்கெதிரில் நீலா... பக்கத்தில் டிரான்ஸிஸ்டர். பெரிசாய் அலறும் விவதபாரதி.

அருகில் நிற்கும் சந்துருவை பரிதாபமாக பார்த்தார். யார் கிட்டயும் எதுவும் சொல்லிவிடாதடா என்று கெஞ்சும் பார்வை ஒன்றை பார்த்துவிட்டு ஓரடி முன்னல் வந்து ரொம்ப மெதுவாக "எங்கே வந்தே? இத்தனை வருஷம் கழிச்சு ஏன் வந்தே?" என்ருர்.

அந்த குரலில் தெரிந்த எரிச்சலை புரிந்துகொள்ள முடிந்ததால் மங்களம் தலையை குனிந்துகொண்டாள்.

"உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்..."

"எதுக்கு? பேசறதுக்கு என்ன இருக்கு?"—

மங்களத்தின் கை புடவை தலைப்பைப் பிடித்து வாய்க்குக் கொண்டு போனது.



"அ... அப்பா தவறி போயிட்டார். இரண்டு மாச மாச்சு" குரல் செம்மி, கண்கள் கலங்கிப் போனதில் கன்னத்தில் நீர் கோடு போட்டது.

"சரி....இப்ப அது எனக்குத் தெரிஞ்சு என்ன ஆகணும்? மடமடனு வந்த விஷயத்தைச் சொல்லிட்டு நீ கிளம்பு. அவ வந்தான்னு வம்பு...."

மங்களம் கண்களைத் துடைத்துக் கொண்டாள். சந்துருவை நிமிர்ந்து பார்த்துவிட்டு சேஷனை பரிதவிப் புடன் ஏறிட்டாள்.

"இத்தனை வருஷம் கழிச்சு உங்களை தேடிண்டு வந்திருக்கேன். எப்படி இருக்கே, எப்படி வந்தேனு ஒரு வார்த்தை கேட்க மாட்டேங்கறேளே!"

சேஷன் உட்பக்கம் பார்த்துவிட்டு பெருமூச்சு விட்டார்.

ரொம்ப படபடப்பாக இருந்தது. ருக்கு வந்து விட்டால் நிலைமை ரசாபாசமாகிவிடுமே என்று பயமாக இருந்தது.

கழுத்தில் ஊறிய வியர்வையை துடைத்துக் கொண்டார்.

"நீங்க என்னை வேண்டாம்னு தள்ளி வைச்சு இந்த இருபத்திரண்டு வருஷமா நா உங்க வாழ்க்கைலே குறுக் கிட்டதில்லே. எங்க இருந்தாலும் நீங்க நன்ன இருக்கணும் சந்தோஷமா வாழணும்னு ப்ரார்த்தனை பண்ணிண்டு நா உண்டு என் வேலை உண்டுனு இருந்தேன். உங்ககிட்ட பேசறேன்னு கிளம்பின அப்பா, தம்பியைக் கூட கூடாதுனு தடுத்துட்டேன். இப்ப நானு வர வேண்டிய நிர்பந்தம் வந்தவளை வானுசொல்லுவேள்னு எதிர்பார்த்-தேன். அப்பா செத்து போயிட்டதைக்கேட்டதும் ஒரு வார்த்தை ஆறுதலா சொல்வேள்னு எதிர் பார்த்தேன்."

அடங்கி இருந்த கண்ணீர் மீண்டும் பெருக மங்களம் சின்னதாக விசும்ப' முற்பட்டாள்.

இந்த பேச்சும், விசும்பலும் உள் அறையில் கேட்டிருக்கவேண்டும்.

ட்ரான்ஸிஸ்டரை சின்னதாக்கிவிட்டு வராந்தாவில் எட்டி பார்த்த நீலா திடுக்கிட்டுப் போனாள்.

யார் இந்த மாமி?

ஏன் அழுகிறாள்?

அப்பா ஏன் வெளுத்துப் போய் நிற்கிறார்?

"யார்டா இது சந்துரு?"

பார்த்த காட்சியும் கேட்ட பேச்சுக்களும் ஒருவித அதிர்ச்சியை கொடுக்க எதுவும் பேசப் பிடிக்காமல் சந்துரு மௌனம் சாதித்தான்.

"யார்டா? கேக்கறது காதுலே விழலே?...யார்ப்பா இது? ஏன் மாமி, நீங்க யாரு? எதுக்காக காலங்கார்த்தால எங்காத்துக்கு வந்து நின்னுண்டு அழறேள்?"

யாரும் எந்த பதிலும் சொல்லாமல் இருக்க 'அம்மா அம்மா' என்று கத்திக் கொண்டே நீலா உள்ளே போனாள்.

"சுருக்க வாம்மா...இங்க என்னமோ நாடகம் நடக்கறது...சுருக்க வாயேன்..." கதவை தட்டி அவள் குளிக்கும் அம்மாவை அழைப்பது வாசலில் தெளிவாக கேட்க, சேஷன் கால் மாறி கால் வைத்து தவித்தார்.

"நீ எதுக்காக வந்திருக்கேன்னு எனக்குத் தெரிய வாண்டாம்...போயிடேன். தயவு செஞ்சி அவ வர்றத்துக்குள்ள போயிடேன், அவ வந்தா நா சொல்லிக் கொடுத்து



தான் நீ இங்க வந்திருக்கேனு சண்டை பிடிப்பா உடனே போயிடேன்..."

அப்பா துணிச்சல் இல்லாதவர் என்பது சந்துருவுக்குத் தெரிந்தது தான். ஆனாலும் இருபத்தி இரண்டு வருஷங்களுக்குப் பிறகு விடு தேடி வந்து எதையோ சொல்ல தவிப்பவளின் வேதனை புரியாமல் இப்பவும் மனைவிக்கு பயந்து, போய் விடேன் என்று கெஞ்சுவது மஹா எரிச்சலை உண்டு பண்ண திரும்பி அப்பாவைப் பார்த்தான்.

"என்னப்பா நீங்க; என்னமோ முக்கியமா சொல்லணும்னு படியேறி இத்தனை வருஷம் கழிச்சு வந்திருக்கறவரை பேசவிடாம, எதுக்காக இப்படி பயந்து சாகறேள்? அவரை பேச விடுங்களேன்ப்பா"

சந்துரு பேசி முடிப்பதற்குள் ஈர உடம்பில் ரவிக்கை மாட்டி புடவையை சுற்றிக் கொண்டு நீலா போட்ட கூச்சலில் என்னவோ ஏதோ என்று ருக்கு பதறிக் கொண்டு வந்து விட்டாள்.

"என்னடா... யார் வந்திருக்கா? எதுக்காக இந்த நீலா இப்படி ஆர்ப்பாட்டம் பண்ணா? வாசல்லே யாரோட பேசிண்டு நிக்கறேள்?"

பேசிக் கொண்டே வேகமாக வந்தவள் நின்றாள், கதவருகில் நின்றிருந்த மங்களத்தை அழுத்தமாக பார்த்தாள்.

புருவங்கள் உயரே போக, கண்கள் இடுங்க "யார் நீங்க?" என்றாள்.

சேஷன் தான் யார் என்பதைச் சொல்லுவார் என்று எதிர்பார்ப்பது போல மௌனமாய் நின்ற மங்களம் அவர் வாயைத் திறக்காது போகவே "மங்களம்" என்றாள் மெல்ல...

"யா...யாரு? மங்களமா? எந்த மங் .." கேள்வியை முடிக்குமுன் வந்திருப்பது யார் என்று புரிந்துவிட சட்டென்று குரலை உயர்த்தி "எதுக்காக இங்க வந்தே? உன்னை யார் வரச் சொன்னா? நாங்க இங்க இருக்கறதை உனக்கு யார் சொன்னா?" என்று ஆவேசத்தோடு கேட்டாள்.

இத்தனை மோசமான வரவேற்பை எதிர்பார்க்காத தினுசில் திடுக்கிட்டு போன மங்களம் தலையைக் குனிந்து கொண்டு பேசினாள்.

"யாரும் வரச் சொல்லலை, நானாதான் வந்தேன். இவர் ஆபீஸ்ல வேலை பார்க்கற ராகவாச்சாரி மாமாவோட தங்கை என்னோட தான் ஸ்கூல்ல வேலை பண்ணினா. அவர் மூலமா விலாசத்தைத் தெரிஞ்சுண்டு வந்தேன்."

"ராகவாச்சாரி தங்கை உன்னோட வேலை பார்க்கறாளா? அது எத்தனை வருஷமா?"

"பதினைஞ்சு வருஷமா?"

"அப்ப இத்தனை வருஷமா நாங்க எங்க இருக்கோம் என்ன பண்றோம்ங்கற விவரம் எல்லாம் உனக்குத் தெரியுமா?"—

மங்களம் தெரியும் என்று தலையை ஆட்டினாள்.

"இத்தனை வருஷமா வராதவ இன்னக்கு ஏன் வந்தே!. இவ நன்னா இருக்காளே இவ தலைல கல்லைத் தூக்கி போடலாம்னு வந்தியா? ம்?"

"என் அச்சானமா பேசறேள்? இவர் உங்களோட சந்தோஷமா வாழறதை கெடுக்கக் கூடாதுனுதான் இத்தனை நாளா நா வந்து பாக்கலை"

"அப்ப இப்ப மட்டும்"?—



"இப்பவும் உங்க நிம்மதியை கெடுக்கணும்னு நா வரலை. வர வேண்டிய நிர்பந்தம் அப்பா இரண்டு மாசம் முன்னால செத்துப் போயிட்டார்."

மங்களம் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"அதுக்கு எங்களை என்ன பண்ணச் சொல்றே?"

"என் ஒரே தம்பியும் நைரோபிலே வேலைகிடைச்சிருக்குனு போயி மூணு வருஷமாச்சே...அப்பா செத்ததுக்கு கூட அவன் வரலை...எங்க தொடர்பு வேண்டாம்னு இருக்கான் ...இப்போ... இப்போ..."

"இப்போ?"

"அப்பா போனதுலேந்து ஒண்டிக் கட்டையா மனுஷா யாரும் இல்லாம நா ரொம்ப கஷ்டப்படறேன். தலைவலினு படுத்துண்டா ஏன்னு கேட்க மனுஷா இல்லாம ரொம்ப அவஸ்தைப்படறேன்..."

மங்களம் என்ன சொல்ல வருகிறாள் என்பது புரியாமல் விழித்த ருக்கு "அதுக்கு?" என்ற உறுமலாய் கேட்க, மங்களம் கொஞ்சம் தயங்கினாள்.

"இருபத்திரண்டு வருஷம் முன்னால முத தடவையா எனக்கு வலிப்பு வந்தது. உடம்பு பலஹீனமா இருந்ததால் வந்துதனு டாக்டர் மருந்து கொடுத்ததுலே அது சரியா போயிடுத்து. இத்தனை வருஷமா நா சாதாரணமாகதான் இருந்தேன்...ஆனா...இப்போ..."

"இப்போ?"—

மங்களம் விசும்ப முற்பட்டாள். விசும்பல் நிற்காமலேயே பேசினாள்.

‘‘இப்போ அப்பா போயிட்ட இந்த இரண்டு மாசத்துலே நாலஞ்சு தரம் வலிப்பு வந்துடுத்து. டாக்டரைப் பார்த்தேன். மனசும் உடம்பும் அதிர்ச்சி அடைஞ்சு பலஹீனமா இருக்கு, அதான் திரும்ப வலிப்பு வரது. ரெஸ்டா இரு...தனியா இருக்காதே. வேணுங்கற மனுஷாளோடு நிம்மதியா இருனு சொன்னார், அதான் நா...உங்களோட...’’

‘‘அட, நாசமாப் போறவளே! இப்படிச் சுத்தி அப்படி சுத்தி கடைசிலே என் தலேல கை வைக்கத்தானே நீ வந்திருக்கே! பாவி நாசமா போவே...புருஷன், குழந்தைகளோட நா நன்னாயிருக்கறது தாங்காம அத்தனையும் கெடுக்க வந்துட்டியா! ஆங்காரம் புடிச்ச மூதேவி. மொதல்லே வெளிலே போ...என்ன தைரியம் இருந்தா எங்காத்துபடி ஏறி வந்து உங்களோட நா இருக்கேங்கற வார்த்தையைச் சொல்லுவே ஒழி—முதல்லே இங்கேயிருந்து ஒழி—பார்த்துண்டு நிக்கறேளே...பாவி' மனுஷா இவளை துரத்தி அடிங்கோ'...திடுமென வயிற்றில் அடித்துக்கொண்டு ஆக்ரோஷமாய் ருக்கு கத்த, மங்களம் நடுங்கிப் போனாள்.

‘‘நா ஒண்ணும் தப்பா சொல்லிடலியே...என் மனசுலே சத்தியமா வேற எந்த எண்ணமும் கிடையாது. என்னை நம்புங்கோ...எங்கிட்ட இப்ப பதினாயிரம் ரூபா போல இருக்கு! அதை உங்ககிட்ட கொடுத்திட்டு, ஒரு பக்கமா நா பாட்டுக்கு இந்தாத்துலே இருக்கலாமானு கேட்கத்தான் வந்தேன். சத்தியமா என் மனசுலே வேற எந்த ஆசையும் இல்லே....இந்தாத்துலே நா உங்களோட சேர்ந்து இருக்க பிடிக்காட்டாலும் உங்க கண் பார்வை படற இடத்துலே ஒரு போர்ஷன் எடுத்துண்டு நா இருக்க நீங்க அனுமதிச்சா கூட போதும்...தனியா இருக்க எனக்கு பயமா இருக்கு...சமையல் கட்டுலேயோ, கிணத்தடிலேயோ விழுந்துட்டா வலிப்பு வந்து அனாதைப்



பொணமா, நாதியில்லாம நாறிப் போயிடுவேனோன்னு பயமா இருக்கு...இந்த வலிப்பால ஸ்கூல் வேலைய கூட விட்டுட்டேன். ஒரு தரம் ஸ்கூல்லே வந்து பசங்க பயந்து போனதாலே, சரி, நம்ம வியாதி இனி நம்ம கூடவே இருக்கட்டும்னு வேலைய விட்டுட்டேன். நீங்க தான் எனக்கு எல்லாம்...உங்க அத்தனை பேர் நிழலையும் பார்த்துண்டு நா சந்தோஷமா இருந்துடுவேன். எனக்கு வேற ஒண்ணும் வாண்டாம்...சத்தியமா வாண்டாம்...’’

தன் பேச்சை ருக்கு நம்ப வேண்டுமே என்கிற ஆதங்கத்தோடு பேசிய மங்களம் இப்போது நம்புவாளோ மாட்டாளோ என்ற பயத்தில் பெரிசாக அழ ஆரம்பிக்க ‘‘ருக்கு...இவளைப் பாத்தா பாவமா இருக்கு ருக்கு’’ என்று என்றுமில்லாத அதிசயமாய் லேசாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சேஷன் துவங்க—

அவ்வளவு தான்.

ருக்கு பத்ரகாளியானாள்.

‘‘ஓஹோ—நீங்க தூண்டிவிட்டுதான் இவ இங்க வந்திருக்காளா? நினைச்சேன். அப்பவே நினைச்சேன். என்னடாது இத்தனை வருஷமா இல்லாம இவ திடீர்னு எங்கேயிருந்து முளைச்சா ஏன் முளைச்சானு நினைச்சேன்—உங்களைத் தெரியாதா, இல்ல உங்க கேடு கெட்ட உடம்பு ஆசையை தான் எனக்குத் தெரியாதா? தூணுக்கு புடவை கட்டி விட்டா கூட ஹிஹினு இளிச்சுண்டு நிக்கிற ஜாதி தானே நீங்க! எனக்கு இப்ப வயசாயிடுத்து. ஏழெட்டு பெத்து அபார்ஷன் ஆனதுலே உடம்பு கட்டுவிட்டு போச்சு. ஆனா இவ? அன்னிக்கு பார்த்த மேனிக்கு டய்ன்னு இருக்கா சேப்பா சின்ன பெண்ணாட்டம் இருக்கா. யாருமில்லாத அனாதைனு சேர்த்துண்டுட்டு மெதுவா என்னையும், என் குழந்தைகளையும் அம்போனு நடுத்-தெருலே விடறது தானே உங்க ப்ளான்? மாட்டேன்.... நடக்க விட மாட்டேன். துரத்து இவளை உடனே

தூக்கு... நீலா, அன்னம், அவ கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளிட்டு வாங்கோடி. அவ''

நாராசமாய் கத்தின ருக்கு சட்டென்று நிறுத்தினாள். எதிரில் நின்ற மங்களத்தை பார்த்து ''ஐயோ இவளைப் பாருங்கோ'' என்று கூவினாள்.

மங்களத்தின் கைகால்கள் உதறத் துவங்கி, பலமாக விலுக் விலுக்கென்று இழுக்க ஆரம்பித்தன. பட்டென்று சரிந்து கீழே விழுந்தவளின் வாயில் நுரை, கண்கள் செருகி, உடம்பு விரைத்தது.

வலிப்பு...

''அட நாசமாப்போற கடங்காரி! வலிப்பு வந்துவிழ உனக்கு வேற இடம் கிடைக்கலையா?''—

அம்மாவின் கூக்குரலை லட்சியம் பண்ணாமல் சந்துரு மங்களத்தின் அருகில் ஓடினான்.

அந்த விரைப்பையும், உலுக்கலையும், நுரையையும் பார்த்து அதிர்ந்துபோய் நின்றவன், ஒரே கணத்தில் தன்னை சுதாரித்துக்கொண்டு உள்ளே ஓடினான்.

இரும்பு...ஏதாவது இரும்பு சாமான் வேண்டுமே!

சாவி_சங்கிலி...ஐயோ...ஒன்றையும் காணவில்லையே!

சமையல் கட்டுக்குள் எட்டிப் பார்த்தவன் கண்களில் இரும்பு இடுக்கிவிழ அதை தூக்கிக்கொண்டு வந்து மங்களத்தின் கை விரல்களைப் பிரித்து வைத்தான்.

மீண்டும் உள்ளே ஓடி ஒரு டம்ளரில் பானைத் தண்ணீரை எடுத்து வந்து முகத்தில் அறைந்தான்.

ஐந்து நிமிஷங்களில் மங்களம் அடங்கினாள். ஹ்ருதயம் மளுக் மளுக்கென்று ஏகமாய் துள்ள குனிந்து



பக்கத்தில் உட்கார்ந்து மடியில் அவள் தலையை எடுத்து வைத்துக் கொண்டான்.

வேஷ்டி நுனியால் வாயில் வழிந்த நுரையைத் துடைத்தான்.

விசிறி எறிந்திருந்த புத்தகத்தில் ஒன்றை எடுத்து மெல்ல விசிறினான்.

''டேய்— படுபாவி... அவகிட்ட உனக்கு என்னடா வேலை? எழுந்து வாடா... வியாதிக்காரி தலைய மடில வைச்சுக்காதடா... சந்துரு...''

அம்மாவின் கத்தலை சந்துரு காதில் வாங்கவில்லை.

மகன் மீது தன் நினைவின்றி படுத்திருக்கும் மங்களத்தை உற்று பார்க்கையில் தொண்டையில் என்னமோ பந்தாக அடைத்தது.

''மஹா உத்தமிடா அவ... மகாலட்சுமி மாதிரி வீட்டுக்கு வந்த பெண்ணை விரட்டி அடிச்சதுக்கு நா இப்ப அனுபவிக்கறேன்டா''

''தொட்டு தாலி கட்டினதோட சரி; அப்புறம் கடுகத்தனை சுகம்கூட இவன்கிட்ட அவ அனுபவிக்கலை... ஒரு க்ஷணம்கூட பொண்டாட்டியா இவனோட வாழலை. ஆனாலும் மஞ்சள் பூசிண்டு, தொங்கத் தொங்க தாலி கட்டிண்டு, எங்கேயிருந்தாலும் அவர் நன்னா இருக்கட்டும்னு பிராத்திச்சுண்டு வாழறாளே, அவ மஹா உத்தமிடா...''

அடிக்கடி பாட்டி முணுமுணுப்பாக பேசிய வார்த்தைகள் காதில் மோத விசுறுவதை நிறுத்தாமல் சந்துரு மங்களத்தையே பார்த்தான்.

என் புருஷன் எனக்குதான் சொந்தம் என்ற நியாயத்தை எடுத்துச்சொல்லி அடித்து வாதாடத்

தெரியாவிட்டாலும்; கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று அவன் சௌக்கியத்துக்காக ஏங்கி, பிரார்த்தித்து வாழ்ந்த, வாழும், உத்தமி...

"நா சொல்லச்சொல்ல அவன் அப்படியே உட்கார்ந்துண்டு இருக்கான், நீங்களும் சும்மா இருந்தா என்ன அர்த்தம்?"—

மனைவி விரட்ட, கிட்ட வந்து "எழுந்திரு சந்துரு" என்ற அப்பாவை சந்துரு ஏறிட்டான்.

சட்டென்று மனசு ரொம்ப கசந்துபோனது. த்தூ— இவரும் ஒரு ஆண், தனக்கு இன்னதுதான் வேண்டும், வேண்டாம் என்பதை வாயைத் திறந்து பேச ஆதிநாளிலிருந்தே பயப்படும் இந்த மனுஷன் ஒரு ஆண்! அன்றைக்குதான் பேசாமல் இருந்துவிட்டார். சரி இன்றைக்குமா? 'எனக்கு யாரும் இல்லை, உங்களை விட்டால் கதி யாரும் இல்லை' என்று சரணாகதி அடைந்து விட்ட இந்த நிமிஷத்தில்கூட 'அவ இருக்கட்டும் ருக்கு' என்று அடித்து பேச தைரியம் இல்லாத கோழை...

"என்னடா விளையாடறியா? எழுந்திருடா..." —குனிந்து கையைப்பற்றி ருக்கு அவனை இழுக்க, சந்துரு அடிக்குரலில் 'விடு' என்று உறுமினான்.

ருக்கு தன்னைப்பெற்ற அம்மா என்ற நினைப்பு அந்த கணத்தில் அவனுக்கு எரிச்சலைத் தந்தது.

எத்தனை அசிங்கமாக பேசிவிட்டாள்!

பெற்ற குழந்தைகள் முன்னால் தாலிகட்டியவரைப் பார்த்து என்ன வார்த்தைகளைச் சொல்லிவிட்டாள்!

இருபத்திரண்டு வருஷங்கள் வாழ்ந்து மூன்று குழந்தைகளைப் பெத்துவிட்ட புருஷனை பார்த்து இப்படி இந்த வயசில் அசிங்கமாய் பேசவேண்டும் என்றால் மனசுக்குள் இவளுக்கும் நிறைய பயம் இருக்கிறதா? என்ன பேசுகிறோம் என்று யோசிக்காமல்



கத்தும் அளவுக்கு உள்ளுக்குள் பயமும், புருஷன் விட்டு விட்டு போய்விட்டால் என்ன செய்வது என்ற கோழைத்தனம் இருக்கின்றனவா?

வாயாடலும், கத்தலும், விரட்டலும் வெளிக்குத்தானா?

தான் வாழும் வாழ்க்கைக்கு பங்கம் வந்துவிடப் போகிறதே என்ற நிலை உண்டானதும், உள்ளுக்குள் பதுங்கி இருக்கும் கோழைத்தனம், கையாலாகாத்தனம் சீறிக்கொண்டு வெளியே வருகின்றனவா?

த்தூத் தேறி...

இவர்கள் எல்லாம் மனுஷர்களா?

கோழைகளாக இருந்தாலும், தங்களை தைரியப் படுத்திக் கொள்ள இயலாமல், விரும்பாமல், அதற்கு இன்னொருத்தரை பலிகொடுத்து, தங்கள் சுகத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ளும் சுயநலவாதிகள்...

த்தூத் தேறி...

"ம்மா" என்ற முனகலுடன் மங்களம் கண்களைத் திறந்தாள்.

அந்த முகமும், பரிதாபமான பார்வையும் நெஞ்சை பிராண்ட சந்துரு அப்படியே உட்கார்ந்திருந்தான்.

மங்களம் மெல்ல எழுந்து அமர்ந்தாள்.

திருதிருவென்று விழித்தாள்.

நிலைமை புரிந்துவிட்ட மாதிரி முட்டிக்காலில் முகத்தைப் பதித்துக்கொண்டு சன்னமாக விசும்பினாள்.

அந்த விசும்பல், அந்த அவலம் -

"அவ உத்தமிடா சந்துரு... மஹா உத்தமி"—

இவளும் கோழைதான்—ஆனால் பாட்டி சொன்னது போல நல்லவள். இதுவரைக்கும் தன்னை வருத்திக் கொண்டிருக்கிறாளே தவிரவும் வேறு யாருக்கும் கடுகத்தனைகூட கஷ்டம் கொடுக்காதவள், சுயநலமில்லாதவள். தன் சுகத்துக்காக அநியாயமாய் இன்னொருத்தரை பலிவாங்காதவள்...

ஏற்கனவே கோழை. இப்போது உடம்பும் சேர்ந்து கொள்ள ஒரு தூண் இன்றி, பிடித்துக் கொள்ள ஒரு பிடிமானமும் இல்லாமல் அல்லல் படும் உத்தமமான மனுஷி... இவளுக்கு இனி யார்? யார் துணை?

ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்ட சந்துரு நிமிர்ந்தான். தன்னைச் சுற்றி ஒரு பார்வை பார்த்தான். பின், அழும் மங்களத்தின் முதுகில் கையை வைத்து மெதுவாக, ரொம்ப மெதுவாக, பெரிம்மா...'' என்று அழைத்தான்.

''எழுந்திருங்கோ பெரிம்மா.. எனக்கு யாரும் இல்லேன்னு குமுறிண்டு அழாம கண்ணைத்துடைச்சிண்டு எழுந்திருங்கோ உங்களுக்கு நா இருக்கேன் பெரிம்மா... உங்க பிள்ளையா, உங்களை தாங்கிக்கற தூணா ஆயுசுபர்யந்தம் இனிமே நா இருக்கேன். எழுந்திருங்கோ.. எங்கப்பா உங்களுக்கு தாலி கட்டிட்டார்ங்கற ஒரே காரணத்துக்காக புருஷனோட சுகத்துக்கு பிரார்த்திச்சுண்டு பதிவிரதையா உங்களால இருபத்திரண்டு வருஷம் வாழ முடியும்னா, சத்தியமா என்னாலயும் உங்க பிள்ளையா உங்களுக்கு அன்பு கொடுக்க முடியும்... இத்தனை வருஷமா எங்கப்பாவையே ஆம்படையானா நினைச்சுண்டு நீங்க வாழ்ந்த வாழ்க்கை நிஜம்னா அவருக்கு பிள்ளையா பிறந்துட்ட நா, உங்களுக்கும் பிள்ளை தான். எழுந்திருங்கோ பெரிம்மா...இனிமே நா இருக்கேன் உங்களுக்கு. யாரைப் பத்தியும் எதைப் பத்தியும் கவலைப்படாம நீங்க தைரியமா இருக்கலாம்...வாங்கோ... நாம நம்பாத்துக்குப் போலாம்.''



அழும் முகத்தை சந்துரு நிமிர்த்துகிறான்.

''டேய்'' என்று பெரிசாய் கத்துகிறாள் ருக்கு.

என்ன செய்வது என்று புரியாமல் சேஷன் விழிக்கிறார்.

நீலாவும், அன்னமும் திறந்த வாய் மூடாமல் பிரமித்து நிற்கின்றனர்.

அழுகையை நிறுத்திவிட்டு கண்களை விரிக்கும் மங்களத்தின் கையைப் பற்றி அவள் எழுந்திருக்க உதவும் சந்துருவுக்கு திடுமென்று ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. தக்க தருணத்தில், துணிச்சலோடு சரியான முடிவு எடுக்கத் தூண்டிய தன் மனபலத்தை தன் தெளிவான சிந்தனையை நினைக்கையில் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

முடிந்தது

என் குறிப்பு:—கோழைகள்—வெறும் கதையல்ல.

சேஷன் ருக்கு மங்களம் ரத்தமும் சதையுமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பத்தாம் அத்தியாயம் கடைசி பக்கம் வரை, சந்துரு பெரியம்மாவுக்கு ஆதரவாகப் புறப்படும் இடம் வரை நிஜமாக ஒரு இடத்தில் இந்த கதை நடந்து கொண்டிருக்கிறது. துரதிருஷ்டவசமாக அந்த வீட்டில் இன்னும் ஒரு தெளிவான முடிவு உருவாகவில்லை. மங்களம் அனாதையாக தவிக்க, அவள் அவலம் இன்னும் யார் நெஞ்சையும் தொடவில்லை. இந்த கதையை படிக்கும் சந்தர்ப்பம் எழுந்தால் அந்த வீட்டு குழந்தைகளோ சேஷனோ, ஏன் ருக்குவோ கூட மனசு மாற மாட்டார்களா என்ற நம்பிக்கை எனக்குள் இன்னும் சின்னதாக பளபளத்துக் கொண்டுதான் இருக்கிறது.

**சிவசங்கரி**